THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 8th September 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker, THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : இன்றைய தினம் தொழில் துறை அமைச்சர் ஸ்ரீ ஆர். வெங்கட்டராமனும், ரெவின்யூ அமைச்சர் ஸ்ரீ எம். ஏ. மாணிக்க வேலு அவர்களும் சபையில் இல்லை. ஆதலால் அவர்களுடைய கேள்விகளை நாளைக்கு எடுத்துக்கொள்ளுகிறேன். அவற்றுக்குப் பதிலாக இன்றைய தினம் 20 கேள்விகள் கூடச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்போது கேள்வி 76-க்குப் பதில் அளிக்கப்படும்.

Lady clerks in Government Departments

* 76 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government propose to abolish the system of posting lady clerks or officers along with men clerks and post ladies alone in some sections of the Secretariat, Board of Revenue, Collectors' offices and other offices of Heads of Departments?

THE HON. SRI C. SUBRAMANIAM : The answer is in the negative.

SRI S. LAZAR : கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இப்போது எவ்வாறு கோ எஜுகேஷன் கொள்கை தவிர்க்கப்படுகிறதோ அம்மாதிரி சர்க்கார் நிலையங்களிலும் ஆண் குமாஸ்தாக்களும், பெண் குமாஸ்தாக்களும் சேர்ந்து வேலை செய்வது தவிர்க்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் தம் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறார் ; அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது.

SRI K. VINAYAKAM : Is it not a fact, Sir, that the presence of the very lady clerks in the office accelerates good work and very efficient work is turned out due to the presence of these clerks?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is a leading question.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister whether there is any inconvenience felt in the present system of posting lady clerks along with men clerks?

THE HON. SRI C. SUBRAMANIAM : I have not heard of any complaints about it.

SRI K. ANBAZHAGAN : சிற்சில இடங்களில் பெண் குமாஸ்தாக்கள் நல்ல உடை உடுத்திக்கொண்டு வராத காரணத்தால் அருவருக்கத்தக்க சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதாகப் புகார்கள் வந்திருக்கின்றனவா ? குறிப்பாக கன்னிமாரா லைப்ரரியைப் பற்றி வந்திருக்கிறதா ?

[8th September 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : இங்கே செக்ரடேரியட், போர்டு ஆப் ரெவின்யூ, கலெக்டர்ஸ் ஆபிஸ், இலாகா தலைமைக் காரியாலயங்கள் முதலியவற்றைப் பற்றிதான் கேள்வி. மேலும் எனக்கு எங்கிருந்தும் இதுவரை புகார் வரவில்லை.

Police Dogs

* 77 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958 மார்ச் மாதத்தில் வட ஆற்காடு ஜில்லாவில், வேலூர், குடியாத்தம் நகரங்களுக்கு திருடு கண்டுபிடிப்பதற்காக போலீஸ் நாய்கள் அனுப்பிவைக்கப்பட்டனவா ?

(ஆ) அந்த நகரங்களில் திருடுபோன பொருள்களின் மதிப்பு எவ்வளவு ?

(இ) திருடுபோன பொருள்கள் யாவும் கண்டுபிடிக்கப்பட்டனவா ? திருடர்களும் கண்டு பிடிக்கப்பட்டனரா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) Rs. 14,400 in all.

(c) Properties worth Rs. 10,200 relating to the case of theft in Vellore have been recovered and the accused has been apprehended and convicted. There has been no recovery of property in the theft case at Gudiyatham as no clue is available.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister what principles the Government are following in the matter of sending these police dogs and is it the policy of the Government to send these dogs to aid investigation on application by the affected parties on payment of any money or not?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That is not so. If the police require the services of these dogs for the purpose of investigation, these dogs are sent.

SRI P. S. CHINNADURAI : கோவை ஜில்லாவின் விசேஷ நிலைமையை உத்தேசித்து போலீஸ் நாய்களை அங்கே வைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோவை மாவட்டத்தைப்பற்றி நான் அவ்வளவு குறைவாக நினைக்கவில்லை. எல்லா ஜில்லாக்களிலும் குற்றங்கள் நடைபெறுகின்றன. அப்போது எங்கே நாய்கள் தேவைப்படுகின்றனவோ அங்கே அனுப்பி வைக்கப்படுகின்றன.

SRI A. A. RASHEED : Will it not help the police to detect more crimes quickly if the dogs are on the spot immediately?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : But it is not practicable to have many such dogs throughout the State. Whenever required, these dogs are sent as early as possible.

SRI K. B. S. MANI : இவ்வளவு உயர்தரமான வேலைகளுக்கு நாய்களைப் பழக்குகின்ற போலீஸ்காரருக்கு ஸ்பெஷல் அலவன்சு கொடுக்கப்படுகிறதா ? இல்லையென்றால் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி எத்தனையோ திறனுள்ள வேலைகள் செய்யப்படுகின்றன. அவைகளுக்குத் தக்கபடி கவனமும் செலுத்தப்படுகிறது.

8th September 1958]

SRI K. VINAYAKAM : Are there any instances brought to the notice of the Government, where the police dogs instead of catching the real culprits, have caught hold of innocent persons who have been let off afterwards in the judicial courts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Even men make mistakes and therefore it is but natural that the dogs also might make mistakes.

Double Member Constituencies

MR. SPEAKER : அடுத்த கேள்வி 78. கனம் நிதி அமைச்சர் பதிலளிப்பார்.

SRI K. B. S. MANI : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் ஸார். இந்தக் கேள்விக்கு சம்பந்தப்பட்ட விஷயம் இந்திய யூனியனுல் முழு மனதாக ஆமோதித்து அதன்படி நடந்துவருகிறது. இந்திய அரசியல் சட்டத்தின் முக்கிய அம்சமாகும் இது. அத்துடன் இது யூனியன் முழுவதும் அமுல் நடத்த வேண்டிய காரியமும்கூட. இத்தகைய முக்கியமான விஷயத்தை மாற்றி அமைக்கவோ, திருத்தவோ இந்த சபைக்கு அதிகாரம் உண்டா? இல்லையா ? இல்லையானல் இந்தக் கேள்வியை இச்சபையில் அனுமதிப்பது சரியா ? சரி என்ருல் எப்படி ?

MR. SPEAKER : இதை ஒன்றும் மாற்றச் சொல்லவில்லை. கேள்வியை ஸ்ரீ என். ஆர். தியாகராஜன் போடலாம்.

* 78 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

அசெம்பளி இரட்டை மெம்பர் தொகுதிகளை ஒற்றை மெம்பர் தொகுதிகளாக மாற்றியமைக்கும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI N. R. THIAGARAJAN : 1960 வருஷத்துடன் இந்திய அரசியல் சட்டத்தில் கண்டபடி ரிசர்வ் ஸ்தானம் ஒதுக்கப்படுவது நின்று போகிறது. அதற்குப் பின்பு அதைத் தொடர்ந்து இரட்டை மெம்பர் தொகுதிகளையெல்லாம் ஒற்றை மெம்பர் தொகுதியாக்க இந்திய சர்க்காருக்கு நமது சர்க்கார் சிபார்சு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி யெல்லாம் மத்திய சர்க்கார் 1960-ம் வருஷத்திற்குள்ளாக யோசனை செய்வார்கள். அந்தக் காலத்தில் நம்மையும் கலந்து ஆலோசிப்பார்கள் என்று நினைக்கிறேன். எது சரியென்று தோன்றுகிறதோ அதை மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்யலாம். இந்தச் சபை ஏதாவது யோசனை சொன்னலும் அதையும் அனுப்பி வைக்கலாம்.

SRI P. G. MANICKAM : அவ்வாறு இந்த ராஜ்ய சர்க்கார் சிபார்சு செய்யும் காலத்தில் ஹரிஜனங்களுக்கு ஹரிஜனங்கள் வோட்டுப் போடுவதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : அந்தக் கேள்வி இப்போ து எப்படி எழும்?

SRI K. ANBAZHAGAN : இரட்டை அங்கத்தினர் தொகுதி சிறப்பாக இருக்கிறது என்று மத்திய அரசாங்கத்திற்கு சென்னை அரசாங்கம் தெரிவிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒவ்வொருவரும் ஒவ்வொரு அபிப்பிராயம் கொண்டிருக்கிருர்கள். தக்க சமயத்தில் எந்த அபிப்பிராயம் தெரிவிக்கவேண்டுமென்று முடிவு செய்தால் போதும்.

[8th September 1958

Vendoni tank

MR. SPEAKER : The hon. Member Sri Ramachandran is not in his seat. The question and answer will be printed in the proceedings.

* 82 *Q*.—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any representations have been received by the Government from the residents of Paramakudi Town for closing the present channel feeding the Vendoni tank near Paramakudi Railway Station; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) Some representations were received to close the Vendoni supply channel or to divert the water course by reopening an old channel to Vendoni tank to avoid damage to the town area. The question was examined, and it was found that the old supply channel no longer existed and nobody was able to indicate its alignment correctly. Consequently the existing supply channel could not be closed or diverted without affecting the supply to the tank. But measures are being undertaken to see that there is no danger to the town area by the construction of a new head sluice at the off-take of the supply channel.

Panchayat board election

* 83 *Q*.—SRI S. M. ANNAMALAI : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) போளூர் தாலூகா, காளசமுத்திரம் கிராமத்து பஞ்சாயத்து போர்டு தேர்தல் நடத்த உத்திரவிடப்பட்டதா ?

(ஆ) தேர்தல் நடந்து விட்டதா ?

(இ) இல்லையாயின், காரணம் என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) & (*b*) Yes, Sir.

(*c*) Does not arise.

Gazetted District Officers

* 84 *Q*.—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் முதலமைசசர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் கெஜட்டெட் பதவியிலுள்ள தலைமை அதிகாரிகள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களில் ஹரிஜன வகுப்பைச சேர்ந்தவர்கள் எத்தனை பேர்.

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) 45.

(*b*) Nil.

River Pumping Scheme

* 85 *Q*.—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Home be pleased to State—

(*a*) whether any amount due to the Department from Sri R. Srinivasa Iyer, spokesman of the River Pumping Scheme, started at Pinayur village, Chingleput district, has been waived;

8th September 1958]

(b) if so, the reasons therefor and the particulars of the waiver; and

(c) the amount originally reported to be due from Sri R. Srinivasa Iyer?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The Government considered that there was a case for revision of the charges payable by the beneficiaries on the following grounds urged by them and accordingly revised the charges and waived the recovery of the balance.

(1) The hire charges levied were high and the acreage actually irrigated had not been reckoned correctly and the ryots did not derive the benefits of the scheme in full as the crop became 'shavi'.

(2) Two oil engines which were supplied in addition to the three oil engines already working under the scheme should be treated as part of the scheme and extra charges should not be levied on this account as the horse power of the oil engines already supplied was found to be inadequate.

The particulars of the amounts waived are as below :—

	RS.
Reduction in the charges for the period 5th June 1951 to 30th April 1953	6,524
Reduction in the charges for the period 1st May 1953 to 31st May 1955	4,729
Hire charges on two additional oil engines ...	3,895
Total ...	15,148

(c) Rs. 39,539–11–10.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Is it a fact that the party concerned did not enter into any agreement with the Government before he wanted this scheme to be implemented?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, it involved about 90 ryots. The original idea was to get agreement from individual ryots. Some agreement was obtained from certain ryots but it was found that it was not practicable and that it would take considerable time to get agreement from individual ryots. Therefore, Mr. Srinivasa Iyer, who was the sponsor of the scheme, undertook to collect . . .

SRI N. R. THIAGARAJAN : On a point of order, Sir.

MR. SPEAKER : The hon. Member cannot raise a point of order in the middle. Let the Hon. Minister continue his answer.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : We undertook to collect from the ryots and pay the dues.

MR. SPEAKER : Now the hon. Member can raise his point of order.

SRI N. R. THIAGARAJAN : இந்தச் சபையில் இப்படிப்பட்ட கேள்வியைப் போடலாமா? அதற்கு கனம் அமைச்சர் பதில் சொல்லலாமா? இந்த ஒழுங்குப் பிரச்னைக்குத் தீர்ப்புச் சொல்ல வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : It depends on the merits of each case. எந்த எந்தக் கேள்வி எப்படி எப்படி இருக்கிறதோ அதற்குத் தகுந்தபடி தான் நான் தீர்ப்புக் கொடுக்க முடியும்.

* 86 *Q.*—SRI T. T. DANIEL AND SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have launched any scheme for pumping river water for irrigation purposes ;

(*b*) if so, in which districts and Block Development areas; and

(*c*) in which other places the Government propose to introduce the scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Six Public Works Department schemes in Tanjore district will be implemented by the Chief Engineer (Irrigation) of which one scheme is in Tiruthuraipundi Block Development area and the remaining five are in Vedaranyam Block Development area. Besides, one scheme each in Sivakasi and Virudhunagar Block Development areas in Ramanathapuram district and two schemes in Chidambaram Block Development area in South Arcot district will be implemented by the Agriculture Department.

(*c*) One scheme each is expected to be introduced in the following places by the Agriculture Department.

(*a*) Allur—Chidambaram Block Development area in South Arcot.

(*b*) Kalingapatti—Non-Block Development area in Tirunelveli district.

(*c*) Ooradiambalam—Tiruthuraipundi Block Development area in Tanjore.

(*d*) Perambakkam—Kadambathur Block Development area in Chingleput.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister, Sir, the conditions that have to exist before the introduction of these river pumping schemes and also the approximate minimum cost of each scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, under this scheme water has to be lifted to higher level. This is a special feature of the scheme. The cost of scheme varies from one scheme to the other. The Agriculture Department is not quite enthusiastic about the scheme. But anyhow wherever the cost is economical and the ryots are keen about the scheme, it is being pursued.

SRI K. RAMACHANDRAN : இந்தத் திட்டம் இதுவரையிலும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதைப் பொறுத்த வரையில், ஒரு பம்பு செட்டுக்கு எவ்வளவு செலவாகிறது? சாதாரணமாக, ஒரு பம்பு செட்டின் மூலம் எத்தனை ஏக்கர்கள் விளைச்சலுக்குக் கொண்டுவரப் படுகின்றன?

8th September 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு, ஒரு "கிராப்"-க்கு 25–30 ரூபாய் செலவாகிறது. நான் முன்பு கூறியபடி, திட்டம் அம்மாதிரிதான் மதிப்பிடப்பட்டிருக்கிறது. சர்க்காரின் ஸப்ஸிடி இல்லாவிட்டால் ஏக்கருக்கு 37½ ரூபாய் செலவாகிறது. ஒரு பம்பு செட்டின் மூலம் எத்தனை ஏக்கர் நிலம் பயிராகிறது என்பதுகூட அந்த அந்தத் திட்டத்திற்குத் தகுந்தபடி இருக்கிறது. ஒரு திட்டத்தில், ஒரு கிராமத்தில் "ரிவர் பம்பிங் ஸ்கீமினால்" 700 ஏக்கர் வரையில் பாசனம் அளிக்கப்பட்டிருக்கிறது.

SRI A. VEDARATHNAM : தென்டைார் பம்பிங் ஸ்கீம், வாயுமேடு கிராமத்தில் வளவனாறு பம்பிங் ஸ்கீம் முதலிய பாசனத் திட்டங்கள் இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும் என்று கனம் அமைச்சர் தமது பட்ஜெட் பிரசங்கத்தில் கூறினாரே அவை இந்தத் திட்டத்தில் சேர்ந்திருக்கின்றனவா ? இல்லாவிட்டால், அவை எப்போது எடுத்துக்கொள்ளப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவை இந்தத் திட்டத்தில் சேர்ந்திருக்கின்றன. அதுபற்றிய பரிசீலனை முடிவானதும், ரயத்துக்களும் ஒப்பியவுடன், அவை எடுத்துக்கொள்ளப்படும்.

SRI K. ANBAZHAGAN : ஆற்று நீரை பம்பின் மூலம் பாய்ச்சுவதால், சில இடங்களில் மிகப் பெரிய தோட்டங்கள் வைத்திருப்பவர்களே அதனால் பயனடைகிறார்கள் என்றும், ஏழை எளியவர்களின் நிலங்களுக்கு ஆற்று நீர்ப் பாய்ச்சினால் தடைப்படுகின்றது என்றும் அரசாங்கத்திற்கு புகார் வந்திருக்கிறதா ? அப்படி புகார் வந்திருந்தால், இத் திட்டம் குறித்து மறு பரிசீலனை செய்ய அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : "ரிவர் பம்பிங் ஸ்கீமை" பொறுத்த வரையில், தோட்டங்களுக்கு ஆற்றுத் தண்ணீர் பாய்ச்சப்படுவதில்லை. இந்தத் திட்டத்தினால் நெல் போன்ற பயிர்களுக்குத் தான் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது போன்ற புகார் என்னிடம் வரவில்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, are there not some lift irrigation schemes in the Cape District and the Shencottah Taluk?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir. In that area there are a few lift irrigation schemes.

SRI S. M. ANNAMALAI : இந்தத் திட்டம் வட ஆற்காடு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையாயின் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் திட்டத்தை எங்கே சாத்தியப்படுகிறதோ அங்கேதான் ஆரம்பிக்க முடியும். இத் திட்டத்தை ஒரு இடத்தில் ஆரம்பிக்க வேண்டுமானால் முதலில் அங்கே ஆற்றில் தண்ணீர் மிகுதியாக இருக்கவேண்டும் ; இரண்டாவது, அந்தத் தண்ணீரை மேலே கொண்டுவந்து பாய்ச்சினால் அதனால் பயனடையக்கூடிய விளைச்சல் நிலம் இருக்கவேண்டும்.

SRI M. JAGANNATHAN : Sir, the Hon. Minister said that the river pumping scheme is a costly scheme. May I know whether special water rates are collected from ryots who are provided with irrigation facilities through such type of river pumping schemes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If charges are levied for water that is supplied by lift irrigation, I do not think, Sir, that there will be any special irrigation levies.

SRI K. R. VISWANATHAN : உடையார்பாளையம் தாலுகாவில் கொள்ளிடம் பக்கத்தில் இருப்பதால் "ரிவர் பம்பிங்" திட்டத்தின் மூலம் அங்கே ஆற்றுப் படுகையிலுள்ள நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியும் என்று பல திட்டங்கள் சர்க்காருக்கு சமர்ப்பிக்கப்பட்டன. அவைகளை சர்க்கார் பரிசீலித்ததா ? அவைகளை சர்க்கார் எவ்வளவு தூரம் நிறைவேற்றியிருக்கிறது ?

MR. SPEAKER : ஒவ்வொரு அங்கத்தினரும் சபையில் திடீரென்று ஒரு தனிக் கேள்வி போட்டால் கனம் அமைச்சரால் எவ்வாறு பதில் சொல்லமுடியும். இந்தக் கேள்விக்கு கனம் அமைச்சர் பதில் சொல்வாரானால் எனக்கு ஆட்சேபனை இல்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்லுகிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, may I know the stage at which the lift irrigation schemes in the Cape district and Shencottah taluk are?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice, Sir.

Polytechnic

* 87 *Q.*— SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லாவில் பாலிடெக்னிக் ஒன்று ஏற்படுத்தக் கோரி அதற்கான கண்டிஷன்படியெல்லாம் பணம் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட வட ஆற்காடு ஜில்லா பிளானிங் போர்டு கூட்டத்தின் தீர்மானம் வந்ததா ?

(ஆ) அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes.

(*b*) The question of opening a polytechnic in the North Arcot district is under consideration.

SRI M. P. SARATHI : வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள குடியாத்தத்திலிருக்கும் தனிப்பட்ட நபர் யாராவது பாலிடெக்னிக் அமைக்க முன்வந்தாரா ? அதற்கு சர்க்கார் அனுமதி கொடுத்திருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆம். பாலிடெக்னிக் அமைக்க குடியாத்தத்திலிருந்து ஒருவர் முன்வந்திருக்கிறார். அவருடைய விண்ணப்பமும் சர்க்காரின் பரிசீலனையில் இருக்கிறது.

SRI A. A. RASHEED : Sir, since there is no technical college or school in North Arcot, will the Government kindly consider to expedite its proposal to open a polytechnic in North Arcot?

THE HON. SRI C. SUBRAMANIAM : In any event we cannot open this year. Therefore we have to consider this for the next year.

SRI T. KARIA GOUNDER : வட ஆற்காடு ஜில்லாவில் பாலிடெக்னிக்கை அமைக்க முன்வந்துள்ள தனி நபர் எப்போது மனுச் செய்துக் கொண்டார் ? அங்கே இவ்வருஷம் இல்லாவிட்டாலும் 1959–60-ம் வருஷத்திலாவது பாலிடெக்னிக்கை ஆரம்பிக்க சர்க்கார் முன்வருவார்களா ?

8th September 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : இரண்டு மூன்று வருஷங்களாகவே அந்த விண்ணப்பம் பரிசீலனையில் இருந்து வருகிறது. அந்தத் தனி நபர் முடிவாக ஒருவிதமான கருத்தையும் தெரிவிக்காமல் இருந்ததால் காலதாமதம் நீடித்துக்கொண்டே வந்திருக்கிறது. அங்கே 1959–60-ல் பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கலாம்.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, may I know the basis on which these polytechnic schools are opened?

THE HON. SRI C. SUBRAMANIAN : எங்கெங்கு அவசியம் இருக்கிறதோ, அங்கெல்லாம் இவை ஆரம்பிக்கப்படும்.

* 88 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to State—

(*a*) how many Polytechnic Schools will be opened in the State in the private sector in the current year; and

(*b*) the places where they will be started?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Four new private polytechnics have been sanctioned for 1958-59, viz. :—

1. Desigar Polytechnic, Tanjore.
2. Thiagarajar Polytechnic, Salem.
3. S. Vellaichamy Nadar Polytechnic, Virudhunagar.
4. One Polytechnic at Sankaranagar by India Cements, Limited.

SRI T. T. DANIEL : Sir, will the Government consider the desirability of starting a polytechnic in Kanyakumari district if any private agency comes forward for opening one?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, certainly it will be considered. As a matter of fact, there are only two districts which do not have polytechnics. One is North Arcot and the other is Kanyakumari. If there should be any private agency coming forward to open a polytechnic in Kanyakumari district, it would be welcome.

SRI K. VINAYAKAM : Did not the private individual Sri Rajagopal Naidu place at the disposal of the Madras Government an amount of Rs. 3 lakhs for the opening of a polytechnic in Gudiyatham, Sir?

MR. SPEAKER : We are now in question No. 88, but the hon. Member Sri Vinayakam is referring to the previous question.

SRI K. VINAYAKAM : Sir, the Hon. Minister, while answering that question referred to North Arcot and a particular individual.

THE HON. SRI C. SUBRAMANIAM : It is not a question of offering three lakhs of rupees for starting a polytechnic. To start a polytechnic, there are certain conditions. The agency should be prepared to meet 25 per cent of the non-recurring expenditure and to bear necessary recurring expenditure. There was some difficulty with regard to the meeting of the recurring expenditure till now and I think he has now agreed to make provision for that also.

[8th September 1958

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : தொழில் துறையில் பின் தங்கியிருக்கும் பழனி போன்ற இடங்களில் பாலிடெக்னிக்குகளை அமைக்க தேவஸ்தானங்கள் முன்வந்தால், அதற்கு சர்க்கார் அனுமதி அளிப்பார் களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மதுரையில் இப்போதே இரண்டு பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. ஆகையால், இது வரையிலும் பாலிடெக்னிக்குகள் இல்லாமலிருந்துவரும் ஜில்லாக்களுக்கு முதலிடம் கொடுத்துவிட்டு, அதற்குப் பிற்பாடு மற்ற ஜில்லாக்களிலும் இன்னும் பாலிடெக்னிக்குகள் ஆரம்பிப்பதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

SRI M. JAGANNATHAN : May I know, Sir, whether the Union Government have given any financial aid to the State Government for the starting of these polytechnic schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes. The major share is found by the Central Government.

Houses for Harijans

* 91 Q.—SRI D. S. AUTHIMOOLAM (on behalf of Sri A. PERUMAL) : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவது சம்பந்தமாக அரசாங்கம் கொடுத்துள்ள மானியத்திற்கு மிகவும் குறைந்த மதிப்புள்ள வீடுகள் கட்டப்படுவதாக ஏதாகிலும் அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்துள்ளதா ?

(ஆ) அப்படியானல், அதை நிவர்த்திக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.
(b) Does not arise.

Marriages

* 92 Q.—SRI P. G MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ரிஜிஸ்தர் கலியாண சட்டத்தை திருத்தி அமைத்த பிறகு எத்தனை கலியாணங்கள் சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்களிலே பதிவு செய்யப்பட்டன ?

(ஆ) மணமக்களின் இல்லங்களிலே பதிவு செய்யப்பட்ட கலியாணங்கள் எத்தனை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Presumably the information desired is about the number of marriages registered under the Special Marriage Act, 1954, which replaced the Special Marriage Act, 1872, with effect from 1st January 1955. The number of marriages registered under this Act at the offices of the Marriage Officers appointed under the Act during the period from 1st January 1955 to 20th June 1958 is 757.

(b) The number of marriages registered under the Act at the residences of the parties to the marriages during the same period, viz., from 1st January 1955 to 20th June 1958 is 164.

SRI P. G. MANICKAM : இவ்வாறு நடத்தப்படும் திருமணங்களைப் பற்றி ஜனங்களுக்கு தெள்ளத்தெளிவாக பிரசாரம் மூலமாகவோ அல்லது விளம்பரம் மூலமாகவோ அறிவிக்கப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி ஒரு அவசியம் இருக்கிறது என்று அரசாங்கம் கருதவில்லை.

8th September 1958]

Sri A. V. P. ASAITHAMBI : சுயமரியாதைத் திருமணங்களை செல்லுபடியாக்க அரசாங்கம் சட்டம் கொண்டுவர உத்தேசித்திருக்கிறதா ? இல்லையென்று சொன்னால் அப்படி திராவிட முன்னேற்ற கழகம் கொண்டுவந்தால் அதை அமுல் நடத்த சர்க்கார் தக்க ஏற்பாடுகள் செய்யுமா ?

The Hon Sri M. BHAKTAVATSALAM : இப்பொழுது அரசாங்கத்திற்கு அவ்வித உத்தேசம் இல்லை. அப்படி கனம் அங்கத்தினர் ஏதாவது மசோதா கொண்டுவந்தால் அப்பொழுது அதைப் பற்றி அரசாங்கம் ஆலோசித்து என்ன செய்யவேண்டும் என்பதுபற்றி முடிவு செய்யப்படும்.

* 92-A *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to bring legislation for compulsory registration of all marriages?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No, Sir.

Sri K. VINAYAKAM : Sir, may I know what happened to the piece of legislation that was pending some years back with the Government to regularize non-conforming Hindu marriages, and which was withdrawn by Government?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I do not think, Sir, the hon. Member refers to any Bill that is pending consideration by the legislature. I have no information otherwise.

Sri K. ANBAZHAGAN : நாட்டிலே மக்களின் இறப்பையும் பிறப்பையும் குறிப்பு எடுக்கிற அரசாங்கம் பிறப்பிற்கு காரணமாகயிருக்கிற திருமணங்களை மட்டும் அப்படி குறிப்பு எடுப்பதில் சேர்க்காதிருப்பதற்கு காரணமென்ன ? அப்படி ஒரு குறிப்பு எடுக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதவில்லையா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : திருமணம் என்றால் பிறப்பு அவசியமாக உண்டு என்று அரசாங்கம் கருதவில்லை.

Sri A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that compulsory registration of marriages is observed in all other civilised countries of the World, and, if so, will not this Government also do likewise here in India?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, even in this civilised country, marriages are compulsorily registered under the Indian Christian Marriage Act, 1872, the Parsi Marriage and Divorce Act, 1936, and the Special Marriage Act, 1954. Only Government do not consider it necessary to make any rules to make marriages compulsory under the Hindu Marriage Act, 1955.

Sri K. VINAYAKAM : Sir, are the Government aware of the fact that nowadays some marriages are conducted which are not in conformity with Hindu marriages and which are held null and void by the decisions of the High Court? Will the Government bring in legislation regularising such marriages even though they are conducted by social reformers who style themselves as those bringing in some reforms in Hindu customs?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Such marriages can well be registered under the Special Marriage Act, 1954.

[8th September 1958

SRI K. B. S. MANI : இப்பொழுது அதிகமாக சுயமரியாதைத் திருமணங்களும், புரோகிதர் இல்லாத திருமணங்களுந்தான் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. பேப்பர்களில் பார்த்தால் அதில் வருகிற பல திருமணங்களும் புரோகிதர் வைத்துச் செய்யாததினால் அத்திருமணங்கள் செல்லுபடியாகாது என்றும் அப்படி அவர்களுக்கு குழைந்தைகள் பிறந்தால் கூட, அப்பெண்கள் அவர்களது மனைவிகள் அல்ல என்று ஜட்ஜ்களால் தீர்ப்பளிக்கப்படுகிறது. ஆகவே கட்டாயமாக ரெஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டுமென்று இருந்தால் கூட ஆயிரக்கணக்கான மக்கள் ரெஜிஸ்டர் செய்து கொள்ளாமல் இருக்கின்றனர். ஆகவே, தாலி கட்டினுல் அவள் உண்மையிலே மனைவி என்ற திருத்தத்தை சர்க்கார் அமுலுக்குக் கொண்டு வருமா ?

THE HON SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி திருமணங்களை ரெஜிஸ்டர் செய்து கொள்வதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. அங்கத்தினர் அவர்களே சமீபத்தில் திருமணம் செய்துகொண்டார்கள். அவர்கள் ரெஜிஸ்டர் செய்து கொண்டாரா இல்லையா என்று தெரியாது. அவர்களைப் போன்றவர்கள் மற்றவர்களுக்குச் சொல்லி இம்மாதிரி திருமணங்களை ரெஜிஸ்டர் செய்து வைப்பதுதான் நல்லது.

Sandalwood oil

* 95 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) எந்தெந்த ஜில்லாக்களிலே கவர்ன்மெண்டு நிலத்திலும், தனிப் பட்டவர்களுடைய நிலங்களிலும் சந்தன மரங்கள் இருக்கின்றன ?

(ஆ) எத்தனை ரூபாய் மதிப்புள்ள சந்தனக் கட்டை 1957, 1958-ம் வருஷங்களிலே விற்பனை செய்யப்பட்டது ?

(இ) சந்தனக் கட்டையிலிருந்து எண்ணெய் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலைகள் எந்தெந்த இடங்களிலே யார் யாரால் நடத்தப்பட்டு வருகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) North Arcot, South Arcot, Salem, Coimbatore, Madurai, Nilgiris, Tirunelveli and Ramanathapuram districts.

(*b*) *Year.*	*Revenue realised.*
(i) 1957	Rs. 45,32,935·00
(ii) 1958	Rs. 7,18,002·00

(Up to January 1958.)

(realised at the auction sale of sandalwood in January 1958 at Satyamangalam sale depot).

(*c*) Factories for extraction of sandalwood are at Salem, Mettur Dam and Tirupattur. They are run by private individuals.

* 96 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state whether any final decision has been taken to start a sandalwood oil distillery in the public sector and, if so, what the details are?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is a proposal under consideration to work a pilot scheme and no decision has been taken yet on it.

SRI P. G. MANICKAM : தயாரிக்கப்படும் சந்தன எண்ணெ மற்ற தேசங்களுக்கு விற்பனை செய்ய அனுப்பப்படுகிறதா ? அல்லது அதை வைத்துக்கொண்டு இங்கேயே மற்ற இதரப் பொருள்கள் உற்பத்தி செய்யப் படுகிறதா ?

8th September 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சந்தன எண்ணெக்கு பெரும்பாலும் அந்நிய நாடுகளில்தான் டிமாண்டு.

SRI M. KALYANASUNDARAM : சந்தன எண்ணெ உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை சர்க்கார் ஆரம்பிப்பதற்கு இப்பொழுது தனியார்கள் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்களா ? அப்படியானால் அவர்களது ஆட்சேபம் என்ன ? அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு சர்க்கார் இதை கைவிட்டுவிடுவார்களா ? அல்லது சர்க்காரே அதை நடத்துவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது தனிப்பட்டவர்கள், வியாபாரத்தில் இருக்கிறவர்கள் ஆட்சேபணை தெரிவிக்கிறார்கள். அப்படித் தெரிவிப்பது இயற்கையே. ஆனால் இந்த யோசனையை, மைசூர் அரசாங்கம் அதன் ராஜ்யத்திலுள்ள சந்தன மரங்களிலிருந்து எண்ணெ இறக்குகிறார்கள். அப்படி இறக்கி அதை அமெரிக்காபோன்ற நாடுகளுக்கு விற்கிறார்கள். ஆனால் முன்பிருந்த அமைச்சர் ஒருவர் என்னிடம் ஒரு யோசனை சொன்னார். இதுபற்றி பரிசீலனை செய்வது இன்னொருவர் ஆட்சேபிக்கிறார்கள் என்பதற்காகவல்ல. நாம் இவைகளை விற்பதை விட எண்ணெ இறக்குவதில் சர்க்காருக்கு லாபம் உண்டா என்பதை நிச்சயப்படுத்திக்கொண்டுதான் இதில் இறங்கவேண்டும். அதுதான் பரிசீலனை செய்யப்பட்டுவருகிறது. அதற்கு பிறகு ஒரு பைலட் ஸ்கீமாகச் செய்யலாமா என்பது பற்றி இப்பொழுது பரிசீலனை செய்யப்படுகிறது.

Horses

* 100-AA Q.—SRI A. VEDARATNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

தஞ்சை ஜில்லாவிலுள்ள கொடிக்காட்டில் உள்ள நல்ல ரகக் குதிரைகளை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A scheme on an experimental basis was proposed by the Animal Husbandry Department in 1950 for the development of horses in the Kodikadu area of Tanjore district but it was not pursued by the Government on grounds of economy.

SRI A. VEDARATNAM : இந்த கொடிக்காட்டில் இருக்கும் குதிரைகளை அபிவிருத்தி செய்ய இதற்கு முன்னமேயே ஒரு திட்டம் வந்து அதை அரசாங்கம் பரிசீலனை செய்தது. இப்பொழுது அதிகாரிகள் வந்து அதைப் பார்த்துவிட்டு புள்ளிவிவரங்கள் மற்றெல்லாம் எடுத்துக் கொண்டுவந்தார்கள். இப்பொழுது மேலும் அதுபற்றி என்ன நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பு பரிசீலனை செய்ததில் பொருளாதார நிலையையொட்டித்தான் இது கைவிடப்பட்டது. அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால் பிறகு இந்தப் பிராந்தியத்தை "ஒயில்ட் லைப் சாங்க்சுவரி" யாக்க நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது கால்நடை டைரக்டர் அவர்கள் ஒரு சிறிய திட்டத்தை சமர்ப்பித்திருக்கிறார், இங்கிருக்கிற குதிரைகளை வளர்ப்பதுபற்றி. அதற்குள்ள செலவெல்லாம் 4,500 ரூபாய்தான் ஆகிறது. ஆகவே இதை இப்பொழுது அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

SRI R. SRINIVASA AYYAR : Sir, is there any proposal before the Government to start a horse breeding station in this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such proposal now.

[8th September 1958

SRI R. KRISHNASAMI NAIDU : ராமநாதபுரம் ஜில்லா, ராமநாத புரம் தாலூகாவில் மண்டபப் பகுதிகளில் உள்ள காடுகளில் இத்தகைய குதிரைகள் இருக்கின்றன. அவைகளையும் அபிவிருத்தி செய்ய ஏதாவது திட்டம் அரசாங்கத்தினிடம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி குதிரைகளை அபி விருத்தி செய்யும் திட்டம் ஒன்றும் இப்பொழுது அரசாங்கத்தினிடம் இல்லை. முதலில் வேதாரண்யத்தில் உள்ள கொடிக்காட்டில் உள்ளதை என்ன செய்யலாம் என்பதை பரிசீலனை செய்து அங்கு ஏதாவது செய்யலாமா என்று பார்த்த பிறகுதான் மீதியுள்ளவைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

SRI A. A. RASHEED : Sir, is there any proposal to start horse racing in Tanjore district to breed horses?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : These are ponies. These are not fit for races.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, குதிரை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத்தினிடத்தில் ஒருவிதமான திட்ட மும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படியானால் குதிரைப் பந்தயத்தை நடத்துவதால் குதிரைகளை அபிவிருத்தி பண்ணுவ தாக ஆகாதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குதிரைப் பந்தயத்தில் உபயோகப்படும் குதிரைகளை ராணுவத்திற்கு பயன்படுத்த அரசாங்கம் ஆலோ சித்து வருகிறது.

Fertilizers.

* 100-BB *Q.*—SRI P. S. K. LAKSHMIPATHI RAJ (on behalf of Sri S. Lazar) : Will the Hon. the Minister for Home be pleased to place a statement on the Table of the House as to the demand and supply position of fertilizers in the State for the year 1958–59 and the steps taken by the Government to keep up agricultural production from the point of view of proper manuring of agricultural lands?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the table of the House.

Libraries

* 100-CC *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா ?

(அ) சென்னை ராஜ்ய இந்துமத அறநிலைய போர்டின் ஆதிக்கத்திலி ருக்கும் எத்தனை கோவில்களிலும், தர்ம ஸ்தாபனங்களிலும் இலவச வாசகசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ?

(ஆ) மேற்கண்ட இலவச வாசகசாலைகளுக்கு ஜில்லா லைப்ரரி அத்தா ரிடி மூலம் உபகாரத் தொகை கொடுக்கப்பட்டு வருகின்றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Ninety-one temples and five maths.

(*b*) No, Sir.

SRI P. G. MANICKAM : ஸார், இந்த கோவில்களில் இருக்கும் வாசக சாலைகளின் அபிவிருத்திக்காக லைப்ரரி அத்தாரிட்டிகளிட மிருந்து உதவி பெறுவதற்கு அரசாங்கம் ஒரு முறையை ஏற்படுத்துமா ?

---

[a] Printed as Appendix I on pages 383–384 infra.

8th September 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : லைப்ரரி அத்தாரிடிகள் மூலம் பல இடங்களில் நூல் நிலையங்கள் அமைத்து நடத்தப்பட்டு வருகின்றன. ஆலயங்களில் இருக்கும் நூல் நிலையங்கள் பிரத்யேகமாக நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நூல் நிலையங்களுக்கு லைப்ரரி அத்தாரிட்டியிடமிருந்து உதவி நாட வேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் கருதுகின்றது.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இப்பொது இருக்கின்ற முறைப்படி எல்லா ஆலயங்களிலும் மடங்களிலும் நூல் நிலையங்கள் முறையாக அமுல் நடத்தப்பட்டு வருகின்றனவா ? அவைகளின் எண்ணிக்கை என்ன ? நடத்தப்படவில்லையென்றால் முறையாக நடத்தப்படுவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது தான் நான் கணக்கு கொடுத்தேன். இத்தனை ஆலயங்களிலும் சரியாக நூல் நிலையங்கள் பராமரிக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுதான் வருகிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI, : தலைவர் அவர்களே, ஆலயங்களிலும் மடங்களிலும் நடத்தப்பட்டு வருகிற நூல் நிலையங்களில் மதங்களை குறைகூறுகிற நூல்கள் இருக்கக்கூடாது என்பதற்கு ஏதாவது சட்டங்கள் இருக்கின்றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்காக தனிச்சட்டங்கள் ஒன்றுமில்லை. பொதுவாக நல்ல நூல்கள் வைத்திருக்கவேண்டும் என்று அமைக்கப்பட்டு வருகிறது.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, அறநிலையங்களின் ஆதிக்கத்தின் கீழ் நடைபெறுகிற வாசக சாலைகளில் ஆபாசங்களைப் பரப்பும் புராண ஏடுகள் இருக்கின்றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நல்ல நூல்கள் வைக்க வேண்டும் என்று அமைக்கப்பட்டிருக்கிறது.

SRI M. JAGANNATHAN : May I know whether in these temple libraries, only religious books are maintained or books dealing with all branches of human knowledge are also kept?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that it is not merely the so-called religious books that are maintained in these libraries.

SRI P. G. MANICKAM : இந்து மத அற நிலையத்தின் கீழ் இருக்கின்ற எல்லா கோவில்களிலும் ஒவ்வொரு வாசக சாலை ஏற்படுத்தவேண்டுமென்று அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இவ்விதம் நடத்துவதற்கு பொருள் நிலையையும் கவனிக்கவேண்டும். எல்லா கோவில்களிலும் ஒரு வாசகசாலை அமைக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. பொருள் வசதிக்காக நன்கொடைகள் பெற்று இம்மாதிரி வாசக சாலைகள் ஏற்படுத்தலாம். இதற்கு இட வசதிவேண்டும். இவைகள் எல்லாம் கவனிக்கப்பட்டு வருகின்றன.

SRI K. R. VISWANATHAN : தலைவர் அவர்களே, இந்த அற நிலைய நூல் நிலையங்களிலுள்ள புத்தகங்கள் சரியாக பயன்படுத்த பட்டு வருகின்றனவா ? தோராயமாக இந்த நூல் நிலையத்திலிருந்து எத்தனை பேரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விவரங்கள் என்னிடம் இப்போது இல்லை. இவற்றை சரிவர பயன்படுத்தவதற்கு கனம் அங்கத்தினர்களைப் போன்றவர்கள் கொஞ்சம் சிரத்தை எடுத்துக்கொண்டால் நல்ல பலனைக் காணமுடியும் என்று நம்புகிறேன்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : தலைவர் அவர்களே மதசம்பந்தமான நூல்களை ஆபாச புராணங்கள் என்று கனம் அங்கத்தினர் சொல்லுவது சரியா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது அவரவர்களுடைய கருத்து.

Tanks

*100-DD *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) போளூர் தாலூகா காள சமுத்திரம் கிராம மக்களிடமிருந்து ஏரி தூர்வார வேண்டுமென்று மகஜர் வந்ததா ?

(ஆ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Superintending Engineer (Food Production) has been asked to look into the matter.

SRI S. M. ANNAMALAI : இந்த ஏரியானது 10, 15 வருடங்களாக இதே நிலையில் தான் இருந்து கொண்டிருக்கிறது. அங்கு நஞ்சை நிலங்களாக இருந்தவை எல்லாம் புஞ்சை நிலங்களாக மாறிக் கொண்டுவருகின்றன. ஆகவே விரைவில் இந்த வேலையை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வப்போது விவசாயிகள் அந்த வண்டலை அகற்றியிருக்கவேண்டும். தொடர்ந்தாற்போல் அகற்றுமல் இருந்ததினுல் இது தூர்ந்து போயிருக்கிறது. இதனுல் அதிகம் செலவு ஏற்படும். இருந்தாலும் இதை உணவு உற்பத்தி இலாகா கவனித்து வருகிறது

Cattle farms

*100-EE *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken by the Government to encourage cattle and sheep farming in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement showing the action taken by Government to encourage cattle and sheep farming in this State is placed on the table of the House.

Public meeting.

*100-FF *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether permission has been refused to Sri S. Pakkirisami Pillai for holding a public meeting in the Pensioner's Lines on 23rd June 1958, 24th June 1958 and 25th June 1958; and

(*b*) the reasons for such refusal?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The Government understand that the Commissioner of Police did not receive any application from the Honourable Member for holding a public meeting in the Pensioner's Lines on the dates specified. The question of the Commissioner of Police having refused permission for holding the meeting does not therefore arise.

---

* Printed as Appendix II on pages 384–387 infra.

8th September 1958]

SRI S. PAKKIRISAMI PILLAI : தலைவர் அவர்களே, இதற்கு வேண்டிய ஆதாரத்தை இப்போது காண்பித்தால் கனம் மந்திரி அவர்கள் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : This is not the place to produce such evidence. The hon. Member may show it to the Hon. Minister later on.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப் பின்னுல் என்னிடம் கொடுத்தால் அதை கவனிக்கிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, ஜனவரி மாதம் 3-ம் தேதி கூட்டம் நடத்துவதற்கு அனுமதி கேட்டபோது அனுமதி மறுக்கப்பட்டது. பண்டித நேரு அவர்களுக்கு கருப்புகொடி காட்டுவதை விளக்குவதற்காக கூட்டம் கூட்டுவதற்கு அனுமதி வேண்டும் என்று கோரப் பட்டிருக்கிறது. அது மறுக்கப்பட்டது. அப்படியானுல் சட்டபூர்வமான கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்போது நகரில் தடை யுத்தரவு இருந்தது. அதனுல் அனுமதி மறுக்கப்பட்டது.

SRI K. VINAYAKAM : Sir, may I know whether the application to hold the meeting on the dates mentioned here was made in the name of Mr. S. Pakkirisami Pillai in his individual capacity, or was the application made in the name of the Labour Union of which he happens to be the leader?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no other information except what I have given just now.

Temples

* 100-GG *Q*.—SRI M. P. SARATHI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :—

(அ) இந்த ஆண்டு நிதி வசதியற்ற ஏழைக் கோயில்களைச் செப்பனிட எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளில் எவ்வளவு செலவு செய்யப் பட்டுள்ளது ?

(இ) இந்த உதவி இஸ்லாமிய, கிருஸ்தவக் கோயில்களுக்கும் அளிக்கப் படுகின்றதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Rupees 3 lakhs.

(*b*) During 1955–56 .. .. .. Rs. 2 lakhs.
During 1956–57 .. .. .. Rs. 2 lakhs.
During 1957–58 .. .. .. Rupees Nil.

(*c*) No.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, கோவில்களில் ஏழை கோவில்கள், பணக்கார கோவில்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படியானுல் அதில் இருக்கும் ஏழை கடவுள், பணக்கார கடவுள் இவர் களின் பட்டியல் இருந்தால் கொடுக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பராமரிக்க போதிய வருமானம் இல்லாத கோவில் ஏழைக்கோவில் என்று கருதப்பட்டு வருகிறது. கடவுள்களின் பட்டியல் என்னிடம் இல்லை.

[8th September 1958

SRI P. G. MANICKAM : ஹரிஜன சேரிகளில் இந்து மதத்தின் கீழுள்ள கோவில்கள் பல பாழைடைந்து கிடக்கின்றன. அவைகளில் சரியாக திருவிழாக்கள் பூஜைகள் இவைகள் எல்லாம் நடப்பதில்லை. இப்பேர்ப்பட்ட கோவில்களுக்கு உதவி கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பு ஹரிஜனங்கள் கோவில்களில் போகக்கூடாது என்று இருந்தது. அப்போது தனித்தனியாக கோவில்கள் அதிகமாக அவசியம் இருந்தன. இப்போது எல்லா கோவில் களிலும் போகலாம் என்பதை அங்கத்தினர்கள் உணருவார்கள் என்று எண்ணுகிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : சபாநாயகர் அவர்களே, இப் போது கொடுக்கப்பட்டுவரும் இரண்டு லட்சம் ரூபாய் போதாது என்று தெரிந்த விஷயம்தான். ஆகவே பணக்கார கோவில்களிலிருந்தோ அல்லது பணக் காரர்களிடமிருந்தோ பணத்தை எடுத்து ஏழைக் கோவில்களை பராமரிப்ப தற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதவும் கவனிக்கப் பட்டுதான் வருகிறது.

SRI M. P. SARATHI : இஸ்லாமிய கோவில்களுக்கு இப்போது நிதி உதவி அளிப்பதில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவ்விதம் உதவி வேண்டும் என்று அவர்களிடமிருந்து ஏதாவது மனுக்கள் வந்திருக்கின்றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது அந்தமாதிரி யோசனை ஒன்றுமில்லை என்று சொன்னேன். முஸ்லீம் ஸ்தாபனங்களை பொறுத்தவரையில் "வாக்ப் ஆக்ட்" நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த ராஜ்யத்திலும் அது அமுலுக்கு வந்திருக்கிறது. அந்த சட்டத்தின் கீழ் இவைகளுக்கு நிதி உதவி அளிப்பதுபற்றி கவனிக்கப்படும். கிருஸ்தவ கோவில்களைப் பொறுத்தவரையில் அநேகமாக எல்லாம் ப்ரைவேட்டாக இருப்பதால் யாரும் இதுவரை உதவி வேண்டும் என்று கோரவில்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஸார், ராசிபுரம் தாலூகாவில் அழகா மொழியில் இருக்கும் சித்தர் கோவில் பராமரிப்புக்காக நிதி உதவி கோரி ஏதாவது விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றியெல்லாம் இப்போது என்னிடம் தகவல் இருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : ஸார், இந்த சர்க்கார் மதசார் பற்றது என்று கூறிக்கொண்டிருக்கும்போது இந்து மத ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் கோவில்களுக்கு மாத்திரம் நிதி உதவி அளித்துக்கொண் டிருக்கிறது என்றும் மற்ற மதங்களின் கீழ் உள்ள ஸ்தாபனங்களுக்கு நிதி உதவி அளிப்பதில்லை என்றும் சொல்லுவதைப்பற்றி அமைச்சர் அவர் களின் அபிப்பிராயம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த மத ஸ்தாபனங்களில் தவறுதல் நடந்தாலும் அதைப்பற்றி கவனித்து அவைகளைப் பராமரிப்ப தற்கு வேண்டிய நடவடிக்கைகள் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்.

SRI V. SANKARAN : இந்து அற நிலைய பாதுகாப்பு போர்டு இருக்கிறது. அதே போல கிருஸ்தவ, இஸ்லாமிய அற நிலைய பாதுகாப்புபோர்டுகள் அமைக்காமல் இருக்கும் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் சொன்னேன். முஸ்லீம் அற நிலையங்களைப் பற்றி சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ அற நிலையங்களைப் பற்றிச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

8th September 1958]

SRI P. S. CHINNADURAI : தஞ்சையில் பெரிய கோவில் என்று அழைக்கப்படும் பிரகதீஸ்வரர் கோவிலை பழுது பார்ப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இத்தகைய ஆலயங்களின் நிலைமை அப்போதைக்கப்போது அற நிலையப் பாதுகாப்பு இலாகாவிலும் கவனிக்கப்பட்டு ரிப்பேர் செய்யப்பட்டு வருகிறது.

SRI A. GOVINDASAMY : கடவுள் விஷயத்திலும் பொருளாதரா சமத்துவத்தை உண்டாக்க ஆட்சியாளர்கள் வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எங்களுடைய நம்பிக்கை கடவுள் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர்கள் என்பது.

SRI C. NADARAJA ODAYAR : நமது அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது இந்த ஆண்டு எத்தனை கோவில்களைப் பார்த்திருக்கிறார்கள் என்று அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் இதைப் பற்றி ஒன்றும் குறிப்பு வைத்துக்கொள்ளவில்லை. ஆகையால் கணக்கு ஒன்றும் சொல்ல முடியாது.

Musical Instruments

* 100-HH *Q.*—**SRI A. VEDARATHNAM :** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் சங்கீதக் கருவி செய்யும் தொழிற்சாலை ஒன்று கூட்டுறவு முறையில் நடைபெறுகிறதா ?

(ஆ) அங்கு என்னென்ன கருவிகள் செய்கிறார்கள் ?

(இ) இதற்கு அரசாங்கம் புரிந்து வரும் உதவி என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Musical instruments, such as veena, thambura, violin, flute, mirudangam, harmonium, etc.

(*c*) The following items of financial assistance have been given to the Tanjore Musical Instruments Co-operative Production and Sale Society by the State Government :—

I Reserve Fund grant under the State-aid to Industries Act.	**Rs. 2,000 (for raising the maximum borrowing power of the Society).**
II Working capital loan under the State-aid to Industries Act.	**Rs. 10,000.**

A scheme for the sanction of financial assistance to the society for reorganizing it by means of augmenting its working capital, sanction of free services of supervisory staff, installation of machinery and opening of sales depot at Madras is also under the consideration of Government.

SRI A. VEDARATHNAM : ஸார். சங்கீதக் கருவிகள் செய்யும் இந்தத் தொழிற்சாலையில் கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த பட்டியலில் நாதஸ்வரம் வரவில்லை. இப்போது நாதஸ்வரத்திற்குப் பள்ளிக்கூடம் வைத்து நடத்துகிறார்கள். நாதஸ்வரம் செய்யும் தொழிலாளிகள், தொழிற்சாலைகள் குறைவு, நாதஸ்வரம் செய்யக் கூடியவர்கள்

[8th September 1958

2, 3 பேர்கள்தான் இருக்கிறார்கள். அவர்கள் மறைவதற்குள் அந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக் கொள்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நாதஸ்வரம் செய்வது, வீணை செய்வதைப்போல் அவ்வளவு கஷ்டம் என்று நினைக்கவில்லை. கனம் அங்கத்தினர் சொல்வதிலிருந்து அதைச் செய்வதில் அதிக கஷ்டம் இருந்தால் அது பற்றியும் கவனம் செலுத்தப்படும்.

Srimathi T. N. ANANDANAYAKI : நம் நாட்டில் "யாழ்" என்ற வாத்தியம் மறைந்து போனதை மீண்டும் பெற ஆராய்ச்சி நடத்துகிறார்களா ? இப்போது வீணை செய்வதைப் போன்று செய்து அதை மக்கள் மத்தியில் பரப்ப அந்தத் துறையில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறதா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அகில இந்திய ஹாண்டிகிராப்ட்ஸ் போர்டு சார்பாக சங்கீத வாத்தியாலயம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அது இத்தகைய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறது.

Sri M. JAGANNATHAN : அமைச்சர் அவர்கள், கொடுத்த சங்கீத வாத்தியங்கள் பட்டியலில் பண்டை காலத்திய "யாழ்" என்ற கருவி சேர்க்கப்படவில்லை. அது சேர்க்கப்படுமா ?

Mr. SPEAKER: இப்போதுதான் அதைப் பற்றிச் சொன்னார்கள்.

Tube wells

* 100-II *Q.*—Sri K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the reason for keeping the six exploratory tube wells at Udaiyarpalayam taluk, Tiruchirappalli district, idle without utilizing them for irrigation purposes; and

(*b*) the exact amount of water-rate per acre charged from the ryots.?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The Exploratory Tube Well Organization which sank the wells has been addressed to provide diesel pumpsets to the wells successfully sunk.

(*b*) Out of six wells sunk, two proved to be artesian wells and a water-rate of Rs. 50 per acre was charged tentatively. On a representation made by the ryots that the rate is high, the Collector has submitted proposals for reducing the rate to Rs. 22–8–0 per acre. The matter is under consideration. The water-rate in respect of the remaining wells is yet to be fixed pending receipt of particulars of cost from the Exploratory Tube Wells Organization.

Uppilaputhur tank

* 100-JJ *Q.*—**Sri A. GOVINDASAMY :** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலூகா, மேல்ஒலக்கூர் பிர்க்கா, உப்பிலாபுத்தூர் ஏரியை மராமத்து செய்யவேண்டுமென்று ஊராரிடமிருந்து விண்ணப்பம் ஏதேனும் 6—2—1958-ல் வந்ததா ?

(ஆ) அப்படியானால், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

8th September 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise. However, I may inform the hon. Member that an estimate amounting to Rs. 5,700 for repairs to Uppilaputhur Eri has been sanctioned by the Superintending Engineer (Food Production) and the work is now in progress.

SRI S. PAKKIRISAMI PILLAI : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், நான் முன் தினம் ஒரு ஷார்ட் நோட்டிஸ் கொஸ்டின் ஒன்று கொடுத்தேன், புளியந்தோப்பு தீ விபத்து பற்றி. அதற்கு இன்றைக்கு பதில் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இதுவரையில் பதில் கொடுக்கப்படவில்லை. . . .

MR. SPEAKER : இன்று கொடுப்பதாக யார் சொன்னார்கள் ?

SRI S. PAKKIRISAMI PILLAI : கூடிய சீக்கிரத்தில் கொடுப்பதாக நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

MR. SPEAKER : கூடிய சீக்கிரம் என்றால், இன்று என்று அர்த்தம் இல்லை.

Correction to an Answer †

MR. SPEAKER : The Hon. the Home Minister wanted to make a correction to an answer he gave to a supplementary question the other day regarding "The Hindu" matter. I have permitted him to do so. He will make the statement now.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on a perusal of the reports in the Press about the proceedings of the Assembly the other day, I found that I had answered that I had no information to a supplementary question whether there were two unions in "The Hindu". But when I said "No", I understood the question as whether there were a union sponsored by the proprietors or the management of "The Hindu" and another organized by the workers. In fact, I should have stated that I had no information. I must, of course, admit that I did not listen to the question properly. If the question was whether the Government had information about the existence of two unions in "The Hindu," I must have answered 'Yes'. The Government have that information and, therefore, I wanted to make this correction.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER.

(1) BILLS RECOMMENDED BY THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor of Madras has recommended to the Madras Legislative Assembly the consideration of (1) the Madras District Development Councils Bill, 1958, (2) the Madras Panchayats Bill, 1958 and (3) the Madras Weights and Measures (Enforcement) Bill, 1958.

---

† Vide Short Notice Question No. 1 answered on 5th September 1958.

(2) TIME-LIMIT FOR RECEIPT OF AMENDMENTS TO BILLS.

SRI D. S. AUTHIMOOLAM : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், இந்த சட்ட சபைக் கூட்டத் தொடரிலே வரக்கூடிய முக்கியமான ஒரு மசோதா டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் மசோதா என்று நினைக்கிறேன். அதற்கு இதுவரை 60 திருத்தங்களுக்கு மேலாக வந்திருக்கின்றன. அப்படி இருந்தும் இப்போது அதற்கு ஒரே நாள் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் சபாநாயகர் அவர்கள் மூலமாக சபையில் உள்ள அமைச்சர்களுடையவும், அங்கத்தினர்களுடையவும் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன். இதற்கு இன்னும் கூட ஒரு நாள் கொடுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

* **SRI S. M. ANNAMALAI**: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்று மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்கள் நிறுவுவதற்கான இந்த மசோதாவை செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விடவேண்டுமென்ற திருத்தத்தை நான் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப் படுகிறேன்.

சற்று முன்னல் அம்மையார் அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னையை நான் உண்மையிலேயே ஆதரிக்கிறேன். காரணம், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலினுடைய மசோதா இந்த சட்ட மன்றத்தின் முன்னல் கொண்டு வரப்படாமலிருக்கும்போது, அதை அடிப்படையாக வைத்து இப்பொழுது மாவட்ட அபிவிருத்திக் கவுன்ஸில் நிறுவுவதற்கான மசோதாவை இந்தச் சட்ட மன்றத்திற்கு முன்னல் கொண்டுவருவது என்பது கடைகால் போடுவதற்கு முன்னல் கட்டிடம் போடுவது போல் ஆகும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

அத்துடன், இந்த மசோதாவில் பல குறைபாடுகள் இருக்கின்றன. அக்குறைபாடுகளைச் சொல்லவேண்டுமானல், பல மணி நேரம் ஆகும். உண்மையிலேயே இந்த மசோதாவில் ஜனநாயகம் குழி தோண்டி புதைக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சி மன்றங்களை அபாலிஷ் செய்துவிட்டு, கலெக்டரிடம் அந்த அதிகாரத்தை கொடுத்திருக்கிருர்கள். கலெக்டர் அவர்கள் எவ்வளவோ இலாகாக்களின் அதிகாரங்களை மாவட்டத் தலைநகரிலே வைத்துக்கொண்டு, பல இலாக்காக்களுக்கு அவர் பொறுப்பாளியாக வீற்றுக்கொண்டிருக்கிருர். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமாயின், வடஆற்காடு மாவட்டத்தில் 1955–56-ம் ஆண்டில் செகண்டரி கிரேட் பயிற்சிபெற்ற ஆசிரியர்களை ஹையர் கிரேட் ஆசிரியர் பதவிகளுக்குப் போட்டு விட்டு, இப்பொழுது பாஸ் செய்துவிட்டு வருகின்ற செக்கண்டரி கிரேட் ஆசிரியர்களை செகண்டரி கிரேட் ஆசிரியர் பதவிகளிலேயே நேரடியாக இப்பொழுது போட்டுக்கொண்டு வருகிருர்கள் என்றால் இதைவிட விசித்திரமான ஒரு நிலவரம் வேறு எந்த மாவட்டத்திலாவது காணமுடியுமா என்று கேட்கிறேன். வேறு எந்த மாவட்டத்திலும் காணமுடியாது இதைப்போல இன்னும் எத்தனையோ குறைபாடுகள் எங்கள் மாவட்டத்தில் இருக்கின்றன.

வலது கை இல்லாத பையன் ஒருவனை வாட்ச்மானக போட்டு கலெக்டரிடமிருந்து உத்தரவு வந்தால் வாட்டர்மானக உத்தரவுவருகிறது. வாட்டர்மென்னக போடப்பட்டவனுக்கு வலது கை இல்லை. அவன் எப்படி தண்ணீர் சேந்தி வரமுடியும் என்று கேட்கிறேன். இதுபோன்று எங்கள் மாவட்டத்தில் சொல்ல முடியாத குறைபாடுகள் இருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம், ஒரு கலெக்டரிடத்திலே கொண்டுபோய் எல்லா அதிகாரங்களையும் கொடுத்துவிடுவதுதான். அதன் காரணமாக, எதை

[Sri S. M. Annamalai] [8th September 1958

யும் கவனிக்க முடியாத நிலையில் கலெக்டர் இருக்கிறார். உத்தரவுகளில் கையெழுத்திடவே கலெக்டருக்கு நேரம் இல்லாததினால், என்ன உத்தரவு போட்டோம் என்று கூட தெரியாத நிலையில் இருக்கிறார். அப்படியிருக்க அவரிடமே மேலும் மேலும் அதிகாரங்களைக் குவித்து கொண்டிருப்பது சரியல்ல. நாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். மக்களுக்காக இந்த சட்ட மன்றத்திலே விவாதிக்கின்றோம். அப்படிப்பட்ட நாங்கள் மாவட்ட அளவிலே கலெக்டரிடத்தில் சென்று அவருடைய உத்தரவுக்கு அடங்கி மாவட்ட டெவலப்மெண்ட் கவுன்சிலிலே நடக்கவேண்டுமென்றால, இதைவிட கேவலமான நிலைமை வேறு என்ன இருக்கமுடியும் ? ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைக்கக்கூடிய நிலைமை வேறு எந்த நாட்டிலும் இருக்கமுடியாது. ஆகையால் நான் கொடுத்திருக்கும் திருத்தத்தை எற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். என்னுடைய திருத்தம் என்னவென்றால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களிலிருந்து ஒருவரைத் தலைவராக வைத்தால், எங்களுக்குள்ளேயே பேசக்கூடிய நிலைமை உண்டாகுமென்று நான் இந்த இடத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப் போலவே, பஸ் போக்குவரத்து முதலிய இலாகாக்களையும் இந்த கவுன்சிலில் சேர்க்கவில்லை. பஸ் போக்குவரத்து இலாகா அலுவல் சம்பந்தமாக ஒரு ஸ்டாண்டிங் கமிட்டி அமைக்கப்பட வேண்டுமென்று ஒரு ஷரத்து சேர்க்காமல் இருப்பது மிக மிக வருத்தம் கொடுக்கிறது. காரணம், மாவட்டங்களில் பஸ் போக்குவரத்து சம்பந்தமாக மக்களுக்கு அனேக குறைகள் இருக்கின்றன. பஸ் போக்குவரத்து சம்பந்தமாக ஒரு ஸ்டாண்டிங் கமிட்டி அமைப்பதற்கு வகை செய்யாமல் இந்த மசோதாவில் விடப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, உண்மையிலேயே இந்த சர்க்கார் பஸ் முதலாளிகளுக்கு பயந்துகொண்டுதான் அப்படிச் சேர்க்காமல் இருக்கிறார்களோ என்று அச்சப்பட வேண்டிய நிலைமை இந்த மசோதாவிலிருந்து தெரிகிறது.

ட்ரான்ஸ்போர்ட் சம்பந்தமாக ஸ்டாண்டிங் கமிட்டி இல்லை யென்று இருப்பதைப்போலவே, மின்சார இலாகா சம்பந்தமாகவும் ஸ்டாண்டிங் கமிட்டிக்கு இந்த மசோதாவில் இடம் காணப்படவில்லை. மின்சார இலாகாவானது எலெக்ட்ரிஸிடி போர்டின் மேற்பார்வைக்கு உட்பட்டது என்று இருந்தாலுங்கூட, அதற்கும் ஒரு ஸ்டாண்டிங் கமிட்டி மாவட்ட அளவில் நிறுவப்பட வேண்டுமென்ற முறையில் நான் சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். இந்த மசோதாவை பிரிவு பிரிவாகப் பார்ப்போமேயானால், இது மிக மிக முக்கியமான மசோதாவாக இருக்கிறது. ஆகையால், இதை பொறுக்குக் கமிட்டியின் பரிசிலனைக்கு விட்டால் இன்னும் பல ஆலோசனைகளை எங்களால் சொல்ல முடியும். பஞ்சாயத்து மசோதா இந்தச் சட்ட மன்றத்தினால் விவாதிக்கப்பட்டு அதற்குப் பின்னால் வேண்டுமானால் இந்த மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் நிறுவுவது சம்பந்தமான மசோதாவை இந்த சட்ட மன்றத்தின் முன்னால் வைத்து நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொண்டு, இம் மசோதா செலக்ட் கமிட்டிக்கு விடப்பட வேண்டுமென்ற திருத்தத்தை நான் ஆதரித்து என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI T. T. DANIEL : Mr. Speaker, I welcome this Bill. The object of the Bill seems to be that popular support should be canvassed for the healthy execution of the development schemes in the State. The schemes however laudable they may be, cannot be efficiently and expeditiously put into execution, if, behind the schemes, there is no popular support. It is with that object, the Government have brought in this Bill and to that extent, I believe, the Members of this House will extend their hearty support to the Bill. But the real question is whether the provisions of the Bill

8th September 1958] [Sri T. T. Daniel]

will actually serve the purpose of enlisting popular support to the development schemes, which the Bill aims at. The constitution of the Development Council is the nucleus of the Bill around which the rest of the provisions revolves. One is at a loss to find that the status of the Council is only that of an advisory body. Members of Parliament and State Legislature hailing from the district, all Chairmen of Panchayat Union Councils in the district, all Chairmen of Municipal Councils in the district and Gazetted Officers connected with Planning and Execution of Development Schemes in the district as are nominated by the Government constitute the Development Council. But when we analyse clause 4 we find that the powers of the Development Council are very restricted. It is only an advisory body and its decisions may or may not be accepted by the Government. They may not have even a persuasive effect on the decisions of the Government.

Further if the Collector of the district fails to convene the meeting there are no provisions in the Bill to enable the Members themselves to call for a meeting of the Council. There is no imperative provision in the Bill that a duty is cast on the Collector to convene meetings of the Council failing which the Members of the Council may convene the meeting of the Council. As has been correctly pointed out by another hon. Member that even for giving advice, the advice is to be put to vote. I do not find there is any provision in any such law where a decision of an advisory body is to be taken by votes. 11-00 a.m.

Then, Sir, coming to the appointment of the Collector as the President of the Council, I should say it is only an anamoly. He is the executive head of the district to whom the Development Council has to tender its advice. I do not know why the Collector should again be the head of the advisory body. Because the Collector happens to be the President of the body, I feel a proper discussion of the matter that may be brought before the Council might be hampered.

The existing development committees in the districts have got wider powers than the development councils proposed in the Bill. The existing committees can discuss all matters regarding the administration of the district, but they do not take any decisions. The Collector ascertains the wishes of the members of the committee. But the proposed development councils have got only limited powers to discuss certain schemes which might be brought before them. Even with regard to these schemes there is restriction and the Development Council can consider and tender its advice only on certain schemes sponsored or controlled by certain departments, such as Food and Agriculture, Industries, Labour and Co-operation, Public Works, Health, Education and Local Administration. Regarding the other schemes the Development Council has not got the power even to tender its advice to the Collector. That is the position to which the Development Council has been degraded. I should say, Sir, that the proposed council is not an improvement

over the existing committee but is an attempt at taking away the rights and previleges of the Members of the Legislature as well as of Parliament. The Government, I believe, should have reliance on the representatives of the Assembly and Parliament. They should remember that the representatives of the people also have a certain share of the burden in the running of the administration by the Government. But here, Sir, is a Bill which is an insult to the rights and prestige and self-respect of the representatives of the people of this country. I am afraid, Sir, that the Bill far from producing the desired effect, may have a disastrous effect. The Members feel actually that they are humiliated by the constitution of this statutory body called the Development Council. I would therefore, say that the Government should seriously consider all these problems and must try to improve the status of the Development Council.

* Sri K. R. VISWANATHAN : அவைத்தலைவர் அவர்களே, மாவட்ட வளர்ச்சி மன்ற மசோதாவின் மீது சில வார்த்தைகள் சொல்ல ஆசைப் படுகிறேன். மாவட்ட வளர்ச்சி மன்ற மசோதாவானது ஜில்லா போர்டுகளை எடுத்துவிட்டு அதனிடத்தில் அமைய வேண்டிய அமைப்புக்களில் ஒன்றாகும். ஜில்லா போர்டை எடுத்துவிட்ட பிறகு மூன்றுவித அமைப்புகளில் பல் வந்தராய் குழு சிபார்சு செய்தபடி மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒன்றாகும். அதற்குமுன் இருந்த ஜில்லா போர்டுகளை எடுத்து இப்போது ஐந்தாறு மாதங்கள் ஆகின்றன என்று நினைக்கிறேன். நிர்வாகம் அதிகாரிகள் கையில் ஒப்படைக்கப்பட்ட ஐந்தாறு மாதங்களுக்குள்ளாகவே அருவருக்கத் தக்க சில விஷயங்கள் நடந்துகொண்டு செல்கின்றன. எவ்வளவு விரை வில் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள், பஞ்சாயத்துக் குழுக்கள் அமைக்கப் படுகின்றனவோ அவ்வளவு விரைவில் நிர்வாகமானது நாட்டில் நல்ல முறையில் நடப்பதற்கு ஏதுக்கள் இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டி, இந்த வளர்ச்சி மன்றங்களில் மசோதாவைப் பற்றிய சில கருத்துக்களை மட்டும் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த வளர்ச்சி மன்றத்தில் முக்கியமாக உறுப்பினர்களாக இருக்கக் கூடியவர்கள் ஜில்லா கலெக்டர், சட்டசபை உறுப்பினர்கள், பார்லிமெண்ட் உறுப்பினர்கள், பஞ்சாயத்துக் குழுக்களின் தலைவர்கள், பஞ்சாயத்து போர்டினுடைய பிரதிநிதிகள் என்கிற முறையில் இருக்கிறது. எங்கெங்கு பஞ்சாயத்து குழுக்கள்—யூனியன்கள்—அமைக்கப்படவில்லையோ, அங்கெல் லாம் பஞ்சாயத்து வாக்காளர் பட்டியலில் பெயர் இருக்கக் கூடிய ஒருவர் பஞ்சாயத்து பிரதிநிதியின் தலைவராக வரலாம் என்று காணப்படுகிறது. அவர் தலைவராகக்கூட இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்படி ஏன் தலைவராக அல்லது உறுப்பினராக இல்லாத ஒருவருக்கு அந்தத் தகுதியை கொடுக்க வேண்டுமென்று கேட்க ஆசைப்படுகிறேன். பஞ்சாயத்து தலைவராக இருக்க வேண்டிய அவசியம் இல்லையென்றாலும் கட்டாயம் பஞ்சாயத்து உறுப்பினராகவாவது இருக்கவேண்டும் என்று இருப்பது தான் நல்லது. அப்போதுதான் அந்த வளர்ச்சி மன்றத்தில் பஞ்சாயத் துக்களின் சார்பாக தம் கடமையை சரிவர நிறைவேற்ற முடியும் என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இந்த வளர்ச்சி மன்றங்களின் தலைவராக மாவட்ட கலெக்டர்கள் இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. இதற்கு முன் பேசிய உறுப்பினர்கள் தலைவராக கலெக்டர் இருப்பதற்குத் தகுதி இல்லை யென்று சொல்லியிருக்கிறார்கள். நாம் அறிவோம், திட்டக் குழு கூட்டங் களில் கலெக்டர்கள் தலைவராக இருக்கிறார்கள். அப்படி இருப்பதனால் பல உறுப்பினர்கள் மனம் விட்டுப் பேச முடியாத நிலைமையில் இருக் கிறார்கள். கலெக்டர் அவர்களும் பேசக் கூடிய விஷயங்களைக் கட்டுப் படுத்துகிறார்கள். இந்த விஷயங்களைத்தான் விவாதிக்கலாம், இந்த

8th September 1958] [Sri K. R. Viswanathan]

விஷயங்களைவிவாதிக்கக்கூடாது என்று தடைப்படுத்துவதை திட்டக் குழு கூட்டங்களிலிருந்து அறிவோம். ஆகையால் நான் சொல்கிறேன், மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு கலெக்டர் தலைவராக இருக்கவேண்டிய அவசியம் இல்லை, வேண்டுமானால் மாவட்ட மன்றச் செயலாளர்களாக அவர்கள் இருக்கலாம். தலைவராக இருந்து அவர்கள் சாதிக்கக் கூடிய விஷயங்களைச் செயலாளராக இருந்தாலேயே சாதித்துக்கொள்ள முடியும். மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் தலைவர்களாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் ஒருவர் இருப்பதுதான் நல்லது. அதோடு ஐந்தாண்டுக்கு ஒரு முறை தலைவராகத் தேர்ந்தெடுப்பதைவிட்டு, ஒவ்வொரு ஆண்டுக்கும் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவது நலம் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக நிரந்தரக் குழு அமைப்பு பிரிவு இருக்கின்றது. அது சில விஷயங்களைப்பற்றி நிரந்தரக் குழு அமைக்க வேண்டுமென்று திட்டமிடுகிறது. நான் முக்கியமாக மற்றொரு குழுவை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் பிற்பட்ட பகுதி 'அன்டர் டெவெலெப்டு எரியா' முன்னேறாமல் இருக்கின்றன. சர்க்காரோ, ஜில்லாவில் இருக்கிற மாவட்ட கலெக்டரோ அந்த மாவட்டம் முழுமையும்பற்றிப் பேசுகின்றார்களே தவிர அந்த ஜில்லாவில் உள்ள பின்தங்கிய பகுதியைப்பற்றிச் சிறப்பாகச் சொல்வது கிடையாது. உதாரணமாக, திருச்சி ஜில்லாவை எடுத்துக்கொண்டால், திருச்சி தாலூகா குளித்தலை தாலூகா போன்ற மிகவும் முற்பட்ட பகுதிகள்தான் அவர்கள் கண்களில் இருக்கின்றன; பிற்பட்ட பகுதிகளாகிய உடையார்பாளையம், கரூர் போன்ற மற்ற பகுதிகளை முன்னேற்றமடையச் செய்வதில் அவர்கள் கவனம் செலுத்துவது கிடையாது. ஆகையால் ஒவ்வொரு மாவட்டத்தில் இருக்கும் பின்தங்கிய பகுதிகளுக்கும் ஒரு நிரந்தரக் குழு அமைக்கப்பட வேண்டும். இந்தக் குழுவானது பிற்பட்ட பகுதிகளை கவனித்து அவைகளை முன்னேற்றமடையச் செய்வதற்குரிய யோசனைகளை மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்கோ சர்க்காருக்கோ சிபாரிசு செய்யும் ஸ்தாபனமாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நிரந்தரக் குழுக்களை அமைக்க, இந்த மசோதாவில் வகைசெய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மாவட்ட வளர்ச்சி மன்றமானது ஒரு ஆலோசனை குழுவாகத்தான் இருக்க முடியும் என்பதை நான் எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். ஜில்லா போர்டு நிர்வாகமானது, பஞ்சாயத்து போர்டு என்ற நிலையிலேயும் பஞ்சாயத்து யூனியன் என்ற நிலையிலேயும் ஆங்காங்கே இருக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களுக்கு முழு அதிகாரமும் அளிக்கப்பட்டுள்ளதால், மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒரு அறிவுரைக் குழுவாக மட்டும் அமையவேண்டியுள்ளது. அரசியல் அனுபவம் முதிர்ந்த மக்களின் அறிவையும் ஆற்றலையும் சர்க்கார் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதற்கிணங்க—'அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை திறன் அறிந்து தேர்ந்து கொளல்' என்று திருவள்ளுவர் கூறியதற்கிணங்க, சர்க்கார் இந்த ஏற்பாட்டைச் செய்கிறார்கள். பஞ்சாயத்துக்களின் நடவடிக்கைகளையும், பஞ்சாயத்து யூனியனின் நடவடிக்கைகளையும் நடத்துவது சம்பந்தமான யோசனைகளைக் கூறுவதற்கான ஒரு ஆலோசனைக் குழுவாகத்தான் மாவட்ட வளர்ச்சி மன்றத்தை சர்க்கார் அமைக்கிறார்களே தவிர, அதை ஒரு தனிப்பட்ட அதிகாரம் கொண்ட குழுவாக அமைக்கவில்லை. பஞ்சாயத்துக் குழு பஞ்சாயத்து கூட்டுக் குழு இந்த இரண்டு குழுக்களிடமும் தான் முழு அதிகாரமும் வழங்கப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டிவிட்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

Sri V. SUBBIAH : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவானது, ஜில்லா போர்டுகளுக்கு பதிலாக ஜில்லா வளர்ச்சிக் குழுக்கள் என்ற புதிய ஸ்தாபனங்களை அமைக்க வேண்டுமென்று கூறுகிறது. இந்தக் குழுக்கள், மசோதாவின்படி பார்த்தால், ஜனநாயக முறைக்கு மாறுபட்ட முறையில் அமைக்கப்படுகின்றன என்றுதான் மசோதாவை நான் படித்த வரையில் எனக்குத் தெரிகிறது. ஜனநாயக வளர்ச்சி

[Sri V. Subbiah] [8th September 1958

மேலோங்கியிருக்கும் பல மேனுடுகளில், பஞ்சாயத்துக்கள், முனிசிபாலிடிகள் போன்ற ஸ்தல ஸ்தாபனங்களுக்கு பரிபூரண சுதந்திரம் கொடுக்கப் பட்டு வருகிறது. ஆனுல் இந்த நாட்டிலே அதற்கு நேர்மாறுன நிலைமை யைத்தான் காண்கிறேம். நான் விஞேபாஜீயின் பேச்சை பிரார்த்தனைக் கூட்டங்களில் கேட்டிருக்கிறேன். இந்த நாட்டில் டெல்லியிலும் சென்னை யிலும் அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன என்று அவர் கூறுவார். அவர் அவ்வாறு குறிப்பிடுவதை இந்த மசோதா ஊர்ஜிதப்படுத்துகிறது. ஜில்லா போர்டுகள் சுதந்திரமற்ற நிலையில் இருந்தன. அதே நிலையில் இருக்கக் கூடியவையாகத்தான் ஜில்லா அபிவிருத்திக் குழுக்களும் மசோ தாவில் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், பஞ்சாயத்து யூனியன் அமைக்கப்படாத இடங்களிலிருந்து ஜில்லா அபிவிருத்தி கவுன்சிலுக்கு பிரதிநிதிகள் அனுப்பப்பட வேண்டுமென்ருல், வாக்காளர் பட்டியலிலிருந்து ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படலாம் என்று மசோதாவில் குறிப் பிடப்பட்டிருக்கிறது. இது என்றுமே இல்லாத, ஜனநாயகத்திற்கு முரண் பட்ட முறை. இந்தப் பகுதியைத் திருத்த வேண்டும்.

அடுத்தபடியாக, ஜில்லா போர்டில் 50-க்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் இருந்தனர். ஆனுல் ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலானது, 100-க்கு மேற்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட பெரிய சபையாக இருக்கும். ஆனுல் ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலுக்கு அளிக்கப்படும் அதிகார மட்டும் குறைவானது. இந்தக் கவுன்சிலுக்குத் தலைவராக ஜில்லாக் கலெக்டரை நியமிப்பது ஜனநாயகத்திற்கு முரணுனது. மேலும், இப்போது ஜில்லாக் கலெக்டருக்கு ஜில்லா ரீதியில் எவ்வளவு பொறுப்பு இருக்கிறது என்பது இங்கே வீற்றிருக்கும் உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். ஜில்லா ரீதியில் கலெக்டருக்கு எவ்வளவு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பது என்பதும் உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். ஜில்லாக் கலெக்டர் கள் நிர்வாகத்தை நடத்த எவ்வளவு திணறுகிருர்கள் என்பதையும் நாங்கள் பார்க்கிறேம். ஜில்லா திட்டக் குழுக் கூட்ட அனுபவத்தின் மூலம் இவைகளை யெல்லாம் நாங்கள் அறிந்திருக்கிறேம். கலெக்டர்கள் இந்த நிலையில் இருக்கும்போது, ஜில்லா அபிவிருத்திக் குழு சம்பந்தமான பொறுப்பையும் அவர்கள் தலையில் சுமத்திஞல், அவர்கள் ஜில்லாக்களை நல்ல முறையில் நிர்வகிக்க முடியாது. ஆகையால் அதிகாரப் பற்றற்ற ஒருவரை ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலின் தலைவராகத் தேர்ந்தெடுப்பது நல்ல ஏற்பாடாக இருக்கும் என்று நம்புகிறேன். அந்த ஏற்பாடு ஜன நாயக முறைக்கு உகந்ததாகவும் இருக்கும்.

மேலும், அமைச்சரவையினரின் ஜில்லாப் பிரிவினை யோசனைகள் சர்க் காரால் பிரகடனப்படுத்தப்பட்ட (நோடிபை பண்ணப்பட்ட) பிறகு ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்களால் ஒப்புக்கொள்ளப்பட வேண்டுமென்று, நான் படித்த அளவில், எனக்குத் தெரிகிறது. அப்பேர்ப்பட்ட ஜனநாயகப் பறி முதல் இந்த மசோதாவில் இருக்கிறது. ஜனநாயகம் நல்ல முறையில் செயல்பட வேண்டும். ஜில்லா போர்டுகளுக்குப் பதிலாக இயங்கக் கூடிய சபைகளில் மக்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும். அந்த சபைகளுக்கு போதிய அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும். நிறைய பஞ்சாயத்து கவுன்சில்களை அமைத்தால், அது நல்ல ஏற்பாடாக இருக்கும். பல கிராமங்களின் பஞ்சாயத்து கவுன்சில்களின் மூலம் ஒரு தாலூகா நிர்வாகத்தை நடத்தலாம்.

இன்னென்றும் சொல்ல விரும்புகிறேன். ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலில் இரண்டு—மூன்று 'நான்-அபிஷியல்' மெம்பர்களை நிய மிக்கும்போது, அந்த ஸ்தானங்களுக்கு கிராமப் பகுதியிலுள்ளவர்களை நியமிக்க வேண்டும். அவர்கள்தான் முன்னேற்றத்திற்கான யோசனைகள் சொல்வதற்குரிய அறிவும் அனுபவமும் படைத்தவர்களாக இருப்பார்கள். ஏனென்ருல், கிராமப் புறங்களில்தான் நேரிடையாக விவசாயம் செய்பவர் களில் 80 சத விகித மக்கள் இருக்கிருர்கள். கிராம முன்னேற்றத்திற்கான யோசனைகள் சொல்வதற்குரிய அறிவும் ஆற்றலும் அவர்களுக்கு இருக்கும். அப்படிப்பட்ட அறிவாளிகளை 'நான்-அபிஷியல்' மெம்பர்களாக நியமிப்பது

தான். நல்லது. அப்படியின்றி, தொழில் துறையிலுள்ளவர்களையும், முனிசிபாலிடி, கார்ப்பொரேஷன் போன்ற இடங்களிலுள்ள அறிவாளி களையும் அந்த ஸ்தானங்களுக்குத் தேர்ந்தெடுப்பது பொருத்தமாக இருக் காது என்று கூறிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

Sri S. LAZAR: கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பற்றிப் பேச நான் முற்படுகிறபோது, ஒரு முக்கியமான கருத்தை மனதில் கொள்ள வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். ஜில்லா அபிவிருத்திக் குழுக்கள் என்ற ஸ்தாபனங்கள் அமைக்கப்பட வேண்டு மென்ற நோக்கத்துடன் இந்த மசோதா நம் முன்பு வைக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரின் திட்டக் கமிஷனைப் போன்று இந்தக் குழுக்கள் அமைய வேண்டும் என்ற நோக்கத்துடன் மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரின் திட்டக் கமிஷன் அவ்வப்போது மத்திய சர்க்காருக்குத் திட்டங்கள் சம்பந்தமாக ஆலோசனைகள் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அதைப் போல், திட்ட வேலைகள் சம்பந்தப்பட்ட வரையில் ஜில்லாக் கலெக் டர்களும் மற்ற அதிகாரிகளும் தங்கள் வேலைகளை சரிவரச் செய்கிறார்களா என்று கவனித்து அபிப்பிராயம் கூறுவதுடன், எந்தெந்த முறைகளைக் கையாண்டால் திட்டங்களை இன்னும் சிறந்த முறையில் நிறைவேற்ற முடியும் என்பதுபற்றி ஆலோசனைகளும் கூறும் குழுக்களாக ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்கள் அமைய வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது; அவைகள் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டவையாக இருக்க வேண்டும் என்பதும் மசோதாவின் நோக்கம். இதில் குறிப்பாக ஒரு விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். மத்திய சர்க்காரின் திட்டக் குழுவில் தலைமை வகிப்பவர் தனிப்பட்ட ஒருவர் ஆவார். அதேபோல், ஜில்லா அபிவிருத்திக் குழுவிலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் தலைவராக இருப்பதுதான் முறையாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்; கலெக்டர் திட்ட வேலைகளை யெல்லாம் செய்த போதிலுங்கூட, அவரை குழுவில் அங்கத் தினராகக் கொண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரை குழுவின் தலைவ ராக ஆக்குவதுதான் முறையாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இந்த மசோதாவில், " டிஸ்ட்ரிக்ட் " என்ற வார்த்தையின் பொருள் இரண்டாவது பிரிவில் வரையறுக்கப்பட்டிருக்கிறது. அந்த வார்த்தையின் பொருள் இரண்டாவது பிரிவில் வரையறுக்கப்பட்டிருந்த போதிலும்கூட, 3-வது பிரிவில் அந்த வார்த்தைக்கு விளக்கம், அதிக விளக்கம் கொடுக்கப் பட்டிருக்கிறது இப்படிப்பட்ட முறை எந்தச் சட்டத்திலும் இல்லை. ஒரு வார்த்தையின் பொருளை வரையறுக்கும்போது, அதன் பொருளை ஒரே இடத்தில் ஒரே விதமாக வரையறுக்கவேண்டும், இல்லாவிட்டால் சட்டம் முரண்பாடான கருத்துக்களைக் கொடுக்கக்கூடியதாக ஆகிவிடும். அந்த வார்த்தைக்கு 3-வது பிரிவில் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்தை, " **rules and procedure**-ஐ பிரகடனப்படுத்துவது " என்ற முறையில் சர்க்கார் பிறகு கொடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்று குறிப்பிட விரும்புகிறேன் "பஞ்சாயத்து", " பஞ்சா யத்து யூனியன் கவுன்சில் " என்ற பதங்களுக்கு இரண்டாவது பிரிவில் அர்த்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் அர்த்தம் இன்னதென்று கொடுக்கப்படவில்லை; ஆனால், 1958-ம் வருஷத்திய பஞ்சாயத்துச் சட்டத்தில் அந்தப் பதங்களுக்குக் கொடுக்கப்படும் அர்த்தத்தை இந்தச் சட்டத்திலும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "1958-ம் வருஷத்திய பஞ்சாயத்துச் சட்டம்" இந்த வருடத்திற்குள் இயற்றப்பட்டு விடுமானாலும், அது தவறு என்று தீர்ப்புக் கூறப்படுமோ என்ற அச்சம் இருக்கிறது. எனவே, பஞ்சாயத்துச் சட்டத்தை முதலில் இயற்றிவிட்டு, அதற்கு பிறகு ஜில்லா அபிவிருத்தி கவுன்சில்கள் சட்டத்தை இயற்றலாம் என்று யோசனை சொல்ல விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தப்படியாக நாலாவது பிரிவிலே எந்தெந்த அங்கத்தினர் 11-20
களைக் கொண்டு இந்த அபிவிருத்திக் குழு அமையவேண்டுமென்று அதில் a.m.

[Sri S. Lazar] [8th September 1958

கண்டிருக்கிறது. அதில் முதலாவதாக 'ஏ' என்ற பிரிவில் ஜில்லாக் கலெக்டர் என்று சொல்லி அந்த ஜில்லா கலெக்டர் யார் என்றால் 'If the district comprises of parts of two or more revenue districts, the Government may by notification, dellacre which Officer shall be considered to be the District Collector in respect of that district for toe purposes of this Act.' என்று அமைந்திருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் என்று சொன்னபிற்பாடு அதற்கு நேர் கீழாக அந்த வாக்கியங்கள் அமையவேண்டும். அதுதான் பொருத்துமாக இருக்கும். அடுத்தபடியாக, இந்த அபிவிருத்திக் குழுவிற்கு தலைமை தாங்கக் கூடியவர் ஜில்லாக் கலெக்டர் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இந்த சபையில் பேசிய அங்கத்தினர்கள் அத்தனை பேரும் இது சரியான முறையல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். அது பற்றி நான் சொல்வது என்னவெனில், எந்த ஒரு நபர் காரியத்தை செயலில் கொண்டுவர வேண்டுமோ அவரே தலைமை தாங்குவதற்குப் பதிலாக மக்களின் பிரதிநிதி ஒருவரை தலைவராகக்கொள்வதே நல்லது. அடுத்தபடியாக, நாலாவது பிரிவிலே யார் யார் இந்தக் குழுவில் இருக்கலாம் என்பது பற்றி வரையறுக்கிறபோது அதில் மெம்பர் ஆப் பார்லிமெண்ட், மெம்பர்ஸ் ஆப் ஸ்டேட் லெஜிஸ்லேசர் என்று கொடுக்கப்படுகிற போது ஒரே ஒரு திட்ட குழுவில்தான், ஒரு அபிவிருத்தி குழுவில்தான் அங்கம் வகிக்கலாம் என்று அமைந்திருக்கிறது. இதில் நாம் குறிப்பாக கவனிக்க வேண்டியது என்னவென்றால், குறிப்பிட்ட இரு பிரிவினருக்கு இதிலிருந்து நாம் விதிவிலக்கு கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. முதல் பிரிவு பார்லிமெண்ட் அங்கத்தினர்கள், இரண்டாவது பிரிவு, லோக்கல் அத்தாரிட்டீஸ் கான்ஸ்டிட்யூயன்ஸி வரயிலாக தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், அதாவது மேல் சபையில் உள்ள நபர்கள். அவர்களின் தொகுதி பரந்திருக்கிற காரணத்தினால் அவர்கள் ஒவ்வொரு பிரிவோடும் நேரடியான தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தினால் இந்தப் பிரிவினரை மட்டும் மூன்றாவது உப பிரிவில் இருந்து விதிவிலக்கு கொடுக்க வேண்டியது மிகமிக அவசியம் என்பதை உணர்ந்து அரசாங்கம் இதை அவசியம் நிறைவேற்றிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அடுத்தபடியாக இந்த ஆலோசனை சொல்லக்கூடிய குழுவானது, ஆலோசனைகளை மட்டுந்தான் சொல்ல முடியுமே தவிர அந்த ஆலோசனைகள் மீது எடுக்கப்படுகிற முடிவுகள் என்ன பின்னால் அவைகள் என்னவாகின்றன என்பதைப்பற்றி இந்த மசோதாவில் எந்தவித ஒரு குறிப்பும் இல்லை. இப்பொழுது ஏற்கனவே ப்ளானிங் போர்ட் போன்ற குழுக்கள் அமைந்து செயலாற்றிக் கொண்டு வருகிற போது அந்நிலையில் இதுபோன்ற "ஸ்டாட்டுட்டரி பாடி" யின் தேவை என்னவென்று எனக்குப் புரியவில்லை. அப்படி அது தேவை என்று அரசாங்கம் நினைக்கிறபோது அவர்கள் கொடுக்கிற முடிவினை, அவர்களின் தீர்ப்பை செயலுக்குக் கொண்டு வர அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி 'The Government shall as far as possible put into practice or carry out the decisions of the Development Council' என்ற ஒரு பிரிவையும் இதில் சேர்த்திருந்தால் உள்ளபடியே இந்தக் குழுவிற்கு ஒரு உற்சாகம் இருக்கும். நாம் சொல்லக்கூடிய ஆலோசனைகளுக்குப் பின்னால் நல்ல ஒரு முடிவு இருக்கிறது என்பதை மனதில் கொண்டு அவர்கள் உற்சாகத்தோடும், ஆர்வத்தோடும் அதில் செயலாற்ற முன்வருவார்கள் என்று சொல்லிக்கொண்டு இந்த மசோதாவைப்பற்றி பேசிய ஸ்ரீ கோவிந்தசுவாமி அவர்கள், மூன்று மாதத்திற்கு ஒருமுறைதான் இது கூட இருக்கிறது என்றும் அதனால் செய்யவேண்டிய பல காரியங்களை நல்ல முறையில் செய்ய முடியாது போகும் என்றும் சொன்னது சரியல்ல. அதிகபட்சமாக மூன்று மாத காலம் இருக்கலாமே தவிர அதற்குள் கூட்டத்தைக் கூட்டுவதற்கு கலெக்டர் அவர்களுக்கு இப்பொழுதுள்ள முறைப்படி அதிகாரம் இருக்கிறது. அப்படி அவர்கள் கூட்டவில்லை என்று சொன்னாலுங்கூட அதில் அங்கம் வகிக்கும் மற்றவர்கள் அதை அடிக்கடி கூட்ட வேண்டுமென்று கேட்பதற்கு அதில் இடம் இருக்கிறது. அதேபோல் கிராமங்களுக்கு தேவையான ரஸ்தாக்கள், அல்லது பஸ்கள் போன்ற

8th September 1958] [Sri S. Lazar]

காரியங்களை எடுத்துச் சொல்ல அல்லது புதுத்திட்டங்கள் வகுத்துக் கொடுக்கவோ அங்கத்தினர்களுக்கு அதில் அதிகாரம் இல்லை என்று சொல்வது சரியல்ல. லோக்கல் அட்மினிஸ்ட்ரேஷன் சம்பந்தமாகவும் நாம் ஆலோசனை சொல்ல முடியும் என்ற முறையில் பிரிவுகள் அமைந்துள்ளது. ஆனால் எந்தெந்தக் காரியங்களைப் பற்றி மட்டிலும் நாம் சொல்லமுடியும் என்பது அதில் வரையறுத்துச் சொல்லவில்லை. எனக்குத் தெரிந்த வரையில் இந்தப் பிரிவுகள் பிரகாரம் சகல காரியங்களைப் பற்றியும் நாம் ஆலோசனை சொல்ல, குறிப்பாக திட்ட அபிவிருத்திசம்பந்தமாக ஆலோசனைகள் சொல்வதற்கு இதில் இடமளிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே இந்த் மசோதாவில் ஒரு சில திருத்தங்களைக் கொண்டு வந்து இதை மாற்றியமைக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* Sri V. SANKARAN : அவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட அபிவிருத்தி சபைகள் மசோதாவின் மூலாதாரத்தை பார்க்கவேண்டுமென்றால் முதலில் ப்ளானிங் கமிஷனின் ரிப்போர்ட்டின் 159 முதல் 164-வது பக்கங்களுக்கு உள்ளில் இருப்பதைப் ப்ர்த்தால் இதன் மூலத்தின் அடிப்படையைக் காணலாம். முக்கியமாக இந்த ஒரு சபையின் அவசியம் என்னவென்றால், முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பலவித ஜில்லா அபிவிருத்திக் குழுக்களும் திட்டக் குழுக்களும் பல ராஜ்யங்களிலும் சரியாக இயங்கவில்லை என்ற காரணந்தான். அதற்கு மாற்றாக இந்த ஜில்லா போர்ட் சபைகள், ப்ளாக் அபிவிருத்திக் குழுக்களை உடனடியாக அமைக்க வேண்டுமென்று ப்ளானிங் கமிஷன் ரிப்போர்ட்டில் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், ஜில்லா அடிப்படையில் அபிவிருத்தி வேலையில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகள் பொது மக்களின் பிரநிதிதிகளுடன் தொடர்பு கொண்டு, பல துறைகளிலும் ஈடுபட்டிருப்பவர்களுடன், பொது ஜன நலனில் அக்கறை கொண்டுள்ளவர்களுடன் சேர்ந்து வேலை செய்தால்தான் அபிவிருத்தி வேலைகள் உண்மையில் நன்கு பூர்ணமாக பலன் அளிக்க முடியுமென்ற கருத்து ரிபோர்ட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக, அலுவல்களைப் பற்றி சொல்லப்படும்போது, ஒவ்வொரு ஜில்லாவிலும் செய்யப்படவேண்டிய வேலைசள், சமுதாய அபிவிருத்தி வேலைகள், ஸ்தல அபிவிருத்தி திட்ட வேலைகள் எவ்வாறு விரைவில் நடத்தப்பட்டு நல்ல பலன் தரத்தக்க முறையில் நடக்க வேண்டுமென்பதற்கும், காலாகாலத்தில் அப்போதைக்கப்போது சபை கூடி திட்டங்கள் எவ்வளவுதூரம் நிறைவேறியிருக்கிறது என்பவைகளை கண்காணித்து மேலும் நடத்த வேண்டிய வேலைகளைப் பற்றியும் யோசனைகள் சொல்லவும் வேண்டுமென்று இருப்பதை ப்ளானிங் கமிஷன் ரிப்போர்ட்டில் காணலாம். மூன்றாவதாக அதன் அநுகூலங்கள் என்ன என்பதைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதிகாரிகளும் பொதுமக்களின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் சேர்ந்து ஆலோசித்து ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு காரியங்களில், திட்ட வேலைகளில் ஈடுபடுவார்களேயானால் திட்ட வேலைகள் நன்கு அமைவதோடு அவைகள் துரிதமாக நடைபெறவும் முடியும், அப்படியிருந்தால்தான் பூர்ண பலனையும் காண முடியும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு ஜில்லா சபைகள் அடிக்கடி கூடி Seminar-கள் மூலமாகவும் கூடி தங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தையும், பலன்களையும் பரிமாறி கொள்வதன்மூலம் அபிவிருத்தித் திட்டங்களினால் நாம் அதிக பயனை அடைய முடியுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில்தான் வெள்ளை அறிக்கையிலும் ஒரு பகுதி சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பல நல்ல அம்சங்கள் அடங்கிய இந்த மசோதாவை எல்லோரும் ஆதரிக்க வேண்டும். ஆனால் இதில் ஒரு சில குறைகளும் இருக்கின்றன. அவைகளை மட்டும் மாற்றி விட்டால் இம்மசோதா பூர்ணமாக நல்ல முறையில் நன்கு அமைந்துவிடும், என்று நினைக்கிறேன். உதாரணமாக, இரண்டாவது ஷரத்தில் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில் என்பவைகளுக்கு மதராஸ் பஞ்சாயத்து ஆக்ட், 1958-ல் கொடுக்கப்பட்டுள்ள அர்த்தந்தான் வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கு முன் பேசிய அம்மையார்

அவர்கள் சொன்ன ஆட்சேபணைகளை தணிக்கும் விதத்தில் நான் ஒரு அமெண்ட்மெண்ட் கொடுத்திருக்கிறேன். மதராஸ் பஞ்சாயத்து ஆக்ட், 1958 என்பதை விட "ரெலவன்ட் எனுக்ட்மெண்ட்" என்று வைத்துக் கொள்ளலாம் பின்னுல் வந்தால் அப்பொழுது அந்த வாசகத்தை மாற்றிக் கொள்ளலாம். மூன்ருவது ஷரத்தில், ஜில்லாக்களை பிரிக்கும் விஷயத்தில், நோட்டிபிக்கேஷன் மூலம் வேண்டுமானுல் ஒரு ரெவன்யூ டிஸ்ட்ரிக்ட்டில் இருப்பதையோ அல்லது இன்னெரு டிஸ்ட்ரிக்ட்டில் இருப் பதையும் சேர்த்தோ இதற்காகவுள்ள (இந்த ஆக்ட்படியுள்ள) ஒரு டிஸ்ட் ரிக்ட்டாக்கி அதற்கு ஒரு பெயர் கொடுக்கலாம் என்று இருக்கிறது. அடுத்த படியாக, ஒரு டிஸ்ட்ரிக்ட்டிலிருந்து அதில் உள்பட்ட ஒரு ஏரியாவை நீக்கவோ, அல்லது அந்த டிஸ்ட்ரிக்ட்டின் அருகாமையில் உள்ள ஒரு ஏரியாவை அதில் சேர்க்கவோ, உப-பிரிவு (2)-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள நோட்டிபிக்கேஷனை கான்ஸல் செய்யவோ, அந்த ஜில்லாவின் பெயரை மாற்றவோ செய்வதற்குள்ள அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. செக்ஷன் 3, 3-வது பிரிவு (i) and (ii) உட்பிரிவில் நோட்டிபிக்கேஷனுக்கு காரணம் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. ஆனுல், (iii) and (iv) உட்பிரிவிற்கு, காரணம் கொடுக்கப்பட வேண்டும் என்பது சேர்க்கப்பட வில்லை. அதையும் சேர்க்கவேண்டும்.

11-30 a.m. அடுத்தபடியாக டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸில் மெம்பர்கள். அதிலுள்ள உறுப்பினர்களை எடுத்துக்கொண்டுப் பார்த்தால் பெரும்பாலும் பார்லிமெண்ட் மெம்பர்களும் ஸ்டேட் லெஜிஸ்லேச்சர் மெம்பர்களும் தான் இருக்கிருர்கள். இப்போது இருக்கின்ற முறையைப் பார்த்தால் எந்த பிரதிநிதியும் தான் பிரதிநிதித்துவம் வகிக்காவிட்டாலும் வேறு ஜில்லாவில், வகித்தால், அந்த ஜில்லாவில் உறுப்பினர்களாக இருந்துகொள்ளலாம் என்றிருக்கிறது. அந்தந்த ஜில்லாக்களிலும் இருந்து கொள்ளலாம். பிரதிநிதித்துவம் இல்லாத ஜில்லா கவுன்ஸிலிலும் இருந்துகொள்ளலாம் என்று இரண்டு விதமாக சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. நான் கூறுவது என்னவென்ருல் எந்த தொகுதிக்கு ஒரு மெம்பர் பிரதிநிதித்துவம் வகிக்கிருரோ அந்த தொகுதி இருக்கக்கூடிய ஜில்லா கவுன்ஸிலில் தான் உறுப்பினராக இருக்கலாம் என்று இருக்கவேண்டும். அப்படி யிருந்தால் பொது நலத்தில் சேவை செய்வதற்கு சாதகமாக இருக்கும். அந்த தொகுதி இருக்கக்கூடிய ஜில்லாவை தவிர வேறு இடங்களில் வசித்தாலும் அதில் உறுப்பினராக இருப்பதற்கு வசதி அளிக்கக்கூடாது. அப்போதுதான் பப்ளிக் இண்டரஸ்ட்டை பாதுகாப்பதாக இருக்கும். இவ்விதம் இரண்டு இடங்களில் இருக்கலாம் என்று வெள்ளை அறிக்கையில் சொல்லப்படவில்லை. வெள்ளை அறிக்கையில் இதைப்பற்றி ஒன்றும் காணும். இப்போது இதை கூடுதலாக சேர்த்திருப்பது நல்லதல்ல என்பது என் அபிப்பிராயம். ஆகவே இந்த சலுகையை எடுத்துவிட்டால் இந்த முறை நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். அடுத்ததாக ஜில்லாக்களை பிரிக்கும் விஷயத்தில் 21 ஜில்லாக்களாக பிரிப்பதாக வெள்ளை யறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது 21 ரெவின்யூ டிவிஷன் களாக இருக்கின்றன. இந்த ரெவின்யூ டிவிஷன்களையே அடிப்படையாக வைத்துக்கொண்டு டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸில் ஏற் படுத்தலாம் என்று வெள்ளை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனுல் இதில் இருக்கிற சிக்கல் என்னவென்ருல் சில ரெவன்யூ டிவிஷன்கள் சேர்ந்து ஒரு பார்லிமெண்ட் தொகுதியாக இருக்கும். உதாரணமாக மதுரை பார்லிமெண்ட் தொகுதியிலுள்ள மெம்பர் எந்த ஜில்லா கவுன்ஸிலில் உறுப்பினராக இருப்பது என்ற பிரச்னை ஏற்படும் அதையும் விளக்க வேண்டும். அனேகமாக எந்த இடத்திற்கு ஒரு மெம்பர் பிரதிநிதித்வம் வகிக்கிருரோ அந்த இடத்திலுள்ள கவுன்ஸிலில் மெம்பராக இருக்கவேண்டும். அவ்விதம் இருந்தால் பொது நலத்தை பாதுகாக்க முடியும். இதல்லாமல் இரண்டு இடங்களிலும் மெம்பர்களாக இருக்கலாம் என்ற சலுகையை கொடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொள் கிறேன். அடுத்தபடியாக அங்கத்தினர்களுக்கு என்னென்ன கடமைகள் இருக்கின்றன என்பதை எடுத்துக்கொண்டால், உணவு உற்பத்தி, விவசாயம்,

8th September 1958] [Sri V. Sankaran]

தொழில், **Food and Agriculture, Industries and Labour, Public Works** போன்றவைகளில் ஈடுபடுவதற்கு கூறப்பட்டிருக்கிறது. அதில் கம்யூனிட்டி டெவலப்மெண்ட், **National Extension** இந்த திட்டங்களில் ஈடுபடுவதற்கு குறிப்பாக சொல்லப்படவில்லை. அதையும் சேர்த்து குறிப்பிட்டால் நன்றாக இருக்கும். இதைப்பற்றி ஷரா 5-ல் குறிப்பிட்டு காண்பித்தால் நன்றாக இருக்கும். அதோடு கூட்டம் கூடுவதைப்பற்றி சொல்லப்படும்போது மூன்று மாதத்திற்கு ஒரு முறை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒரு நீண்டகாலமாக இருக்கிறது. இதை மாற்றி மாதத்திற்கு ஒரு முறை என்றிருக்க வேண்டும். இப்போது நடக்கும் பிளானிங் போர்டு கூட்டங்களை எடுத்துப் பார்த்தால் அங்குள்ள எல்லா அதிகாரிகளையும் கூட்டிவைத்து விவரங்களை எல்லாம் கேட்டு தீர்ப்பதற்குள் நான்கைந்து மணி நேரம் ஆகிவிடுகிறது. இந்த 50 அதிகாரிகளும் தங்களுடைய விவரங்களை எல்லாம் சொல்லுகிறார்கள். இது நடந்து முடிந்த பின் அடுத்த மூன்று மாதத்திற்குள் நடந்தது எல்லாம் மறந்துவிடுகிறது. ஆகவே இவ்விதம் மூன்று மாதத்திற்கு ஒரு முறை என்றிப்பதை மாற்றி மாதத்திற்கு ஒரு முறை என்றிருந்தால் நல்ல முறையில் காரியங்களை நடத்த முடியும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக ஸ்டான்டிங் கமிட்டி மெம்பர்களை எடுத்துக் கொண்டால், செக்ஷன் 8-ல் சப்-செக்ஷன் 2, 3-ல் இருப்பதை பார்த்தால் ஸ்டான்டிங் கமிட்டி மெம்பர்களாக இருப்பதற்கு மெம்பர்களில், ஒருவருக்கு ஒருவர் இடம் மாற்றிக்கொள்ளலாம் என்று சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவும் ஓரளவுக்கு சரியாக இல்லை என்று நினைக்கிறேன். ஒரு கமிட்டியில் அக்கரை கொண்டிருப்பவர்கள் ஆரம்பத்திலிருந்தே அந்த கமிட்டியில் இருக்கவேண்டும். இதல்லாமல் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஸ்டாப் மாதிரி அடிக்கடி இடம் மாற்றக்கூடிய விதத்தில் இருக்கக்கூடாது.. சிலருக்கு, அதாவது கிராமங்களில் இருக்கக்கூடியவர்களுக்கு விவசாயத்தில் அக்கரை இருக்கலாம். நகரத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு கல்வியில் அக்கரை இருக்கலாம். அம்மாதிரிப்பட்டவர்களை பொறுக்கியெடுத்து ஆரம்பத்திலேயே அந்தந்த கமிட்டிகளில் போட வேண்டும். என்று கேட்டுக் கொள்கிறேன். அதல்லாமல் ஒருவருக்கொருவர் இடம் மாற்றிக் கொள்ளலாம் என்றுள்ள சலுகை அளிக்கக்கூடாது. அடுத்தபடியாக 10-வது பிரிவின் படி பல அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதன்படி நல்ல புள்ளி விவரங்கள் சேகரிக்க முடியும். முனிசிபல் கௌன்ஸிலில் இருந்தும், பஞ்சாயத்துகளிலிருந்தும் விவரங்களை சேகரித்து வெளியிடுவதற்கு இந்த பிரிவின் கீழ் அதிகாரம் இருக்கிறது. அதே போன்று கெவர்ண்மெண்டிடமிருந்தும் புள்ளிவிவரங்களை சேகரித்து வெளியிடுவதற்கு அதிகாரங்கள் இருக்கவேண்டும். இந்த குழுவானது வெறும் ஆலோசனை குழுவாக மாத்திரம் இராமல் கூடுதல் சில அதிகாரங்கள் உள்ளதாக இருந்தால் நன்றாக இருக்கும். இதற்காக பல திருத்தங்களை கொடுத்திருக்கிறேன். அவைகளை எல்லாம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* Sri D. S. AUTHIMOOLAM : மிஸ்டர் ஸ்பீக்கர், இந்த டெவலப்மெண்ட் கவுன்ஸில்கள் என்பது புதிதாக பஞ்சாயத் போர்டுகளும், பஞ்சாயத் யூனியன்களும் வருவதின் விளைவுகளாகும். இப்போது அதிகமாக நேஷனல் எக்ஸ்டென்ஷன் ஸ்கீம் என்றும் கம்யூனிட்டி பிராஜக்ட் என்றும் ஏற்பட்டிருப்பதினால், இனி ஜில்லா போர்டு என்ற ஸ்தாபனத்திற்கு வேலை இல்லாமல் போய்விடுகின்றதினாலும்தான் இந்த புதிய கவுன்ஸில் வருகிறது. ஆகவே இதை ஒரு நியூ மாடல் டிஸ்ட்க்ரிட் போர்டு என்று குறிப்பிடலாம். ஜில்லா போர்டு நிர்வாகத்தில் இருப்பவர்கள் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இவர்கள் தான் டிஸ்ட்க்ரிட் போர்டில் அதிகமாக இருப்பார்களே தவிர ஆபிஸர்கள் அதிகமாக கிடையாது. இந்த கவுன்ஸிலில் பார்த்தால் ஜில்லாவிலுள்ள ஆபீஸர்கள் பூராவும் அங்கு பிரதிநிதித்துவம் வகிப்பதற்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் உருப்படியாக வேலை நடக்காது என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் இதற்கு

முன்னால் பிளானிங் போர்டு என்று அங்கு அடிக்கடி கூடிக்கொண்டு இருக்கிறோம். அப்போது இந்தக் கூட்டம் ஐந்து அல்லது ஆறு மணி நேரம் நடைபெறும். ஏதோ அவர்களுக்கு விளம்பரம் கிடைக்கவேண்டும் என்று ஏதேதோ கேள்விகளை கேட்டுவிட்டு, கலெக்டர் அவர்களையும், மற்றவர்களையும் ஸ்தம்பிக்க வைப்பார்கள், இப்படி வேடிக்கையாக கூட்டம் நடக்கும். அந்த கூட்டத்திலும் நாற்காலிகளை முன்னால் தள்ளி போட்டுக்கொண்டு வாயாடிகளாக உள்ள சில மெம்பர்கள் நூறு ஸப்ஜெக்ட் இருந்தால் அதில் 65 ஸப்ஜெக்ட்டுகளில் தலையை ஓட்டிக் கொள்வதுண்டு. இவ்விதம் நேரத்தை போக்கடித்துவிட்டு போவதுண்டு. (சிரிப்பு) நான் இதை வேடிக்கையாக் சொல்லவில்லை. சட்டம் வருவது எல்லோருடைய நன்மைக்காகத்தான். ஆனால் அதை நல்ல முறையில் ரூல்களை தீர்மானிக்க வேண்டும் என்ற குறிக்கோளோடுதான் நான் இதை சொல்லுகிறேன். இப்படியாகத்தான் பிளானிங் போர்டு கூட்டம் நடந்து வருகிறது. இப்போது இந்தமாதிரி கவுன்ஸில் ஏறுபடுத்தும் போது சில காரியங்களை மந்திரிசபையார் கவனிக்கவேண்டும். இதிலே முக்கியமாக ஜில்லா ஆபீஸர்கள், அதாவது டி.எ.ஒ., டி.டப்ளியூ.ஒ., டி.வி.ஒ., இம்மாதிரி டிஸ்டிரிக்ட் ஆபீஸர்கள் எல்லாம் இந்த கவுன்ஸிலில் இருக்க வேண்டாம் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். ஏனென்றால் இதன்படி நிர்வாகம் நடக்கும்போது கல்வி அதிகாரி, ஹைவேஸ் இஞ்சினியர், இவர்கள்தான் கூட்டத்திற்கு வருவார்கள். ஆகவே அப்போது ஜில்லா வேலைகளைப்பற்றி ஆலோசிப்பது என்னவாய் இருக்கும் என்றால், ரோடுகள் விஷயமாகவும், கம்யூனிக்கேஷன் விஷய மாகவும், கல்வி விஷயமாகவும் பரிசீலிக்கப்படும். இது தவிர இன்னும் விவசாயம், நீர்ப்பாசனம், போன்ற பல முக்கியமான விஷயங்கள் இருக் கின்றன. அப்போது சில காரியங்களை சிலருக்கு மாத்திரம் எடுத்துச் சொல்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும். அதே சமயத்தில் ஜில்லா கலக்டர்
11-40 a.m. அவர்களிடம் வேண்டிய காரியங்களை சொல்லி சிபாரிசு செய்துகொள்ளலாம். ஆகவே இந்த ஆபீஸர்கள் கூட்டத்தை நிறையக் கூட்டி, அந்த ஆபீஸர் களுக்கு முன்னால் விளம்பரம் வேண்டுமென மெம்பர்கள் தடபுடல் செய்து கூட்டம் நல்ல முறையில் செயல்பட முடியாமல் செய்வதைத் தடுத்து அப்போது இருந்த போர்டு நிர்வாகம் எப்படி நடந்ததோ அந்த அடிப் படையில் நடக்க வேண்டிய ஒரு சட்ட திட்டங்களைச் செய்து நல்ல முறையில் செயல்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதை அரசாங்கம் முக்கியமாக பரிசீலிக்க வேண்டும்.

அதோடு இப்போது ஜில்லா போர்டு நடத்திக்கொண்டு இருந்த மேஜர் டிஸ்ட்ரிக்ட் ரோடுகள், மற்றும் செகண்ட் கிளாஸ் ரோடுகள், Third Class ரோடுகள், மார்க்கெட் ரோடுகள் பல உண்டு. அவைக ளெல்லாம் இப்போது பஞ்சாயத்து நிர்வாகத்தில் கீழ் வருகிறது. அந்த ரோடுகள் இப்போது சரியாக பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. அந்த ரோடுகளை நல்ல முறையில் பராமரிப்பதன் மூலம் கிராமவாசிகளுக்கு நன்மை செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

செகண்டரி எஜுகேஷன் ஜில்லா போர்டு நிர்வாகத்தின் கீழ் இருந்தது, இப்போது பஞ்சாயத்து நிர்வாகத்தின் கீழ் போகிறது. ஹை ஸ்கூல்கள் பஞ்சாயத்து நிர்வாகத்தின் கீழ் போகிறது. இப்படி பஞ்சாயத்து நிர்வா கத்தின் கீழ் வருகிறது என்று சொன்னால், பல ஊழல்கள் ஏற்பட்டு அந்தந்த ஸ்தாபனங்கள் சரிவர நடைபெறாமல் போய்விடும். அவைகள் நல்ல முறையில் செயல்பட ஒரு முறை வகுக்கவேண்டும். ஏனென்றால் நாம் இன்னும் ஜனநாயகத்தில் பக்குவம் அடையவில்லை. அதற்கு இன் னும் 20 வருஷங்கள் பிடிக்கும். அதற்குப் பிறகு தான் நல்ல முறையில் நிர்வாகத்தை நடத்த முடியும். ஆகவே இந்த கவுன்ஸில் அவைகளை நல்ல விதமாக நடத்துவதற்கு அதற்கு சில அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும்.

இப்போது டெவலப்மெண்ட் கவுன்ஸில் என்று பெயரளவில் இருக்கிறதே யொழிய அதற்கு அதிகாரம் ஒன்றும் இல்லை. இது ஒரு அட்வைஸரி பாடி என்று முன்னமேயே சொல்லிவிட்டார்கள். முன்பு கவர்ன்மெண்டார்

8th September 1958] [Sri D. S. Authimoolam]

டெவலப்மெண்ட் போர்டு என்று G.O. ஒன்று போட்டார்கள். இப்போது ஒரு மசோதா வந்திருக்கிறது. இரண்டுக்கும் பெயர்தான் வித்தியாசம். ஆனால், இவைகளுக்கு அதிகாரம் ஒன்றுமில்லை. அதிகாரம் பண்ண வேண்டுமென்று நான் சொல்ல வில்லை. அபிவிருத்தித் திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுவதற்கு சில சட்ட திட்டங்களை வகுத்து இந்த கவுன்ஸிலுக்கு சில அதிகாரங்கள் கொடுக்கவேண்டும், அதை கவனித்து ஆவன செய்யவேண்டும், அப்படிச் செய்தால் தான் நாம் ஜில்லா வாசிகளுக்குப் பரவலான முறையில், ஜில்லா போர்டு இல்லாததால், அவைகள் விட்டுப் போன காரியங்களைச் சரியாகச் செய்வதற்கு, இந்தக் கவுன்ஸில் பிரயோஜனகரமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு கலெக்டர் அவர்களுக்குத்தான் இந்த தலைமை வகிக்கும் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு பதில் ஜனநாயக முறையில் மக்கள் பிரதிநிதிகளாக உள்ள யாரையாவது தேர்ந்து எடுத்தால் நன்றாக இருக்கும். எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் பதவிக்கு வந்த பின்னர் எல்லோரையும் நன்கு நடத்துவார் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த முறையில் யாரையாவது தேர்ந்தெடுத்து பிரெஸிடெண்டாக்கினால், அவர் நல்ல முறையில் ஜனங்களுடைய தேவைகளை தெரிந்து ஜில்லா பூராவுக்கும் உள்ள ஒரு பெரிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ஆங்காங்கு விஷயங்களை கவனித்து நடத்த ஏதுவாகும். கலெக்டருக்கு இப்போதே ஏகப்பட்ட ஜோலிகள் இருக்கின்றன. சட்ட சபைக் கூட்டம் முடிந்து விட்டால் Breathing time கூடக் கிடையாது. மந்திரிகள் சுற்றுப் பிரயாணத்திற்கு ஆரம்பித்து விடுவார்கள். திருநெல்வேலி ஜில்லா கலெக்டரை வாரத்திற்கு ஒரு நாள் கூடப் பார்க்க முடியாமல் இருக்கிறது. அப்படி அவருக்குப் பல ஜோலிகள் இருக்கின்றன. அப்படிப் பல ஜோலிகள் இருக்கும் போதே, இன்னும் பல ஜோலிகளை மேலும் மேலும் சுமத்திக் கொண்டே போவது ஜனநாயகத்திற்கு, ஓட்டு உரிமை அடிப்படையில் கிராமங்களிலிருந்து பெரிய நகரங்கள் வரை நாடு பூராவும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தபிறகும், தனிப்பட்ட ஒருவரிடம் பொறுப்புக்களைச் சுமத்துவது நல்ல முறையான நிர்வாகத்திற்கு அறிகுறியானதாக இல்லை. இதை அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும். பரிசீலித்து இதற்கு மாற்று வழிகள் கண்டுபிடித்தாகவேண்டும்.

காந்திஜி அவர்கள் சுயாராஜ்யம் என்று சொன்னதானது கிராம ராஜ்யத்தைக் குறிப்பிட்டுத்தான். இப்போது ஏற்படுத்தபடும் கிராமப் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், திறமையாக வேலை செய்ய வேண்டிய அதிகாரங்களைக் கொடுக்காமல், அதிகாரம் பூராவும் ஒரு தனிப்பட்ட நபர் கையில் கொடுத்து சென்ட்ரலைஸ் (Centralise) செய்வது கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் இந்த மசோதாவிலே பல சில்லரை குறைகள் இருக்கின்றன. ஸ்டாண்டிங் கமிட்டி போடுவதற்கு இந்த மசோதாவிலே இடம் இருக்கிறது. இந்த ஸ்டாண்டிங் கமிட்டிகள் உருப்படியாக வேலை செய்வதில்லை. ஜில்லா போர்டு நிர்வாகத்திலே எஜுகேஷன் கமிட்டி, மற்றப்படி கம்யூனிகேஷன் கமிட்டி, இன்னும் பப்ளிக் ஹெல்த் கமிட்டி என்று பல கமிட்டிகள் இருந்து வேலை செய்திருக்கிறது. ஆனால் அவைகள் உருப்படியாக வேலை செய்வதில்லை. அவைகளை மறுபடியும் இந்தச் சட்டத்தில் கொண்டு வந்திருப்பதானது வெறும் "பார்ஸ்" ஆக முடியுமே யொழிய உருப்படியாக இருக்காது. ஆகவே இதை ரத்து செய்து விடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றப்படி இந்த கவுன்ஸில் அமைப்பதன் நோக்கம் நல்ல நோக்கம் தான். இது வெற்றிகரமாக நடக்கவேண்டிய ரூல்ஸ்களை நல்ல விதமாக அமைத்து, நல்ல முறையில் செயல்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

ஜில்லாக்களில் உள்ள பெரிய பெரிய ஸ்தாபனங்கள் காரியங்களை சரிவரச் செய்யாமல் டிடீரியரேடிங் கண்டிஷனில் போய்க் கொண்டிருக்

கிறது. ஹைஸ்கூல்களும் சரி, ரோடுகளும் சரி, மற்றும் ஹாஸ்பிடல்களும் சரி, இவைகளின் நிர்வாகம் சீரழிந்து கொண்டிருக்கிறது. இப்பொது அவைகள் அபாயகரமான நிலேயில் இருக்கின்றன.

ஆகவே இந்த டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸில் நல்ல முறையில் இயங்கவேண்டும், அதற்கு வேண்டிய ரூல்ஸ்களே நல்ல விதமாக அரசாங்கம் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளே முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

11-46 a.m. * SRI T. SAMPATH: Mr. Speaker, Sir, I support the Bill and welcome the formation of the District Development Councils. At the time when the White Paper on Local Administration was discussed in this House, it was indicated even then that these councils would be formed. In keeping with the recommendations, the Bill has been framed. So, I do not think that there is any need for referring this Bill to a Select Committee. But many of the hon. Members preceding me expressed a strong view that these Councils should be more than advisory bodies. I am in entire agreement with them because it is stated in the Bill that these Councils will function only as advisory bodies, establishing advisory association of the elected representatives with departmental agencies of the State Government. My view is that these Councils must be more than advisory bodies and that they must be given statutory powers. At the time of the White Paper discussion, I suggested that statutory powers should be given to these Councils. But unfortunately I do not find any of the powers in the Bill. The hon. Member. Sri Authimoolam explained what was happening in District Planning Board meetings. I do agree with him. Most of the recommendations or suggestions or resolutions passed at these meetings, I understand, are not implemented or are not favourably considered by the Government. Those suggestions must be favourably considered and implemented.

The functions of the Councils enumerated in section 5 are too many. Of course, they are good. Unless the recommendations of the members of the Council are accepted it will lead to the position, of reducing the members to mere figures heads. So this Bill should be amended in such a way as to give statutory powers to these Councils so that they can effectively function and offer suggestions for the development of the districts.

Coming to section 4, it says that the " Collector will be the ex-officio Chairman and Member also." It also says that " Members of Parliament and Members of the State Legislature " will be members of the Development Councils. It also says: " All chairmen of panchayat union councils in the district will be members and until a panchayat union council is constituted for any local area in the district, a person chosen in the prescribed manner by all the presidents of panchayats in that area, whether that person so chosen is himself a president of a panchayat or not." With reference to this, the object of the Government is to make the chairmen of all the panchayat union councils members of the Development Council.

8th September 1958] [Sri T. Sampath]

That being so, it will be in keeping with the objective of the Government and also in keeping with the reforms contemplated in the White Paper if the presidents of panchayat boards are made to elect one from among themselves, to the Development Council rather than electing a new person. 11-50 a.m.

In regard to the constitution of these Councils, it is stated that each district will have one Development Council. I am afraid that in the case of big districts, the Council will be an unwieldy body, because it will consist of more than sixty or seventy members. So, in such big districts, it is better that two Development Councils are formed. I understand that the reorganization of districts is being thought of. If reorganization comes into force, then I think bigger districts will have two Councils.

Coming to clause 6 dealing with the meetings of District Development Council, I would like to suggest a new procedure. Sub-clause (2) of this clause says—

'The Chairman of the District Development Council or in his absence any member nominated by him in that behalf shall preside at a meeting of the District Development Council'.

Instead of this, I would like to suggest that, in the absence of the Chairman, namely, the Collector, the members present at the meeting can choose a Chairman for the meeting. Many members who spoke earlier expressed the view that the Chairman should be a non-official member. It will be good, if a non-official member is given an opportunity to preside over meetings of the Council in the absence of the Collector. This will very much satisfy the wishes of hon. Members.

In regard to the rules of the meeting, I do agree with many hon. Members that there should be a meeting of the Council at least once a month. It is stated in sub-clause (1) 'provided that not more than three months shall elapse between one meeting of the District Development Council and another'. Instead of three months, I suggest two months. I think a period of two months would be reasonable.

As regards the procedure for meetings, clear rules must be framed in reference to the conduct of meetings and also the convening of meetings. Sri Daniel pointed out that there was no provision relating to the convening of meetings, in case the Collector does not convene a meeting of the Development Council. There is no compelling provision now to convene a meeting. There must be provision for convening meetings in those circumstances.

In Clause 5, the following departments have been listed:— Food and Agriculture, Industries, Labour and Co-operation, Public Works and Health, Education and Local Administration.

I would like to add here 'Irrigation'. Likewise in Clause 8, which relates to the appointment of standing committees, I would like that 'Co-operation' and 'Irrigation' be included. In regard to the formation of standing committees, I find that the clause is

not very clear. One hon. Member referred to this, and I find an amendment also has been given notice of. The clause must be made very clear and explicit. That is, it must say clearly how the committees will be formed and who will be the members thereof, etc.

Sir, with these suggestions I support the Bill.

* **SRIMATHI T. N. ANANDANAYAKI** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மாவட்ட வளர்ச்சிக் குழு மசோதாவை அரசாங்கத்தார் மிகவும் சிறந்த எண்ணத்தோடு நம் முன்னால் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே சமயத்திலே எதிர்கட்சி அங்கத்தினர் ஒருவர் இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டுமென்று சொன்னார். போன அக்டோபர் மாதம் ஸ்தல ஸ்தாபன நிர்வாகச் சீரமைப்பு பற்றிய வெள்ளை அறிக்கையின் மீது ஒரு பொறுக்குக் கமிட்டி அமைத்து, அக்கமிட்டியார் இதையெல்லாம் தீவிரமாக ஆராய்ந்தார்கள் என்று கூறப்படுகிறது. அப்படி ஒரு பொறுக்குக் கமிட்டி இந்த சீர்திருத்தங்களை யெல்லாம் ஆராய்ந்திருந்தாலும் கூட, இன்றைக்கு அநேக அங்கத்தினர்கள் சொல்லுகிற யோசனைகளை கனம் அமைச்சர் அவர்கள் எது முக்கியமென்று கருதி அவைகளை ஓரளவுக்கு ஏற்று இந்த மசோதாவைமாற்றி விடுவார்களேயானால், இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டிய அவசியமே கிடையாது. அங்கத்தினர்கள் சொல்லுகிற குறைகளை ஓரளவுக்கு ஏற்று, மாற்றிக்கொள்ளக்கூடிய மனோபாவம் அமைச்சர்களுக்கும் மற்றவர்களுக்கும் வந்தால்போதும் என்று எதிர்பார்க்கிறோம். எந்த அளவிலே மாவட்ட வளர்ச்சிக்குக் கழக மசோதாவிலே பல திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்பதை எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் கூறி விட்டார்கள். நானும் ஒரு சிலவற்றை எடுத்துச் சொல்லுவதற்கு அனுமதி கோருகிறேன்.

இந்த மாவட்ட வளர்ச்சிக்கு கழகத்தின் வேலை என்னவென்றால், ஜில்லாவில் நடப்பதையெல்லாம் அரசாங்கத்தின் காதில் போடும் வேலையாகத்தான் இருக்கிறதே யொழிய, அந்தக் கழகத்திற்கு திட்டவட்டமான வேலை எதுவும் கொடுக்கப்படவில்லை. எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் ஸ்ரீ ஆதிமூலம் எடுத்துரைத்தது போல், ஏற்கெனவே மாவட்டங்களில் பிளானிங் குழுக்கள் இருக்கின்றன. பிளானிங் குழுக்களில் ஆபீசர்கள் அதிகமாகயிருப்பதன் காரணமாக சத்தம் போட்டு கூட்டங்கள் நடத்துகிறார்களேயொழிய, உருப்படியான வேலையொன்றும் நடப்பது கிடையாது என்று சொன்னார்கள். கூட்டம் கலைந்தது என்ற முடிவை தான் காண்கிறோமே யொழிய, திட்டவட்டமான வேலை ஒன்றும் நடப்பதில்லை. அது போன்று சத்தம் போடுகிற குழுக்களாக இவையும் அமையுமானால், இக்குழுக்கள் இல்லாமல் இருப்பதே மேல் என்று என்போன்றவர்கள் நினைப்பார்கள். ஆகவே நல்லெண்ணத்துடன் கொண்டுவரப்படக்கூடிய இந்த மசோதாவின்படி அமையப்போகின்ற மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள் சத்தம் போட்டுக் கொள்கிற குழுக்கள் மாதிரி இல்லாமல், அதிகப்படியான அதிகாரமுள்ளவையாக இருக்கவேண்டும். இந்த மசோதாவின் ஷரத்துக்களைத் துருவிப்பார்ப் போமேயானால், அக்குழுவின் எல்லா வேலைகளும் " **advising the Government, advising the Government** " என்ற முறையில் தானிருக்கிறதேயொழிய, ஒரு வேலை கூட மாவட்ட வளர்ச்சிக் கழகத்தினர் முடிவு எடுக்கக்கூடிய வேலையாகக் காணோம். கேவலம், சந்தைக் கடையைப் பற்றிக்கூட அரசாங்கத்துக்கு ரெபர் செய்து, அவர்களுக்கு புத்திமதி கொடுக்கலாமே தவிர, இவர்களாக ஒரு முடிவும் எடுக்கக்கூடாது. சம்பந்தப்பட்ட பிரிவுகளை நான் படித்துக்காட்ட விரும்புகிறேன். 5 (2) பிரிவு என்ன சொல்லுகிறது என்றால்

' In particular, it shall be the duty of the District Development Council to perform the following functions, namely :—

(*a*) advising the Government on all matters relating to the services maintained by and all development schemes undertaken

8th September 1958] [Srimathi T. N. Anandanayaki]

by all local authorities in the district as well as those agencies in the district, which are under the administrative control of the Government in the following departments, namely :—

(i) Food and Agriculture,

(ii) Industries, Labour and Co-operation,

(iii) Public Works, and

(iv) Health, Education and Local Administration;

(*b*) watching the progress of the measures undertaken by the Government, local authorities and departmental agencies in respect of the services and development schemes aforesaid;

(*c*) advising the Government on matters concerning the implementation of any provision of law or any order specifically referred by the Government to the District Development Council, such as—

(i) classification of markets as panchayat markets and panchayat union markets and fixing rates of contribution payable by one authority to the other' . . .

கேவலம் எந்தப் பஞ்சாயத்துக்கு இந்த சந்தைக்கடை சொந்தம், எந்தப் பஞ்சாயத்து யூனியனுக்கு இந்த சந்தைக்கடை சொந்தம் என்று சொல்வதற்குகூட அந்த மாவட்ட வளர்ச்சிக் கழகத்திற்கு அதிகாரம் இல்லாமல் இருக்கிறது.

Sri K. VINAYAKAM : Sir, I rise on a point of order. I believe, whenever a Bill is taken up for discussion, in the first reading stage, only a general discussion is carried on. In the second reading stage, the clauses of the Bill have to be gone through. Is the hon. Member right in referring to the clauses in the first reading stage?

Mr. SPEAKER : But every hon. Member has been referring to the clauses. So it has become a matter of custom.

Sri K. VINAYAKAM : I request the Hon. Speaker to enforce procedure.

The Hon. Sri C. SUBRAMANIAM : Without going into the clauses, one cannot deal with the Bill. No doubt we would not be making amendments now. But in dealing with the Bill generally, we have to go into the provisions and say whether a particular provision should be there or whether it should be modified. That is the general discussion that is taking place now. When we take up clauses, we suggest specific amendments.

Mr. SPEAKER : Correct.

The Hon. Sri C. SUBRAMANIAM : Therefore, even in the first stage one has to deal with the clauses. Otherwise one would not be able to talk about anything at all.

Mr. SPEAKER : Everybody has been speaking about some aspect of the provisions of the Bill, and I have not objected to it. The hon. lady Member may continue.

*SRIMATHI T. N. ANANDANAYAKI: I am obliged to the Hon. the Minister for Finance for having come to my rescue on this point.

MR. SPEAKER: What about the Speaker coming to the hon. Member's rescue? (Laughter.)

*SRIMATHI T. N. ANANDANAYAKI: I convey my thanks through you, Mr. Speaker.

மொத்தத்தில் இந்த மசோதாவிலுள்ள சில அம்சங்களைப் பற்றி நான் என்னுடைய கருத்துக்களை தெரிவிக்கிறேனே ஒழிய, பிரிவு பிரிவாக எடுத்துக்கொண்டு அதில் திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று நான் இப்பொழுது பேசவில்லை. அப்படி எடுத்துக்கொள்ளும் பொழுது, எந்த பஞ்சாயத்திற்கு எந்த சந்தக்கடை சொந்தம், எந்த பஞ்சாயத்து யூனியனுக்கு எந்த சந்தக்கடை சொந்தம், எந்தத் திருவிழாவை பஞ்சாயத்து நடத்தவேண்டும், எந்தத் திருவிழாவை பஞ்சாயத்து யூனியன் நடத்தவேண்டுமென்று முடிவு செய்யும் சிறு சிறு வேலைகளெல்லாம் மாவட்ட வளர்ச்சிக் குழுவுக்கே முடிவாக விட்டுவிடவேண்டும். அப்படியில்லாமல் அரசாங்கம் இந்தக் குழுவுக்கு 'ரெபர் செய்து' பிறகு அதன் மேல் குழு தன் யோசனையை தெரிவித்து, மறுபடியும் அது அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டு, மறுபடியும் இறுதி முடிவு எடுக்கப் படவேண்டுமென்றால் ஒரு வேலையும் நடைபெறாது. ஒரு திட்டத்தை யும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க முடியாது. இப்படி அரசாங்கத் திற்கும், குழுவுக்கும் பேபர் திரும்பி திரும்பி போய்விட்டு வருவதற்குள் குழுவின் ஆயுள் காலமே முடிந்துவிடும் என்று எண்ணுகிறேன். பேபர் அங்கே போய், இங்கே போய் சுற்றிக்கொண்டு வருவதற்குள் அங்கத்தினர் கள் பதவி காலம்கூட முடிந்துபோய்விடும். வேலை ஒன்றுமே நடக்காது. இறுதியான முடிவு ஒன்றும் எடுக்க முடியாது. இப்படிப்பட்ட சிறு சிறு அம்சங்களை, சந்தக்கடை, திருவிழா போன்றவைகள் சம்பந்தமாக ஏற்படும் தகராறுகளை மாவட்ட வளர்ச்சிக் குழுவே "பைனலாக" முடிவு செய்ய வேண்டுமென்றும், அந்த முடிவை பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனி யன்கள் கட்டாயமாக ஏற்றுத்தான் தீரவேண்டுமென்ற ஒரு சூழ்நிலையை இந்த மசோதாவில் கொண்டுவந்தால், அது மிகவும் நல்லதாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினரோ, சட்டசபை உறுப்பினரோ ஒரு மாவட்ட வளர்ச்சிக் குழுவில்தான் அங்கம் வகிக்கலாம் என்று 'ரெஸ்டி ரிக்ட்' செய்யப்பட்டிருக்கிறது. எந்த மாவட்டக் குழுவில் அங்கத்தினராக இருக்க விருப்பப்படுகிறார்கள் என்பதை முன்பே அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்றும், இடையே தங்கள் விருப்பத்தை மாற்றக்கூடாது என் றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்ட சபை உறுப்பினர்கள் மதிப்பை எந்த அளவுக்கு குறைக்க வேண்டுமோ அந்த அளவுக்கு குறைக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் இம்மாதிரி மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று நினைக்க வேண்டியிருக்கிறது. சட்டசபை அங்கத்தினராக ஒரு பகுதிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால், அந்த அங்கத்தினர் அந்தப் பகுதியிலுள்ள அத்தனை மக்களுக்கும், அந்தப் பகுதியிலுள்ள அத்தனை கமிட்டிகளுக்கும் பொறுப்பாளி. ஒரு கமிட்டிக்கு மட்டும்தான் பொறுப்பாளியாக இருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துவது, மக்களுக்கு அவர் செய்ய வேண்டிய பொறுப்பை குறைப்பதாகும். ஆகவே, எம்.எல்.ஏ.-க்கள், எம்.பி.-க்கள் ஒரு குழுவில் தான் அங்கம் வகிக்க வேண்டுமென்று கட்டுப்படுத்துவது, அவர்கள் மரியாதையை உயர்த்துவதற்கு பதிலாக, அவர்கள் மரியாதைக்கு குந்தகம் விளைவிக்கும் என்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் குழுவிற்கு தலைமை தாங்கும் பொறுப்பு கலெக்டரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே ஜில்லா கலெக்டருக்கு வேலை அவ்வளவு இவ்வளவு இல்லை. ஜில்லாக்களின் கிழக்கு,

8th September 1958] [Srimathi T. N. Anandanayaki]

மேற்கு, வடக்கு, தெற்கு என்று பிரிக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். கலெக்டருக்கு இத்தனை வேலை இருக்கும்பொழுது இந்த மாவட்ட வளர்ச்சிக்குழுவிற்கும் அவரே தலைமை வகிக்க வேண்டு மென்று அவர் தலையிலே இந்த அஜண்டாக்களையும் ஏற்றினால், எந்த அஜெண்டா எந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்று தெரியாத அளவுக்கு குழப்பத்தை உண்டாக்கி விடுமே தவிர, வேலை நடக்காது என்பது நன்றாகத் தெரியும். அவருடைய வேலை பளுவை குறைக்கக் கூடிய அளவிலே தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களே தங்களுக்குள் ஒருவரை தலைவராக நியமித்துக்கொண்டு கூட்டத்தை நடத்தினால், வேலை கள் தீவிரமாகவும், துரிதமாகவும் அக்கரையுடனும் நடத்தப்படும் என்று எண்ணுகிறேன்.

அதே போன்று, 'ஸ்டாண்டிங் கமிட்டி' நியமனம் சம்பந்தமாக ஒரு சில அதிகாரங்களை அரசாங்கம் தன் கையில் வைத்துக்கொண்டிருக் கிறது. இந்தக் குழுவிற்கு அங்கத்தினர்களை நியமிக்கும் பொறுப்புகூட இந்த மாவட்ட வளர்ச்சிக் குழுவின் அங்கத்தினர்கள் கையில் இல்லை. ஜில்லா கவுன்சில் அங்கத்தினர்களுக்கு, 'ஸ்டாண்டிங்' கமிட்டிக்கு யாரை, எப்படி நியமிக்கவேண்டுமென்பது தெரியும். ஆகவே, அவர்களே 'ஸ்டாண்டிங்' கமிட்டி அங்கத்தினர்களை நியமனம் செய்வதை விட்டு விட்டு, அந்த அதிகாரத்தை அரசாங்கத்தின் கையில் வைத்துக்கொண்டிருக் கிறார்கள். இந்த சூழ்நிலையில் இந்த மாவட்ட வளர்ச்சிக் குழு இருப்பதைக் காட்டிலும் குழுவே இல்லாமல் இருப்பதே மேல் என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது.

அடுத்தபடியாக செக்ஷன் 8, கிளாஸ் (4)-ல்

"In addition to the members nominated under sub-section (2) or chosen under sub-section (3), the Government may appoint as a member of a standing committee . . . or the District Development Council may invite any such person to serve as a member of a standing committee".

என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தை அரசாங்கம் தன் கையில் வைத்துக்கொள்ளுவதைவிட, இந்தக் குழுவின் பொறுப்பிலேயே விட்டு விட்டால், நியமனங்கள் துரிதமாக நடைபெறும். வேலையும் துரிதமாக நடக்கும் என்பதில் கொஞ்சம்கூட சந்தேகமே கிடையாது. அரசாங்கம் ஒவ்வொரு 'ஸ்டேஜிலும்' ஒவ்வொரு செக்ஷனிலும் தன் கையிலே ஒரு சிறு அதிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு அம்சத்தி லும் ஜில்லா வளர்ச்சிக் குழுவின் 'மெயின் ஸ்விட்ச்' அரசாங்கத்தி னிடம் இருக்கிறது. சிறு சிறு இடங்களிலாவது அரசாங்கம் தன்னுடைய கையை விலக்கிவிட்டு, முழுப் பொறுப்பையும் மாவட்ட வளர்ச்சிக் குழுவிடம் ஒப்படைத்தால்தான் இந்த மசோதாவின் எண்ணத்தை நல்ல முறையில் நிறைவேற்றலாம்.

District Development Council may advise the Government on various matters.

இந்த மாவட்ட வளர்ச்சிக் குழு அரசாங்கத்திற்கு எல்லா விதமான யோசனைகளும் சொல்லலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. நாம் அரசாங்கத் திற்கு அவசரமாக அனுப்புகின்ற யோசனைகளின்பேரில்கூட குறுகிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படாததை நாம் பார்த்திருக்கிறோம். அவர் கள் பேரில் குற்றம் சொல்லுவதில் பிரயோசனமில்லை. 'மெஷினரி,' 'ரெட் டேபிஸம்' இவைகளெல்லாம் சேர்ந்து தாமதமாகி விடுகிறது. இந்தக் குழு 'அட்வைஸாக' சர்க்காருக்கு தீர்மானங்கள் போட்டு அனுப் பினால், அங்கே பேபர் கத்தை கத்தையாக சேருமே தவிர, வேலை ஒன்றும் துரிதமாக நடக்காது. அல்லது, 'அட்வைஸரி நேசரில்' பவர் கொடுப்பது உண்மையிலேயே பயன்பட வேண்டுமானால், சர்க்கார் ரூலில் இப்படி மாவட்ட வளர்ச்சிக் குழுவிலிருந்து ஏதாவது யோசனைகள் அரசாங்கத் திற்கு அனுப்பப்பட்டால், அந்த யோசனைகளை அந்த டிபார்ட்மெண்டு ஒரு மாதத்திற்குள் கவனித்து முடிவு கண்டு, அவர்களின் கவனத்திற்கு

கொண்டுவர வேண்டும் என்று ஒரு விதியை ஏற்படுத்த வேண்டும். இம்மாதிரி ஒரு மாதத்திற்குள் யோசனைகள் அவசரமாக கவனிக்கப்படவேண்டும் இந்த யோசனைகளுக்கு ஒரு முக்கியத்துவத்தையும், அவசரத்தையும் கொடுக்கவேண்டும். ஒரு மாதத்திற்குள் டிபார்ட்மெண்டு இந்த யோசனைகளின் பேரில் நடவடிக்கை எடுக்காவிட்டால் அமைச்சர் சட்ட சபையில் ஏன் அம்மாதிரி தாமதம் ஆயிற்று என்று விளக்கம் கொடுக்க வேண்டும். இம்மாதிரி ஒரு கெட்டியான ரூல் போட்டால்தான் வேலை துரிதமாக நடைபெறும். இல்லாவிட்டால் பேபர் அங்கும் இங்கும் வந்து போய்க்கொண்டிருக்குமே தவிர, வேலை ஒன்றும் நடக்காது.

இந்த மசோதாவை அமைச்சர் அம்மையார் அவர்கள் ' **decentralization of power** ' அதாவது அதிகாரத்தை ஜில்லாவிற்கு அனுப்ப வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு கொண்டுவந்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது மசோதாவில் சிறு சிறு அதிகாரத்தைக்கூட இங்கே செக்ரடேரியட்டில் வைத்துக் கொண்டால், மசோதாவின் நல்லெண்ணம் நிறைவேறாது. அதிகாரத்தை இங்கேயே குவித்து வைத்துக்கொள்ளாமல் கொடுத்தனுப்பினால்தானே மக்களிடம் அதிகாரம் போய்ச் சேரும். மேலும் இந்தக் குழுவின் கூட்டத்திற்கு எல்லா ஆபீஸர்களும் வரவழைக்கப்பட வேண்டியதில்லை. முக்கியமாக இலாகாவின் தலைவர்கள் மட்டும் வந்தால் போதும். ' கெஸடட் ஆபீஸர்கள் ' எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். அவ்வளவு பேர்களும் கூட்டத்திற்கு வரவேண்டுமென்றால் தங்கள் வேலையை விட்டுவிட்டு வரவேண்டியிருக்கும். இங்கும் கூட்டம்தான் அதிகமாகுமே தவிர, வேலை ஒன்றும் நடக்காது. ' டிபார்ட்மெண்டல் ஹெட்ஸ் ' மாத்திரம் வந்தால், குறைவான எண்ணிக்கை அங்கத்தினர்களை வைத்துக் கொண்டு கூட்டம் நடத்துவதற்கு வழி செய்யலாம். மாவட்ட வளர்ச்சிக் குழுவிற்கு போதிய அதிகாரம் கொடுத்தால்தான் மாவட்டத்திற்கு அவசியமான நல்ல திட்டங்களை போட்டு அவைகளை அமுல் நடத்தும் சூழ்நிலை ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **SRI M. SELVARAJ :** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, சபை முன் வைக்கப்பட்டிருக்கும் மாவட்ட அபிவிருத்திக் குழு மசோதாவின்பேரில் நான் கொடுத்திருக்கும் திருத்தங்களை விளக்கியும், கனம் அங்கத்தினர் கோவிந்தசுவாமி அவர்கள் இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனைக்கு விடவேண்டுமென்று கொடுத்திருக்கும் திருத்தத்தை ஆதரித்தும் என்னுடைய கருத்தை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை அமைக்கும் முறையிலே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த மாவட்ட நாட்டாண்மை கழகங்களை மாற்றி அமைத்து, அவைகளுக்கு கொடுக்கப்பட்டிருந்த அதிகாரங்கள் பரவலாக மக்கள் பிரதிநிதிகள் கையில் ஒப்படைக்கப்படும் நிலைமையில் இந்த மாவட்ட அபிவிருத்தி குழுக்கள் அமைக்கப்படும் என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, ஜனநாயக முறையில் இயங்கும் வகையில் இந்த குழுக்கள் இந்த மசோதாவின் மூலம் அமைக்கப்படவில்லை. சட்டசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தலைவர்கள், அல்லது பஞ்சாயத்து தலைவர்களால் நியமனம் செய்யப்பட்டவர்கள் இவர்கள் கொண்ட இந்தக் குழுவிற்கு, இந்த அங்கத்தினர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவர் இல்லாமல், மாவட்ட கலெக்டரே ' எக்ஸ்-அபிஷியோ ' சேர்மனாக இருப்பார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் பொறுப்புள்ள அதிகாரங்கள் அதிகாரிகள் கையிலேயே கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஜனநாயக முறையில், மக்கள் ஆட்சி என்ற முறையில் இந்த குழுக்கள் இயங்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த மாவட்ட குழுக்களை அமைக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் பொறுப்புள்ள அதிகாரங்கள் அதிகாரிகள் கையிலே கொடுக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, இந்தக் குழுக்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இந்த குழுக்கள் யோசனைதான் சொல்லலாம். நாம் யோசனைகள் சொல்லி, அந்த யோசனைகளை

8th September 1958] [Sri M. Selvaraj]

அரசாங்கம் துரிதமாக ஏற்றுக்கொண்ட நிலைமை இதுவரையில் வந்த பாடில்லை. ஆகவே, இந்த நிலைமையில், மாவட்டக் குழு நல்ல முறையிலே இயங்க முடியாது. வரிப் பணத்தை வீணக குழுவிலிருக்கும் அங்கத்தினர்களின் டி.எ.-வுக்கு செலவு செய்வதுதான் மிச்சம். மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடி செயலாற்ற வேண்டும் என்ற விதியைப் பார்க்கும்போதும், ஜில்லா அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் தலைவர், சட்ட சபை மெம்பர்கள், மக்கள் சபை மெம்பர்கள் இவர்களெல்லாம் சேர்ந்து ஏறக்குறைய 40 அல்லது 50 பேர்கள் கூடி ஆலோசிக்க வேண்டும் என்பதைப் பார்க்கும்போதும், என்ன வேலை உருப்படியாக நடைபெறும் என்ற ஐயம் உண்டாகிறது. இதைப் பார்க்கும்போது பிற்போக்கான நிலைமை ஏற்படுமேயல்லாது, ஜனநாயகம் வளராது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த சபையிலே, பஞ்சாயத்து மெம்பர்களே இருக்க வேண்டும். மெம்பர் இல்லாதவர்கள் (நான்-மெம்பர்கள்) அதில் அங்கம் வகிக்கக்கூடாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே அங்கம் வகிக்க வேண்டும். வெறுமனே எலக்டோரல் பத்தியிலே பெயர் இருக்கும் காரணத்தினல், அந்தக் குழுவிலே அங்கம் வகிக்கலாம் என்பது ஜனநாயக முறைக்கு ஒத்ததாக இல்லை. அதே போன்று பார்லிமெண்ட் மெம்பர்களுக்கு, குறிப்பாக எங்கள் சிதம்பரம் தொகுதியில் திருச்சி ஜில்லாவின் ஒரு பகுதியும் வருகிறது. இருந்தும் குறைந்த பிரதேசத்திற்கே அங்கம் வகிக்க முடியும். இதையும் மாற்றி அமைக்க வேண்டும். 12–10 p.m.

ஸ்டாண்டிங் கமிட்டியை ஏற்படுத்தி யிருக்கிருர்கள். அதிலும் குறை பாடுகள் இருக்கின்றன. ரோடு, பாதை வசதி மிக முக்கியமானது. அதற்கு ஸ்டாண்டிங் கமிட்டி யில்லை. போக்கு வரத்து சம்பந்தமாக ஸ்டாண்டிங் கமிட்டி இல்லாதது வருந்தத் தக்கது. மின்சாரத்தைப் பார்க்கும்போது, அதற்கு ஒரு போர்டு இருந்தாலும், அதற்கும் ஒரு ஸ்டாண்டிங் கமிட்டி வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன். மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடவேண்டும் என்பதை மாற்றி, ஒரு மாதத்திற்கு ஒரு முறை கூட வேண்டும் என்று இருக்க வேண்டும். மேலும், சபைக்குத் தலைவர் இல்லாத காலத்தில், தலைவரைச் சபையே தேர்ந்தெடுக்க வேண்டும். கலெக்டர் தலைவர் என்பதை மாற்றி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களே பொறுக்கிக் கொள்ள வேண்டும், என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தத் திருத்தங்களை அமைத்து, இந்தக் கௌன்ஸில்கள் நல்ல முறையிலே செயலாற்ற அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே இவற்றை யெல்லாம் சரி பார்த்து திருத்தி அமைக்க, இந்த பில்லை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு பரிசீலனைக்கு விட்டு, 20-ம் தேதிக்குள் பரிசீலனை செய்து, சபைக்கு சமர்ப்பிக்கச் செய்து, இந்த பில்லை சட்டமாக்கலாம் என்று தெரிவித்துக் கொண்டு, இந்த பில்லை-பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

*Sri V. K. RAMASWAMY MUDALIYAR: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலைப்பற்றி பல அங்கத்தினர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிருர்கள். நான் பொறுக்குக் கமிட்டியின் முக்கியமான அங்கத்தினராக இருந்து பணியாற்றி இருக்கிறேன். பொருளாதார துறையில் ஒரு கமிட்டி போட்டு, எல்லா விதத்திலும் பரிசீலனை செய்தோம். அதன் பேரில், மக்கள் சபை உறுப்பினர், சட்ட சபை உறுப்பினர், முனிசிபல் கௌன்சில் தலைவர், இன்னும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், இவர்களைச் சேர்த்து, ஒரு அபிவிருத்திக் கௌன்சிலாக ஏற்பாடு செய்யும்படி யோசனை கூறினோம். முக்கியமாக இந்த கௌன்சில், ஒரு இணைப்புக் கமிட்டியாக பணியாற்றும். வேறு விதமாக இருக்க முடியாது.

இந்த கௌன்சிலின் வேலை பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில், 'advising the Government on all matters relating to the services maintained by and all development schemes undertaken by all local authorities in the district as well as those agencies in the district, which are under the administrative control of the Government in the following

[Sri V. K. Ramaswamy Mudaliar] [8th September 1958

departments." என்று இருக்கிறது. ஆகவே, இது அபிவிருத்தி வேலைகளுக்கு என்னென்ன செய்யவேண்டுமோ, அவைகளைப்பற்றி சர்க்காருக்கு யோசனைகள் கூறும். அதன்மேல் சர்க்கார் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்து அவற்றில் எவை எவை அமலாக்க முடியுமோ அவைகளைப் பின்னிட்டுச் செய்வார்கள்.

எல்லா அங்கத்தினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரே தலைவராக இருக்க வேண்டும் என்றார்கள். கலெக்டரை குறித்ததற்குக் காரணம், கலெக்டர் ஒருவர்தான் எல்லா இலாகாக்களின் அபிவிருத்தியையும் நன்றாக கவனிக்க முடியும். மேலும், கலெக்டர் இருந்தால், மற்ற இலாகா தலைவர்கள், கலெக்டர் நடத்துவதனால், பொறுப்புள்ள முறையிலே உடனுக்குடன் அந்த கௌன்சிலின் சிபாரிசுகளை நிறைவேற்ற ஆதாரவாக இருக்கும் என்ற எண்ணத்தினால் அந்த மாதிரி போடலாம் என்றோம். இதனால் அதிகாரியாக இல்லாதவர்கள் இருக்கக் கூடாது என்ற எண்ணம் இல்லை. முக்கியமாக இந்தக் கலெக்டர்கள் இருந்தால் இலாகாக்களில் கொஞ்சம் துரிதமாக வேலை நடைபெறும் என்ற எண்ணத்தால்தான். மேலும், அதிகாரிகள் அல்லாதவர்களைப் போட்டால், ஒரு எலெக்ஷன் என்றால், கட்சிப்பூசல், கட்சி வேறுபாடுகள் ஏற்பட்டு பிரதிகூலங்கள் விளையும். கட்சி பாகுபாடு அற்று, ஜில்லா நல்ல முறையிலே அபிவிருத்தி யடைய வேண்டும் என்றே இவ்வாறு போடலாம் என்றோம். அதுவே எங்கள் கட்சி கொள்கையும்.

சட்ட சபை கமிட்டி ஒன்று இதை பரிசீலனை செய்து சிபாரிசுகள் செய்திருக்கிறது. இதை மறுபடியும் ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்பது அவசியமில்லை என்று தோன்றுகிறது. சட்ட சபைக் கமிட்டி நான்கைந்து மாதங்கள் வேலை செய்து, பரிசீலனை செய்த பிறகே இந்த யோசனைகள் கொடுக்கப்பட்டன. அந்தக் கமிட்டியில், எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் இருந்தார்கள். ஆகவே, மறுபடியும் எல்லாக் கட்சியையும் சேர்ந்த அங்கத்தினர்கள் கொண்ட ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு இது போக வேண்டும் என்பது சரியென்று தோன்றவில்லை. அதனால் காலதாமதம் தான் ஏற்படும். அம்மாதிரி யெல்லாம் செய்ய வேண்டியதில்லை. இப்பொழுது நானும், மற்றும் நிதி மந்திரி அவர்களும் கூடிப் பேசினோம். சர்க்கார் தரப்பில் முக்கியமான நல்ல திருத்தங்களை ஏற்றுக் கொள்ளலாம் என்று அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

12–20 p.m. ஆகையால் இதில் முக்கியமாக இந்த ஜில்லா அதிகாரிகள் எல்லோரும் சேர்ந்து, மற்றவர்களும் கட்சி பாகுபாடுகள் இல்லாமல் சேர்ந்து ஒத்துழைப் பார்களேயானால் இந்த ஜில்லா போர்டு அபிவிருத்தி கமிட்டியானது நல்ல முறையில் வேலை செய்யும் என்பதில் சந்தேகம் இல்லை.

இப்பொழுது ஸ்டாண்டிங் கமிட்டி என்று போட்டிருக்கிறார்கள். இந்த ஸ்டாண்டிங் கமிட்டி அடிக்கடி கூடி அவர்களுடைய யோசனைகளையும் பரிசீலனை செய்வார்கள். அவைகளை மீண்டும் டெவலப்மெண்ட் கவுன்சிலில் விவாதிக்கப்பட்டு அதன் பிறகு சர்க்காருக்கு அந்த யோசனைகள் எல்லாம் போகும். அந்த யோசனைகளின் பேரில் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்கள். அந்தக் கமிட்டி அடிக்கடி கூடலாம். எவ்வளவு தடவைகள் வேண்டுமானாலும் கூடலாம், அதற்கு வேண்டிய வசதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஜில்லா அபிவிருத்தி கமிட்டி எவ்வளவு தடவை கூடலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு மாதத்திற்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் கூடலாம். ஆனால் மூன்று மாதத்திற்குள் ஒரு தடவை அந்தக் கமிட்டியானது கூட வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. பல விதமான திருத்தங்கள் கூடகொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுவார்கள். அநேகம் அங்கத்தினர்கள் நல்ல யோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். அவைகளையும் சர்க்கார் தரப்பில் ஒப்புக்கொள்ளப் போகிறார்கள். அவைகளை யெல்லாம் ஒப்புக்கொண்டு நல்ல திட்டங்களை சர்க்கார் உருவாக்கப் போகிறார்கள். அதனால் இதில் கட்சி பாகுபாடு கிடையாது. ஜில்லா கௌன்சில் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற வேண்டுமானால் கலெக்டர்

அவர்கள் அதற்கு சேர்மனாக இருக்க வேண்டியது அவசியம். அப்படி இல்லாவிட்டால் அநேக கஷ்டங்கள் இருக்கும். இதனால் அதைப்பற்றி நாங்கள் ஆலோசனை செய்து இம்மாதிரி போடுவது தான் நன்மையாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்தோம். அநேகம் திருத்தங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவைகளை கனம் மந்திரி அவர்கள் ஏற்றுக்கொண்டு நல்ல முறையில் இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இவைகளையெல்லாம் கனம் அங்கத்தினர்கள் பரிசீலனை செய்து அதன்படி பாஸ் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : To explain certain details in the light of the discussion that took place, I have permitted the hon. Leader of the Opposition and the Hon. the Leader of the House to intervene in the debate at this stage. After they have spoken, we shall continue discussion on the Bill. There are some hon. Members who are anxious to speak on the Bill. I shall call them and also the leaders of parties to speak. Then, the Hon. Minister for Local Administration will reply. I am not sure whether it will be possible to finish consideration of the Bill today. We shall go on as far as possible. If we are not able to finish today, we can continue the discussion tomorrow. I hope the House agrees to it. If we are to finish the consideration of the Bill today, many of the Members will lose the opportunity of speaking on the Bill. So, let us go as far as we can today and continue the discussion tomorrow. Now, the Hon. Leader of the House may speak.

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, நான் இப்பொழுது இந்த விவாதத்தின் மத்தியில் பேச விரும்புவதற்கு முக்கியமான காரணம் இந்த மசோதாவைப் பற்றி பல விதமான தப்பு அபிப்பிராயங்களை வைத்துக்கொண்டு பல அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள் என்ற காரணத்தால்தான். இதில் இருக்கக்கூடிய முக்கியமான விஷயங்களைப்பற்றி எதிர்க் கட்சி தலைவர் அவர்கள் இப்பொழுது எடுத்துச் சொன்னார். இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலும் இது சர்க்காரால் தயாரித்து சர்க்கார் கட்சி ஆதரவில் செய்தது அல்ல. எல்லாக் கட்சியையும் சேர்ந்த பிரதிநிதிகள் சேர்ந்து உட்கார்ந்து கொண்டு ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் எப்படியிருக்க வேண்டும் என்று யோசனை செய்து அதன்படி எல்லோரும் ஏகோபித்த ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்ற அடிப்படையில் இந்த சட்டசபை அங்கத்தினர்களும் மேல் சபை அங்கத்தினர்களும் கொண்ட ஒரு பொறுக்குக் கமிட்டியை அமைத்து அதைப்பற்றி பரிசீலனை செய்யப்பட்டது. அப்படி பரிசீலனை செய்து இந்த நிர்வாகத்தை எப்படி நடத்துவது என்பது பற்றி ஒரு ஏகோபித்த முடிவுக்கு வந்து அந்த அடிப்படையில் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவானது தனியான முறையில் தயாரிக்கப்பட்டது என்ற ஒரு முடிவுக்கு கனம் அங்கத்தினர்கள் வரக்கூடாது. இப்படிப்பட்ட ஒரு கருத்தை நான் முதலில் கனம் அங்கத்தினர்களுக்கு வலியுறுத்த விரும்புகிறேன். இத்துடன் பஞ்சாயத்து, பஞ்சாயத்து கவுன்சில்கள் அமைப்பதற்கு இருக்கக் கூடிய மசோதாவை பரிசீலனை செய்யும்போது அத்துடன் கூட முனிசிபல் கவுன்சில் அதற்கு இருக்கக்கூடிய சட்டத்தையும் கூட நாம் ஆலோசனை செய்து பார்க்க வேண்டும். இன்றைக்கு நாம் எந்த முறையில் இதற்கு முடிவு காண வேண்டும், எந்த துறையில் அந்த முடிவை நாம் அடையப் போகிறோம் என்பதை நாம் தீர முடிவு செய்ய வேண்டும். எதற்காக இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றியும் நாம் நன்றாக ஆலோசனை செய்து அந்த அடிப்படையில் நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டியதாக இருக்கிறது. லோகல் போர்டுகள் நிர்வாகம் இன்றைக்கு எந்த அடிப்படையில் இருக்க வேண்டும் என்று முடிவு செய்வதற்கு

[Sri C. Subramaniam] [8th September 1958

அந்தக் கமிட்டி நியமிக்கப்பட்டு, அதுவெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. லோகல் போர்ட் நிர்வாகத்திற்கு இன்று ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. லோகல் போர்ட் நிர்வாகத்தையும் இதற்கு முன்பு இருந்த நிர்வாகத்தையும் யோசித்துப் பார்த்தால்—பஞ்சாயத்து என்று இதற்கு முன் சில இடங்களில் இருந்தன, சில இடங்களில் இல்லாமல் இருந்தன—ஒவ்வொரு கிராமத்திற்கு ஒரு சபை இருந்தாலும் இருக்கும் சில இடங்களில் இல்லாமலும் இருக்கும்—பஞ்சாயத்து இருக்கும் இடங்களில் அவர்கள் என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும் என்று அதற்காக ஒரு சட்டம் தனியாக இருந்தது. அதற்கு அடுத்ததாக இருக்கக்கூடியது ஜில்லா போர்ட் நிர்வாகம். பஞ்சாயத்துக்கு சில அதிகாரங்களும் ஜில்லா போர்டுகளுக்கு சில அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருந்தன. இந்த இரண்டு அதிகாரங்களும் சேர்ந்துதான் ஸ்தல ஸ்தாபனம் என்று சொல்லக்கூடியவைகளுக்கு இருந்த அதிகாரங்கள். இந்த இரண்டு அதிகாரங்களையும் ஒன்றாகச் சேர்த்து எந்த முறையில் நிர்வாகத்தை அமைப்பது என்பதைப்பற்றி எல்லோரும் தீர ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். இப்பொழுது நாம் முடிவு செய்ய வேண்டியதெல்லாம் இந்த அதிகாரம் எல்லாவற்றையும் இரண்டு இடத்தில் வைப்பதா அல்லது மூன்று இடங்களில் வைப்பதா என்பதைப்பற்றித்தான் அதற்கு என்று . சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து அதைப்பற்றி பரிசீலனை செய்யச் சொல்லப்பட்டது. அதன்படி அவர்கள் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரங்கள் இரண்டு கட்டத்தில் இருந்தால் போதும் என்ற முடிவுக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள். இரண்டு கட்டங்களில் இருக்கக்கூடிய, அதாவது பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் ஆக இரண்டு கட்டங்களிலும் இருக்கக்கூடிய அதிகாரத்தை எல்லாம் பிரித்துக்கொடுத்து விட வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இருக்கக்கூடிய அதிகாரங்கள் எல்லாவற்றையும் பிரித்துக் கொடுத்த பிறகு மூன்றாவது சபைக்கு அதிகாரத்தைக் கொடுக்க வேண்டுமென்றால் புதிய அதிகாரத்தைக் கண்டு பிடிக்க முடியாது. பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்தை எடுத்து இந்த டெவலப்மெண்ட் கவுன்சிலுக்குக் கொடுக்கலாமா, அதாவது ஜில்லா அளவில் இருக்கக்கூடிய பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்தை எடுத்து டெவலப்மெண்ட் கவுன்சிலுக்குக் கொடுக்கலாமா என்பதைப் பற்றி நாம் யோசித்துப் பார்க்க முடியும். ஆனால் இதைப்பற்றி நாம் முன்பே பரீட்சை செய்து பார்த்திருக்கிறோம். அப்படி பரீட்சை செய்து பார்த்து அது சரியல்ல என்று அந்தக் காலத்திலேயே ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். ஆனால் முன்பு நடந்த விவகாரம் ஒருபுறம் இருக்க இப்பொழுது நாம் எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்கும் போது இந்த டெவலப்மெண்ட் வட்டாரங்கள் என்பது அதற்கு வேண்டிய எல்லாவிதமான அதிகாரங்களையும் கொண்ட திட்ட வட்டமான ஒரு வட்டாரமாக அது அமைந்திருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய அதிகாரத்தையும், வசதிகளையும் வைத்துக் கொண்டு அந்த வட்டாரக் குழுதான் எல்லாக் காரியங்களையும் திறமையாக நிறைவேற்ற முடியும் என்று நாம் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். அதற்கு மேல் ஜில்லா அளவில் அதிகாரிகளைப் போட்டு நிர்வாகம் செய்ய வேண்டியது அவசியம் இல்லை. நிர்வாகம் முழுவதையும் பஞ்சாயத்தினிடமும், பஞ்சாயத்து கவுன்சிலினிடமும் பிரித்துக் கொடுத்து விடலாம் என்கிற முடிவுக்கு வந்திருக்கிறோம். ஆனால் கனம் அங்கத்தினர்கள் யோசனை சொல்ல வேண்டியது : இந்த டெவலப்மெண்ட் கவுன்சிலுக்கு நிர்வாக அதிகாரம் வேண்டுமென்ற முடிவுக்கு வந்தால் அந்த அதிகாரத்தை பஞ்சாயத்திலிருந்து பஞ்சாயத்து கவுன்சிலுக்கு எடுத்துக் கொடுக்கலாமா என்பதைப் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும். அந்த அளவில் நாம் அதிகாரத்தைப் பிரித்து சிறிய சிறிய வட்டாரத்திற்குக் கொடுக்க வேண்டும் என்ற அந்தத் தத்துவத்திலிருந்து நீங்கி அதிக விஸ்தாரமாக உள்ள டிஸ்ட்ரிக்ட் அளவில் கொடுக்க வேண்டுமென்ற முடிவுக்கு வருவோம். அப்படி வந்தால், "டிசெண்ட்ரலைசேஷன்" என்று பேசுகிறவர்கள் எல்லோரும், யாருமே "டிசெண்ட்ரலைசேஷனுக்காகப்" பேசவில்லை. தனித்தனியே பஞ்சாயத்து கவுன்சிலி

8th September 1958] [Sri C. Subramaniam]

லிருந்து ஜில்லா போர்டுக்கு முழு அதிகாரத்தையும் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலேயே பேசியிருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். அத்தகைய வேறு அதிகாரத்தைக் கண்டு பிடித்துக் கொடுக்கவே முடியாது. வேறு எந்த முடிவுக்கு வரமுடியும். அதற்குப் பிறகும் இருக்கும் அதிகாரத்தை பஞ்சாயத்துக்கும் பஞ்சாயத்துக் கவுன்சிலுக்கும் கொடுப்பது சரியாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அப்படி முடிவு செய்ததற்குப் பிறகு அதே ஜில்லா போர்டு அளவில் ஏற்படக்கூடிய, ஆலோசனைக் குழுவானது நிர்வாக அதிகாரத்தைப்பெற்ற குழுவாக இருக்க முடியாது என்கின்ற முடிவுக்குத்தான் வரமுடியும். மூன்று நிர்வாகக் குழுக்களை ஜில்லா அளவுக்குள்ளேயே வைத்துக்கொண்டு அவைகளுக்காக வெவ்வேறு அதிகாரிகளை நியமித்து, அதிகாரிகள் சம்பளத்திலே இன்னும் அதிகமாக செலவு செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தால், அது நல்ல முடிவாக இருக்க முடியாது. ஆகையால் தான், இதை நல்ல முறையாக, தீவிரமாக ஆலோசனை செய்து, பல தடவைகள் கூடி விவாதித்த பிறகுதான் இந்த சட்டசபை அமைத்த குழு முடிவுக்கு வந்தது. அதிகாரமானது—எந்த விதமான அதிகாரமாக இருந்தாலும்—பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஆகிய இந்த இரண்டு சபைகளுக்குள்ளேயே பிரித்துக்கொடுக்கப்பட வேண்டுமென்ற முறையிலே வைத்திருக்கிறார்கள். பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் எல்லாம் இயங்கக்கூடிய அமைப்பிலே அவைகளுக்குள்ளேயே முரண்பாடுகள் ஏற்படலாம் அல்லது ஜில்லா முழுவதையும் மொத்தமாக எடுத்துக்கொண்டு அதிலே என்ன என்ன காரியங்களைச் செய்தால் நன்றாக இருக்கும் என்பதை ஜில்லா அளவிலே எல்லோரும் சேர்ந்து ஆலோசனை செய்யவேண்டுமானால் அதற்கான ஒரு குழு இருக்கவேண்டும் என்றும் முடிவு செய்தோம். அந்தக் குழு எப்படி இருக்கவேண்டுமென்று யோசனை செய்ததில், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் பிரதிநிதித்துவம் உள்ள ஸ்தாபனமாக, எல்லா பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும் முழுமையாக அமர்ந்திருக்கக்கூடிய ஒரு ஆலோசனைக்குழுவாக ஏற்படுத்தவேண்டுமென்ற முடிவுக்கு வந்தோம்.

பஞ்சாயத்துக் கவுன்சில்கள் எல்லாம் ஒவ்வொன்றும் அவரவர் இஷ்டப்படியே நடத்திக்கொண்டு போவதைவிட, எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பல முக்கியமான விஷயங்களையும், பொதுவாக இருக்கும் விஷயங்களையும் அவர்களுக்குள்ளேயே ஆலோசனை செய்து, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலும் தனித்தனியே தீவிரமாக ஆலோசனை செய்த பிறகு, அந்த ஆலோசனை அடிப்படையில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலும் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து, அவர்களைக்கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவை ஜில்லா அளவிலே ஏற்படுத்த வேண்டுமென்று பிறகு முடிவுக்கு வந்தோம்.

அப்படி ஒரு குழுவை ஏற்படுத்தும்போது, தனிப்பட்ட பஞ்சாயத்திலே இருந்து வரும் பிரசிடெண்ட் போதுமா, மற்றவர்களையும் சேர்க்க வேண்டுமா என்ற பிரச்னை வந்தது. அப்போழுது யோசித்துப் பார்த்து, ஜில்லா பூராவும், பொதுவாக ஆலோசனை நடக்கும்போது சட்டசபை பிரதிநிதிகளும் அந்த ஆலோசனையிலே கலந்துகொண்டால், அந்த ஆலோசனை இன்னும் சிறந்ததாக இருக்கும் என்ற காரணத்தினாலே, சட்டசபை அங்கத்தினர்களும், பார்லிமெண்ட் அங்கத்தினர்களும் இதிலே பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம்.

இப்படிப்பட்ட ஆலோசனை செய்கின்ற குழுவிலே நாம் அங்கம் வகித்தால், நம்முடைய மதிப்புக்கு குறைவு வந்துவிடும், அதாவது இந்த சட்டசபையில் அங்கத்தினர்களாக இருப்பவர்களுடைய மதிப்பு குறைந்துவிடும் என்று யாராவது சொன்னால், அது சரியல்ல, சட்டசபை அங்கத்தினராக இருக்கக்கூடிய மதிப்பு இத்தகைய கமிட்டிகளில் அங்கத்தினர்களாக இருப்பதனால் குறைந்துவிடும் என்று சொன்னால், அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஏனென்றால், ஒருவர் பெறக்கூடிய மதிப்புக்களிலேயே சிறந்த மதிப்பு சட்டசபை அங்கத்தினராக இருப்பது.

[Sri C. Subramaniam] [8th September 1958

அதற்குமேல் உயர்ந்ததாக வேறு இருக்கமுடியாது. அல்லது, ஏதோ ஒரு கமிட்டியில், அந்தக் கமிட்டிக்கு அதிகாரம் இருக்குமானல் கூட அதிலே அங்கத்தினராக இருந்துவிட்டால், சட்டசபை அங்கத்தினராக இருப்பதைவிட சிறந்த மதிப்பு ஏற்படுகிறதென்ருல், இங்கு அங்கத்தினராக இருக்கும் மதிப்பைக் குறைத்துப் பேசுவதாகத்தான் அர்த்தம் ஆகும் என்பதை நான் வலியுறுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இதற்குமேல் மதிப்பு வேறு ஏதோ குழுவில்—அதற்கு நிர்வாக அதிகாரம் இருந்தாலுங்கூட—ஒரு அங்கத்தினராக இருப்பதால் வந்துவிடப் போவதில்லே. ஏனென்ருல், இந்த ராஜ்யத்தின் ஆட்சிப் பொறுப்பு முழுவதும் இந்தச் சட்டசபைக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட சபையிலே பொறுப்பேற்று நடத்தக்கூடிய அங்கத்தினர்களாக நாம் இருக்கிருேம் என்பதிலே மதிப்பு இருக்கிறதே தவிர, வேறு எந்த அதிகாரமுள்ள குழுவில் இருந்தாலும், புதிதாகவோ அதிகமாகவோ மதிப்பு வரப்போவதில்லே. இங்கு அங்கத்தினர்களாக இருக்கும்போது மதிப்பு இல்லே என்று நினேக்கின்றவர்கள் தான் ஆலோசனே சொல்லக்கூடிய ஒரு குழுவில் பங்கு எடுத்துக் கொள்வதால் மதிப்பு குறைந்து விட்டது என்று சொல்வார்கள். ஆகையால், முழுதான மதிப்பு இருக்கும்போது இதற்குமேல் ஏதோ இன்னும் அதிக மதிப்பு வந்துவிடப்போகிறது என்ருே அல்லது அங்கு போனதினுலேயே மதிப்பு குறைந்துவிடப்போகிறது என்ருே நினேத்தால் அது தவருன கருத்து என்பதைத்தான் நான் மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னெரு விஷயத்தையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆலோசனேக் குழுவிலே ஆலோசிக்கப்படவேண்டியவை இரண்டு மூன்று விஷயங்கள். பஞ்சாயத்தும் பஞ்சாயத்துக் கவுன்சிலும் என்ன என்ன காரியங்களேச் செய்ய வேண்டுமென்ற முறையிலேயும் அவர்கள் ஆலோசனே சொல்லக்கூடியவர்களாக இருக்கிருர்கள். இன்ன இன்ன விஷயத்திலே ஆலோசனே சொல்லலாம் என்றும் நிர்ணயித்து வைத்திருக்கிருேம். ஆலோசனே சொல்வதற்குப் பதிலாக இங்கு நாம் நடத்தக்கூடிய பொறுப்பை அந்தக் கவுன்சிலே முடிவு செய்வதாக வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது இந்தச் சபையினுடைய பொறுப்பு என்னஆகும் என்று யோசித்துப் பார்க்கவேண்டும். இந்தச் சபை, தான் செலுத்தக்கூடிய அதிகாரத்தை விட்டு விட்டு, மற்ருெரு சபை சொல்லக்கூடிய ஒன்றைத்தான் ஒப்புக்கொள்ள வேண்டுமென்ற நிலே ஏற்படுகிறது. அந்த அளவுக்கு இந்தச் சபையின் அதிகாரம் குறைக்கப்பட வேண்டுமா என்பதை யோசித்துப்பார்த்தோம். நாம் பிரித்துக்கொடுக்கக்கூடிய அதிகாரத்தைப் பிரித்துக் கொடுத்தாய் விட்டது. பஞ்சாயத்துக்கும், பஞ்சாயத்துக் கவுன்சிலுக்கும், அதற்குமேல் இந்த சபை நேரடியாக நடத்தக்கூடிய அதிகாரங்களேத்தான் நாம் வைத்துக்கொண்டிருக்கிருேம். அவைகளில் நாம் பொறுப்பு எடுத்து முடிவு செய்யவேண்டியவர்களாக இருக்கிருேம். அப்படியில்லாமல் ஜில்லா அளவில் சபை போட்டு, அந்தச் சபை சொல்வதுதான் முடிவு என்று சொன்ஞல், இங்கு வேறுவிதமாக முடிவு செய்தால் என்ன ஆவது? ஆகையால், இதற்குப் பொறுப்பை யாரிடத்திலாவது ஒப்புவிக்கவேண்டும். இந்தப் பொறுப்பை யாரிடத்தில் ஒப்புவிப்பது? சர்க்காரிடத்தில் ஒப்புவிக்கிருேம். ஏன் சர்க்காரிடத்தில் ஒப்புவிக்கவேண்டுமென்ருல், சர்க்கார் இந்தச் சபைக்குப் பொறுப்பாக இருக்கிறது. சர்க்காரிடத்திலே ஒப்புவிக்கும் போது சபைக்கு ஒப்புவித்ததாகவே ஆகிறது. சர்க்கார் தவருன முடிவு செய்தால், அல்லது நல்ல யோசனேகளேச் சர்க்கார் எடுத்துக்கொள்ளவில்லேயென்ருல், அதைக் கண்டிக்க பொறுப்பும், அதிகாரமும், சக்தியும் இந்தச் சபைக்கு இருக்கிறது. ஆகவே, இந்தச் சபைக்குள்ள அதிகாரத்தை யாரிடத்திலேயோ கொண்டுபோய் ஒப்புவித்துவிடவில்லே. மற்ற அதிகாரங்களே இந்தச் சபைக்கு வைத்துக்கொண்டு, பிரித்துக்கொடுக்க வேண்டிய அதிகாரங்களே பஞ்சாயத்துக்கும், பஞ்சாயத்துக் கவுன்சிலுக்கும், பிரித்துக்கொடுத்திருக்கிருேம் என்பதைத்தான் இதிலே நன்ருக சட்டரீதியாக உணர்ந்துகொள்ளவேண்டுமென்று கனம் அங்கத்தினர்களே நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

8th September 1958] [Sri C. Subramaniam]

ஆகையால், இது ஆலோசனைக் குழு என்ற முறையில் தான் அமைந்ததாக வேண்டும். சில நிர்வாக அதிகாரங்களையும் இக் குழுவுக்குக் கொடுக்க முடியாதா என்று ஸ்ரீமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். சந்தையைப் பிரித்துக்கொடுப்பது பற்றியும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த அதிகாரத்தைக் கொடுத்திருந்தால் என்ன விவாதம் நடக்கலாம்? சந்தையை நிர்வகிக்கக்கூடிய அல்லது பிரித்துக்கொடுக்கக் கூடிய அதிகாரம்தானே கொடுக்கிறார்கள். இது என்ன அதிகாரம், இந்த அதிகாரம் இல்லாமல் இருந்தாலுங்கூட கௌரவமாக இருந்திருக்குமே, கொடுத்தால், நல்ல அதிகாரங்கள் கொடுக்கவேண்டும், அப்படியில்லாமல் ஏதோ ஒரு சிறு அதிகாரத்தைக் கொடுத்து நம்முடைய மதிப்பைக் குறைக்கப்பார்க்கிறார்களே என்று வாதிக்க முடியும். வாதத்திற்காக எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்பதற்காக இதைச் சொல்லுகிறேன். ஆகையால் இன்றைக்கு ஆலோசனைக் குழு என்பது ஆலோசனைக் குழுவாக இருக்கவேண்டுமேயொழிய, ஆலோசனைக் குழுவுக்கு நிர்வாக அதிகாரம் போகும் நிலைமை ஏற்பட்டால், இந்த சட்டசபைக்கும் அங்கு ஜில்லா அளவிலே ஏற்படக்கூடிய குழுவுக்கும் முரண்பாடு ஏற்பட்டுவிடக்கூடும். அந்த முறண்பாடு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் அதை ஆலோசனைக் குழுவாக வைத்திருக்கிறார்கள். அதேசமயத்தில், நாம் கொடுத்திருக்கும் அதிகாரங்களினால் பஞ்சாயத்துச் சட்டம் எந்த விதத்திலேயும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான் இந்த விஷயத்திலேகூட அவர்கள் ஆலோசனையைத்தான் சொல்லலாமேயொழிய, கடைசியாக இருக்கும் பொறுப்பு பஞ்சாயத்துக்கும் பஞ்சாயத்துக் கவுன்சிலுக்கும் இருக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தோம். அந்த முறையிலே பார்க்கும்போது அதிகாரம் கொடுக்கப்படவில்லை. அதிகாரம் கொடுக்காததால் மதிப்பு குறைந்துவிட்டது என்று சொல்வதெல்லாம் தவறான கருத்து அடிப்படையிலே ஏற்பட்ட விவாதம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்தப்படியாக, ஆலோசனைக் குழுவுக்கு யார் தலைவராக இருப்பது என்பதைப்பற்றிய விவாதம் வந்தது. நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர் அதற்குத் தலைவராக இருக்கலாமா, கூடாதா என்பதைப்பற்றியும் விவாதம் நடந்தது. ஆலோசனை சொல்லக்கூடிய குழு, ஆலோசனை சொல்வதுடன் நின்று விடவேண்டுமா, அந்தக் குழுவிலே சொல்லக்கூடிய ஆலோசனைகள் உடனுக்குடன் நிர்வாகத்திலே புகுத்தப்பட முடியுமானால் புகுத்தி விடக் கூடாதா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். நிர்வாக அதிகாரிகளே பங்கெடுத்துக்கொள்ளாத குழுவில் எந்த விதமான ஆலோசனையையும் சொல்லிவிடலாம். ஆனால், நிர்வாகப் பொறுப்பில் இருக்கின்ற கலெக்டர் முதலிய அதிகாரிகள் என்ன செய்யக்கூடும்? ஆலோசனை சர்க்காருக்குப் போய், அங்கிருந்து உத்தரவாக நமக்கு வருகிறபோது பார்த்துக்கொள்ளலாம் என்று அவர்கள் இருந்துவிடக்கூடும். ஆகையால், ஆலோசனை எவ்வளவு சிறந்ததாக இருந்தாலும், சர்க்காருக்குப் போய்த் திரும்பி வரட்டும் என்று அவர்கள் பேசாமல் இருப்பார்கள். அதற்குப்பதிலாக கலெக்டரையே இதற்குத் தலைவராக ஏற்படுத்தி, இந்தப் பொறுப்பை அவர்கள் கையில் கொடுக்கும்போது, அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு சில ஆலோசனைகளைச் சிபார்சு செய்யும்போது, அவைகளில் எந்த எந்த ஆலோசனைகளை உடனடியாக நிறைவேற்ற முடியுமோ அவைகளை நிறைவேற்றுவதற்கான பொறுப்பும் அவர்களுக்கே ஏற்பட்டு விடுகிறது. ஆகையால்தான், வெறும் ஆலோசனைக் குழுவாக இருந்து யோசனை சொல்வதோடு மட்டுமில்லாமல், அந்த ஆலோசனைகளில் உடனடியாக எதை எதை ஏற்று நடத்த முடியுமோ அந்த அளவுக்கு நிர்வாகம் ஏற்று நடத்த வேண்டும் என்பதற்காகத்தான் இது விஷயத்தை எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் யோசித்து ஏகமனதாக நிறைவேற்றினோம்.

வேறொரு மாறுபட்ட கருத்தும் சொல்லப்பட்டது. அதாவது, உத்தியோகப் பற்றற்றவரைத்தான் தலைவராகப் போடவேண்டும் என்ற எண்ணம் அந்தக் குழுவிலேயே வந்தது. அதைப்பற்றி எல்லாவிதமான அம்சங்களையும் விவாதித்து, இருக்கக்கூடிய நிலைமையிலே ஆலோசனைக் குழு

நல்ல முறையிலே, உபயோககரமான முறையிலே, பணியாற்ற வேண்டுமானால் கலெக்டர் தலைவராக இருந்தால்தான் நல்லது என்பது எல்லோரும் கடைசியாக, ஏகமனதாக ஒப்புக்கொண்ட கருத்து. நான் சொன்ன கருத்து மட்டுமல்ல; கவர்ன்மெண்ட் பக்கத்திலே கூட இதிலே மாறுபட்ட கருத்துக்கள் இருந்திருந்தாலும் அதைப்பற்றி கவலை இல்லை. ஏனென்றால், எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளும் விவாதித்து இதில் ஏகோபித்து முடிவு எடுத்திருக்கிறார்கள் என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கலெக்டரைத் தலைவராகப் போட்டிருப்பது சட்டசபை அங்கத்தினர்களின் மதிப்பையோ பார்லிமெண்ட் அங்கத்தினர்களின் மதிப்பையோ குறைக்க வேண்டும் என்பதற்காக அல்ல. இந்தக் குழுவில் சொல்லக்கூடிய ஆலோசனைகளை உடனுக்குடன் நிறைவேற்றுவதற்கு மட்டுமல்லாமல், சர்க்காருக்கும் அனுப்பி, சர்க்காரிடமிருந்தும் வேண்டிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும் கலெக்டருக்குப் பொறுப்பு கொடுத்தால்தான் இக்காரியம் நடைபெறும் என்பதற்காக கலெக்டரைத் தலைவராக நியமித்திருக்கிறோமே தவிர, வேறு எதற்காகவும் அல்ல. ஆகையால், சர்க்காரில் இருக்கும் மந்திரிகளோ அல்லது வேறு யாரோ அதிகாரிகளுக்குப் புதிய அதிகாரத்தைக் கொடுத்துவிடுகிறோம் என்பது அல்ல. இது ஆலோசனைக் குழுவுக்கு தலைமை வகிக்கவேண்டிய விஷயம்.

கலெக்டர் தலைவராக இருந்தால்தான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடனுக்குடன் கூப்பிட்டு புள்ளிவிவரங்கள் கேட்பதற்கெல்லாம் முடியும். கலெக்டருக்கு பதிலாக சட்டசபை அங்கத்தினரோ பார்லிமெண்ட் அங்கத்தினரோ தலைவராக இருந்தால், அதிகாரிகள் ஏதோ சாக்குச் சொல்லி எழுதி அனுப்பி விடலாம். காரியம் நடந்தாலும் நடக்கலாம், நடக்காமலும் போகலாம். சில இடங்களில் நல்ல முறையில் நடக்கலாம். ஆனால், பல இடங்களில் நன்றாக நடைபெறாது என்பது இந்த சட்டசபை நியமித்த குழுவினுடைய அபிப்பிராயமாக இருந்தது. ஆகையால்தான், குழு ஆலோசனை செய்து பார்த்து கடைசியாக இந்த முடிவுக்கு வந்திருக்கிறது. ஆகவே, அடிப்படையான விஷயங்களிலே மேஸ்திரி, சூபர்வைசர் என்று தங்களைத் தாங்களே குறைத்துப் பேசிக்கொள்கிறவர்கள் எம். எல். ஏ. என்றால் என்ன மதிப்பு என்பதையே தெரியாதவர்களாகத்தான் இருக்கவேண்டும். அவர்கள் தான் தங்களைத் தாங்களே குறைத்துப்பேசிக் கொள்ள முடியும். நான் மந்திரியாக இருப்பதைக்கூட சிறப்பாகக் கருதவில்லை; இந்தச் சபையில் ஒரு அங்கத்தினராக இருப்பதைத்தான் சிறப்புடையதாக கருதுகிறேன். இந்தச் சபை அங்கத்தினராக இருப்பதை விட சிறப்புடையது வேறு ஒன்றுமில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் இந்த மந்திரிகளைத் தேர்ந்தெடுப்பதும், மாற்றுவதும் ஆகிய அதிகாரம் அங்கத்தினர்களுக்குத்தான் இருக்கிறது. யார் நினைத்தாலும் அங்கத்தினர்களை மாற்ற முடியாது. அப்படி இருக்கிற போது அமைக்க இருக்கிற
12-40 p.m.
மாவட்ட வளர்ச்சி மன்றங்களினால் அங்கத்தினர்களுடைய மதிப்புக் குறைந்து விடுகிறது, என்று யாராவது நினைத்தால், தம்முடைய மதிப்பை உணராதவர்கள் தாம் அப்படிச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். "நான் பிரதம மந்திரியாக இருப்பதைக் காட்டிலும் பார்லிமெண்டு அங்கத்தினனாக இருப்பதையே மிகப் பெரிதாக மதிக்கிறேன்" என்று சர்ச்சில் சொல்லியிருக்கிறார். ஆகையால் இந்த மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு தலைவராக இருக்க முடியாத காரணத்தால் சட்டசபை அங்கத்தினர்களுடைய மதிப்பு எவ்வகையிலும் குறைந்துவிடவில்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அடுத்தபடியாக பல்வேறு நுணுக்கமான விஷயங்களைப் பற்றி இங்கே சர்ச்சை எழுந்தது. "இன்னும் பஞ்சாயத்துச் சட்டம் உருவாகவில்லையே! அப்படி இருக்க இந்தச் சட்டத்தை எப்படி கொண்டுவர முடியும்?" என்றார்கள். முதலில் எனக்கும் சந்தேகம் உண்டாயிற்று. சட்ட நிபுணர்களிடத்தில் இதைப்பற்றி விவாதித்தேன். அவர்கள் எனக்கு உணர்த்தியதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

8th September 1958] [Sri C. Subramaniam]

1958-ம் வருஷத்திய பஞ்சாயத்து ஆக்ட் என்று போட்டிருப்பது நாம் அடுத்தபடியாக கொண்டுவர இருக்கிற மசோதா. இப்போது நாம் கொண்டு வந்திருக்கும் இந்தச் சட்டம் உடனடியாக அமுலுக்கு வருவதாக இருந்தால் 1958-ம் வருஷத்திய பஞ்சாயத்து ஆக்ட் என்று போட்டிருப்பது தவறு. இந்தச் சட்டம் பாஸ் பண்ணின உடனே அமுலுக்கு வருவது இல்லை. எந்தத் தேதியில் இருந்து அமுலுக்கு வரும் என்று நோட்டிபிகேஷன் மூலமாக சர்க்கார் அறிவிக்கிறதோ அந்தத் தேதிலிருந்து தான் அமுலுக்கு வரப்போகிறது. அதாவது பஞ்சாயத்து சட்டம் அமுலுக்கு வந்த பிறகுதான் இந்தச் சட்டம் அமுலுக்கு வரப்போகிறது. பஞ்சாயத்துச் சட்டம் நிறைவேறவில்லையென்றால் இதற்கு எந்த விதமான அர்த்தமும் கிடையாது. இவை இரண்டும் ஒன்று சேர்ந்த சட்டம். இந்த இரண்டு சட்டங்களும் நிறைவேறிய பிறகு தான் உண்மையான மதிப்பு ஏற்படுகிறது. சீக்கிரத்திலேயே பஞ்சாயத்து சட்டத்தைக் கொண்டுவந்து இந்தச் சபையில் நிறைவேற்றி விடுவோம். அடுத்த வருஷத்தில் நிறைவேறினாலும் 1958-லிருந்து அமுலுக்கு வந்ததாகத்தான் பஞ்சாயத்துச் சட்டம் கருதப்படும். ஆகவே இப்போது இந்தச் சட்டத்தை நாம் நிறைவேற்றுவதில் எந்த விதமான ஆட்சேபணையும் கிடையாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி பல விஷயங்களைப் பற்றி அநேக யோசனைகளை கனம் அங்கத்தினர்கள் சொல்லியிருக்கிறார்கள். மறுபடியும் உட்கார்ந்து எதிர்க்கட்சித் தலைவர்களும், இந்த இலாகா காரியதரிசி, சட்ட இலாகா காரியதரிசி ஆகிய எல்லோரும் கலந்து பரிசீலனை செய்து சில முக்கியமான திருத்தங்களை ஒப்புக்கொள்வதாகவும் முடிவு செய்திருக்கிறோம். ஆகவே பொறுக்குக் கமிட்டிக்கு இந்த மசோதாவை அனுப்பவேண்டிய அவசியம் இல்லை. சர்க்கார் கொண்டுவந்த மசோதாவாக இருந்தால் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று வற்புறுத்துவதில் அர்த்தம் இருக்கலாம். அதிலும் கூட அவசியம் இல்லையென்று கருதுகிறபோது அப்படிப்பட்ட திருத்தம் கொண்டுவராமல் இருப்பதுதான் நல்லது. ஆனால் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒன்று சேர்ந்து ஏகோபித்துக் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவுக்கு அப்படிப்பட்ட திருத்தம் கொடுத்து சிக்கல்களையும், காலதாமதத்தையும் உண்டாக்குவது சரியல்ல. ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள் திருத்தங்களை வற்புறுத்தாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல விஷயங்களில் வற்புறுத்தாமல் இருக்கலாம். இந்த மசோதாவையும் நிறைவேற்றி பஞ்சாயத்து மசோதாவையும் நாம் நிறைவேற்றினால் நம்முடைய காலத்தில் நாம் சிறந்ததொரு காரியத்தைச் செய்தவர்களாக ஆவோம். அப்படிப்பட்ட பெரும் வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் வேறு ராஜ்யத்தில் இந்த மாதிரி பஞ்சாயத்து ஆக்ட், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்று கேட்டார்கள். வேறு எங்கும் ஏற்படவில்லை. இதிலும் நாம் தாம் வழிகாட்டியாக இருக்கிறோம் என்று பெருமை கொள்ளலாம். வழிகாட்டியாக இருப்பது என்பது இந்த மசோதாவைப் பற்றி மட்டும் அல்ல. இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிற அடிப்படையிலும் வழிகாட்டியாக இருக்கிறோம். சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டுவந்து இந்தச் சபையில் நிறைவேற்றியது என்பது அல்ல. எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்றாக உட்கார்ந்து ஏகோபித்த அபிப்பிராயத்தின் பேரில் ஒருமுகமாகக் கொண்டுவந்திருக்கும் மசோதா இது. இப்படி எல்லாக் காரியங்களுக்கும் ஏகோபித்த ஒரு முடிவான செயலை நோக்கி மேன்மேலும் நாம் சென்று கொண்டிருக்கிறோம். இது முக்கியமான கட்டம், முக்கியமான படி என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால் பலவகைகளிலும் இந்தச் சட்டமும், பஞ்சாயத்துச் சட்டமும் நமக்கு வழிகாட்டியாக, நம்முடைய தேசத்திற்கே வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. அதை நிறைவேற்றும் வாய்ப்பு நமக்குக் கிடைத்திருப்பது பெருமைக்குரியதாகும். இந்த மசோதாவை எல்லோருக்கும் ஒத்துக் கொள்ளவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே சொன்னார்கள் என்றால் இதைக் கொண்டுவருவதில் எப்படி ஏகோபித்த

[Sri C. Subramaniam] [8th September 1958

அபிப்பிராயத்துடன் எல்லோரும் வேலை செய்திருக்கிறார்கள் என்று நான் சொல்ல வேண்டியதில்லை. இதை வெளியில் இருக்கிறவர்களும் உணர்வார்கள் என்றே நம்புகிறேன். இதை செலக்ட் கமிட்டிக்கு விடாமல் உடனடியாக சட்டமாக்க வேண்டுமென்று சபையைக் கேட்டுக் கொள்கிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : On a point of ordcr, Mr. Speaker, நான் சொன்ன கருத்தை தவறாக அதிகாரத்தை மட்டும் எடுத்துக் கொண்டது தவறு என்பதாக அமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டு விட்டார்கள். நான் எதையும் சொல்லவில்லை. ஒரு நிர்வாகத்தின் அதிகாரத்தைக் கொடுக்கட்டும். சின்னச் சின்ன சந்தைக் கடையானாலும். . . .

MR. SPEAKER : It is a personal explanation and not a point of order.

SRIMATHI T. N. ANANDANAYAKI : அது சின்னச் சின்ன சந்தைக்கடையானாலும், பெரிய சந்தைக் கடையானாலும் ஒன்று தான் என்பதை மாத்திரம் விளக்கமாகக் கூறிகொண்டு நான் உட்கார்ந்து விடுகிறேன்.

MR. SPEAKER : இன்னும் எட்டு அங்கத்தினர்கள் பேசவேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 40 நிமிஷங்கள் தான் இருக்கின்றன.

THE HON. SRI C. SUBRAMANIAM : பெயர் கொடுத்திருக்கிறவர்கள் எல்லோரும் பேசவேண்டும் என்பது உண்டா ?

MR. SPEAKER : பெயர் கொடுக்காமலே இருந்துவிட்டால் எனக்கு சங்கடம் இல்லை. பெயர் கொடுத்திருக்கும்போது நான் என்ன செய்வது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : After all, there should be something in the Leader of the Opposition and the Leader of the House intervening and explaining the thing. If new points are going to be made, I am not going to stand in the way. What is the use of standing up and repeating the same points? If any new points are made, it is welcome. Therefore, I would respectfully submit that everybody need not speak on every Bill unless some new points are to be made. I would request the Members to refrain from speaking and see that the programme laid down by the Business Advisory Committee is kept up. It is not a programme which has been chalked out by anybody else but by the representatives of all parties.

MR. SPEAKER : Am I, therefore, to take it that all hon. Members who have given their names to me are not going to speak?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Chair should decide it.

MR. SPEAKER : Yes; how long does the Hon. Minister want to reply?

THE HON. SRIMATHI LOURDAMMAL SIMON : Ten minutes.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : In view of the fact that we shall have ample time tomorrow, we shall take up the Bill clause by clause tomorrow.

MR. SPEAKER : I shall call the Minister at 1-20 p.m. to reply. She will take ten minutes. We shall finish the general discussion to-day and take up the Bill clause by clause tomorrow.

8th September 1958] [Mr. Speaker]

I shall call only four Members now. But if each Member speaks only for five minutes, I can call all Members.

* SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : கனம் தலைவர் அவர்களே, ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்கள் மசோதாவின்மீது இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஜில்லாக்களின் முக்கியமான அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றியும், பஞ்சாயத்துத் திட்டங் களைப் பற்றியும், நகரசபைத் திட்டங்களைப் பற்றியும் அந்தப் பிரதேசங்கள் சம்பந்தப்பட்ட எல்லாக் காரியங்களைப்பற்றியும் சர்க்காருக்கு ஆலோசனைகள் கூறும் சபைகளை சட்ட பூர்வமாக அமைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது ; ஜில்லா போர்டுகள் கலைக்கப் பட்ட பிறகு அவைகளுடைய அதிகாரங்கள் யாவும் கிராமங்களுக்கே அளிக்கப் பட வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்துடனும் சர்க்கார் இந்த மசோ தாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த இரண்டு நோக்கங்களும் நிறைவேறுவதன் பொருட்டு, எல்லா அதிகாரங்களும் பஞ்சாயத்துகளுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் கொடுக்கப்பட்டு, ஆலோசனைகள் கூறு வதற்கு மாத்திரம் உரிமை உடைய சபைகளாக ஜில்லா அபிவிருத்திக் குழுக்கள் இருப்பதற்கு மசோதா வகை செய்கிறது. ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்களால் பல பெரிய நன்மைகள் நமக்கு ஏற்படக்கூடும். ரஸ்தாக் கள் போடுவது போன்ற திட்டங்களையும் மற்ற பல அபிவிருத்தித் திட்டங் களையும் நிறைவேற்றுவதைப் பொறுத்தவரையில், எந்த இடத்திற்கு எந்த அபிவிருத்தி உடனடியாகத் தேவை என்று சீக்கிரம் முடிவு செய்ய லாம். அதாவது, இத்தகைய திட்டங்கள் குறித்து பல வட்டாரத்தின ரிடையே அபிப்பிராயபேதம் ஏற்படுமேயானால், அப்போது ஜில்லா அபி விருத்திக் கவுன்சிலிலுள்ள பிரதிநிதிகள் கூடிப்பேசி, தீர விவாதித்து, எந்த இடத்திற்கு எந்த அபிவிருத்தி உடனடியாகத் தேவை என்று துரிதமாக முடிவு செய்யலாம். இந்த விஷயத்தில் ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் நமக்கு மிகவும் பயன்படும் என்பதில் சந்தேகமே இல்லை. உண்மையில் அந்தக் கவுன்சிலில் அங்கத்தினர்களாக இருக்கக்கூடிய நமக்கு அதிகாரங் கள் இல்லாவிட்டாலும்கூட, அதனுடைய தீர்மானங்கள் எல்லாம் மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பிரதித்வனியே அல்லாது அதி காரிகளின் பிரதித்வனி அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அந்தக் கவுன்சிலில் அங்கம் வகிக்கக்கூடிய அதிகாரிகளுக்கு பேசுவதற்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர, வோட்டளிப்பதற்கு உரிமை அளிக் கப்படவில்லை. எனவே, அங்கே நிறைவேற்றப்படுகிற ஒவ்வொரு தீர்மான மும் மக்களின் பிரதிநிதிகளால் நிறைவேற்றப்படும் தீர்மானமாகத் தான் இருக்கும். இந்தக் கவுன்சில் நல்ல முறையில் அமைக்கப்படுவதற்கு மசோதா வகைசெய்வது குறித்து நாம் மகிழ்ச்சி கொள்ள வேண்டும். நமக்கு அதிகாரங்கள் இல்லாவிட்டாலும், நமது [redacted]ரின் தேவைகளை சொல்வதற்கும் அவை குறித்து அவ்வப்போது கூடி விவாதிப்பதற்கும் உரிய ஸ்தலமாக அக்கவுன்சில் அமைகிறது. திட்டங்களில் அக்கறைகொண் டிருக்கும் பிரதிநிதிகள் அவ்வப்போது சென்னைக்கு வந்து தான் காரியங் களை கவனிக்க வேண்டும் என்ற நிலைமை மாறி, ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலேயே அதிகாரிகள் முன்னிலையிலேயே தமது அபிப் பிராயங்களை வற்புறுத்திக் கூறுவதற்கும் அவைகளை சீக்கிரமே நிறை வேற்ற துரிதமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கும் முடியும் என்றும் நான் நம்புகிறேன். அந்தக் கவுன்சில்கள் வந்த பிறகு, திட்டங் களில் அக்கறை கொண்டிருக்கும் உறுப்பினர்கள் அந்தக் கவுன்சில்களி லேயே உட்கார்ந்துகொண்டு தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வற்புறுத் தினால், காரியங்கள் சீக்கிரமே நடக்கும் என்பதில் சந்தேகமில்லை. அந்தக் கவுன்சிலின் குரல் மக்களுடைய பிரதிநிதிகளின் குரலாக இருக்குமே யல்லாது அதிகாரிகளின் குரலாக இருக்கவே இருக்காது. 12-50 p.m.

ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்களின் கூட்டங்களைப்பற்றி நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அந்தக் கவுன்சிலின் ஒரு கூட்டத் திற்கும் மறு கூட்டத்திற்கும் இடையிலுள்ள காலம் 3 மாதங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும் என்று தான் மசோதாவில் சொல்லப்

[Srimathi P. K. R. Lakshmikantham] [8th September 1958

பட்டிருக்கிறது. ஆகவே மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தான் கவுன்சில் கூட வேண்டும் என்று அர்த்தமில்லை. தேவையானால், அதிக சீக்கிர மாகவே கூட்டத்தைக் கூட்டலாம் என்று தான் அர்த்தம்; அவசியம் இருந்தால் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையோ மாதத்திற்கு ஒரு முறையோ கூட கூட்டத்தைக் கூட்டலாம். அதற்கான அதிகாரம் கவுன்சில் தலைவருக்கு இருக்கிறது.

ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்களின் மூலம் நமக்கு பல அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. ஆரம்பக் கல்விக்கான பொறுப்பு முழுவதும் நம் மிடம் ஒப்படைக்கப்படுகிறது. அது சம்பந்தப்பட்ட நமது கடமையை நாம் சரிவர ஆற்றுவோம் என்று நான் நம்புகிறேன். மேலும், விவசாயம், தொழில்கள் முதலியவைகளை கவனிப்பதற்குரிய அதிகாரங்களும் அக்கவுன் சில்களின் மூலம் நமக்குக் கொடுக்கப்படுகின்றன. இந்தக் கவுன்சில்கள் வெற்றிகரமாக இயங்கும்படி செய்வதற்கான முயற்சியை நாம் செய்தால், நாம் நல்ல பலனை அடைவோம் என்பதில் சந்தேகம் இல்லை.

(Deputy Speaker in the Chair.)

இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். ஐந்து விஷயங்கள் சம் பந்தமாக நிரந்தரக் குழுக்களை அமைக்கலாம் என்று மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெண்கள் முன்னேற்றத்திற்காகவும், பெண்கள் நலன்களுக்காகவும் ஒரு நிரந்தரக் குழு அமைக்கப்பட்டால் பெண்கள் துரிதமாக முன்னேறுவார்கள் என்று நம்புகிறேன். அதற்கான ஒரு குழுவை அமைக்க மசோதாவில் வகைசெய்ய வேண்டுமென்று சர்க் காரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

Sri N. R. THIAGARAJAN: கனம் தலைவர் அவர்களே, ஜில்லா அபிவிருத்திக் குழுக்கள் வர வேண்டுமென்று நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்தவர்களில் நானும் ஒருவன். ஆனால், நான் என்ன எதிர்பார்த்தேனோ அது மசோதாவில் இல்லாதது கண்டு நான் உண்மை யிலேயே வருந்துகிறேன். "அபிவிருத்திக் கவுன்சில்" என்றால், அதற்கு நிறைய அதிகாரங்கள் இருக்கும் என்று நான் கனவு கண்டு கொண் டிருந்தேன். அந்தக் கனவிலிருந்து விழித்து, நனவில் என்ன நடக் கிறது என்பதை இப்போது பார்க்கும் நான், அதிகாரமற்ற பொம்மை சபைக்குப் போய் அங்கே உட்காரப் போகிறோம் என்பதை அறிந்து மிகவும் வருத்தப்படுகிறேன். கனம் தலைவர் அவர்களே, இங்கே உங்களுக்கு நாங்கள் தலைவணங்குகிறோம். ஆனால், ஜில்லா அபிவிருத்திக் கவுன் சிலில், 21 வயதில் ஐ.ஏ.எஸ். பாஸ் பண்ணிவிட்டு அதற்குப் பிறகு ஆறு வருடங்களுக்குள் கலெக்டராக வரும் சின்னஞ் சிறிய ஒருவருக்கு நாங்கள் தலைவணங்க வேண்டியிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்கள் அதிகாரமற்ற பொம்மை சபைகள். இப்போது டெல்லியில் அதிகாரம் குவிந்துகிடக்கிறது. டெல்லியிலுள்ள மத்திய அரசாங்கம் தன் அதிகாரங் களை ராஜ்ய அரசாங்கங்களில் ஒன்றாகிய சென்னைக்குக் கொடுப்பதற்கு வருத்தப்படுகிறது. அதற்கு அடுத்தபடியாக சென்னையில் அதிகாரம் குவிந் து கிடக்கிறது. சென்னை அரசாங்கம் தன் அதிகாரங்களில் சிலவற்றை மதுரை ஜில்லாவிற்குத் தருவதற்கு வருத்தப்படுகிறது. அதே போல், மதுரை ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் தன் அதிகாரங்களை கிராம அபி விருத்திக் கவுன்சில்களுக்கு அளிப்பதற்கு வருத்தப்படுவது இயற்கைதான். ராஜ்ய அரசாங்கத்தார், ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலுக்கு இதிக அதி காரங்களை வழங்கவேண்டும். உதாரணமாக, ஆஸ்பத்திரிகள், உயர்தரப் பள்ளிகள் ஆகியவை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் பூராவையும் ஜில்லா அபி விருத்திக் கவுன்சில்களுக்கு வழங்கலாம். அத்துடன், வரி வசூலிக்கும் அதிகாரத்தையும் அந்தக் கவுன்சில்களுக்கு வழங்கவேண்டும்.

மேலும், அதிகாரங்கள் ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்களின் தலைவர் களுக்கு அளிக்கப்படவேண்டும். உதாரணமாக, முனிசிபாலிடியை எடுத்துக் கொண்டால், முனிசிபல் சேர்மனுக்குத் தான் அதிகாரங்கள் இருக்கின்றன. முனிசிபல் கமிஷனர் சேர்மனின் அனுமதி பெற்று காரியங்களைச் செய்கிறார்.

8th September 1958] [Sri N. R. Thiagarajan]

அதேபோல், கார்ப்பொரேஷனில் மேயரிடம் அதிகாரங்கள் இருக்கின்றன; அவருடைய அனுமதிபெற்று கமிஷனர் காரியங்களைச் செய்கிறார். அதே போல் ஜில்லாக்களிலும் ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்களின் கீழேதான் கலெக்டர் வேலை செய்யவேண்டும். ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலார் சொல்வதைக் கேட்கும் நிலையில் கலெக்டர் இருக்கவேண்டுமே தவிர, அவர் சொல்வதற்கு, அவருக்கு, கவுன்சில் அங்கத்தினர்கள் தலை வணங்குவது என்பது என்னால் கொஞ்சம்கூட ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கிறது. அதற்கான திருத்தத்தை மசோதாவில் செய்யவேண்டும்.

ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலுக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டுமென்றும், அது ஒரு ஜில்லா சர்க்காராக இருக்க வேண்டுமென்றும் கூறப்பட்டது. அந்த அபிப்பிராயத்தை நான் ஆதரிக்கி றேன். சட்டசபை அங்கத்தினர்கள் அவர்களுடைய தொகுதிகள் சம்பந்தப் பட்ட சின்னஞ்சிறு காரியங்களுக்காகவெல்லாம் சென்னைக்கு வர வேண்டிய நிலை இருக்கக்கூடாது. மதுரையில் ஒரு சிறிய கட்டிட வேலை செய்யப்பட வேண்டுமானால் அதற்கு சென்னைக்கு வந்து போக வேண்டிய நிலை இருக்கிறது. தங்கள் தொகுதிகள் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு சிறிய காரி யத்திற்காகவும் சட்டசபை அங்கத்தினர்கள் சென்னைக்கு வரவேண்டியிருக் கிறது. ஜில்லா போர்டின் நிலைமை என்ன என்பது, ஜில்லா போர்டு தலைவராகிய கனம் உதவி சபாநாயகர் அவர்களுக்குத் தெரியும். மதுரை யில் ஒரு சிறிய கட்டிட வேலை செய்யப்படவேண்டுமென்றால் அதற்கு சென்னையிலுள்ள ஆர்கிடெக்டைப் போய்ப் பார்க்கவேண்டியிருக்கிறது. இந்த நிலைமை மாறவேண்டும். உள்ளூர் ஆர்கிடெக்டின் மூலம் காரி யத்தை நடத்திக்கொள்ளக்கூடிய நிலைமை வரவேண்டும். மதுரையில் எத்தனையோ கட்டிடங்கள் உள்ளூர் தொழிலாளர்களால்தான் கட்டப்பட்டி ருக்கின்றன. அவை எவ்வளவோ நன்றாக இருக்கின்றன. ஜில்லா அபி விருத்திக் கவுன்சில்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் முறையில் மசோதா திருத்தியமைக்கப்படவேண்டும் என்று மறுபடியும் சொல்லிக் கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஜில்லா அபிவிருத்திக் குழு என்பது அமைக்கப்பட்டு அந்த குழுவில் இருந்துவரக் கூடிய சிபார்சுகளை ஏற்றுக்கொள்வது என்ற அடிப் படையில் பல அங்கத்தினர்கள் இங்கு பேசினார்கள். ஆனால் இந்த ஜில்லாக் குழு எப்படியிருக்கவேண்டும், அதற்கு எவ்வளவு அதிகாரங்கள் தேவை என்பதைப்பற்றியெல்லாம் பேசினார்கள். குறிப்பாக இந்த Block டெவலப்மென்ட் கமிட்டி அதன் காரணமாக ஜில்லாக் குழுக்களுக்குப் போகக்கூடிய அங்கத்தினர்கள், பார்லிமென்ட் அங்கத்தினர், சட்டசபை அங்கத்தினர்கள், இன்னும் பஞ்சாயத்து யூனியனில் இருந்து தேர்ந் தெடுக்கக்கூடிய அங்கத்தினர்கள் இவர்கள் எல்லோரும் அங்கிருந்து அந்தப் அந்தப் பகுதிகளின் தேவைகள் என்ன என்ன என்பதை அறிந்து சர்க்கா ருக்கு யோசனைகள் சொல்வதற்காக அமைக்கப்படும். சிபார்சு செய்க்கூடிய சபை என்ற அர்த்தம் அங்கு இருக்கிறது. ஆனால் அம்மாதிரி ஒவ்வொரு கௌன்ஸில் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்படும்போது சென்ற காலங் களில் ஜில்லா போர்ட் மற்ற இதர நிர்வாகங்களில் குவியலாக இருந்து வந்த அதிகாரத்தை நிர்வாக அதிகாரிகளும் பொதுமக்களும் நல்ல தொடர் புடன் மாற்றி கிராமப்புறங்களில் முன்னேற்றம் அடையாத பகுதிகளுக்கு பல திட்டங்களை முதலில் உருவாக்கி மக்கள் அவைகளில் நம்பிக்கை வைத்து உற்சாகத்தோடு அதை ஏற்றுக்கொண்டு தங்கள் தங்கள் கிராமங் களை முன்னேற்றப் பாதையில்கொண்டு செல்லமுடியும் என்ற நம்பிக்கை யுடன் கூட, இந்தத் திட்டத்தை வரவேற்று அதற்குரிய சாதனைகளை செய்ய கிராம பஞ்சாயதுக்களோடு டெவலப்மென்டும் இணைக்கப்பட்டு அதன் காரண மாக கிராமப்புறங்களில் பலவித திட்டங்களின்பேரால் வேலைகள் நடைபெறு கின்றன. அப்படி மாறாக ஜில்லா டெவலப்மென்ட் கௌன்ஸில் என்று இப்பொழுது ஏற்படுகிறது அது எந்தளவு விரிவான முறையில் இருக்க முடியும், எவ்வளவு ஜனத்தொகையுள்ள இடமாகயிருக்கவேண்டுமென் பதையெல்லாம் பார்க்கும்போது, எப்படி இருந்தால் அது பயன் அளிக்கக் 1 p.m.

கூடிய முறையில் வேலை செய்யமுடியும் என்பதையெல்லாம் பார்க்கும் போது, ஏழு லட்சம் ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒவ்வொரு கௌன்ஸில் ஏற்படுத்துமாறு செய்வதுதான் சிறந்த முறையாக இருக்கும். அப்படியானால்தான் அது ஜனங்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளவும், ஆங்காங்கு இருக்கும் குறைகளைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டிய சிபார்சுகள் செய்யவும் நல்ல வாய்ப்பும் வசதியும் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பல இலாகாக்கள் இதில் இணைக்கப்பட்டு அந்தந்த இலாகாக்களுக்கு ஒவ்வொரு கமிட்டி அமைத்து அதன் மூலம் சிபார்சு செய்வது என்ற அடிப்படையில் வகுக்கப்பபடிருக்கிறது. அதில் மீன் இலாகாவும், குறிப்பாக ஹரிஜன இலாகாவும் மது விலக்கு இலாகாவும் விட்டுப் போயிருக்கிறது. ஆனால் சிபார்சு செய்வது என்ற முறையில் வரும்போது இந்த இரண்டு மூன்று இலாகாக்களையும் விடாமல் அதையும் சேர்த்து நடத்துவது சுலபமாகயிருக்கும். அதற்கு அந்தந்த இலாகா ஒரு தனி கமிட்டி என்ற பெயரில் அங்கு சட்டசபை மெம்பர்கள் செல்லவேண்டிய நிலைமை இல்லாத முறையில் அதையும் (அபிவிருத்தி குழுவோடு) சேர்த்திருந்தால் மிகவும் நல்ல முறையில் இருந்திருக்கும். அடுத்தபடியாக, நீர்ப்பாசன இலாகா சம்பந்தமாக என்ஜினீயரிங் டிபார்ட்மெண்ட் என்று இருக்கிறது. உணவு உற்பத்தி நமக்கு மிகவும் தேவையாயிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், நீர்ப்பாசனத்தை அபிவிருத்தி செய்வதில், விவசாயத்தை அபிவிருத்தி செய்வதில் சர்க்கார் முழு மூச்சோடு பாடுபடுகிறது. அந்த முறையில் அங்கு ஒரு கௌன்ஸில் ஏற்படுகிறது என்றால் அதிலிருந்து செய்யக்கூடிய சிபார்சுகளை சர்க்கார் ஏற்றுக்கொண்டு அதை அனுசரித்து அங்கு போடப்படும் திட்டங்களை ஒத்துக் கொள்வதுதான் நியாயமாக இருக்கும். அப்படியில்லாமல், மத்திய சர்க்கார் மான்யத்தையும், மாகாண சர்க்கார் மான்யத்தையும் பெற்றுக்கொண்டு சீப் என்ஜினீயர் அவர்களின் இஷ்டம் போல் ஒரு திட்டம் தயாரித்து அதை ஏற்றுக்கொள்வது என்ற அடிப்படையில் திட்டங்கள் இருக்குமானால் அது நமது நீர்பாசன வேலைகளை சுலபமாக தீர்த்துக் கொள்வதற்கு தடையாக இருக்குமென்ற காரணத்தினால் இந்த அபிவிருத்தி கவுன்ஸில் அந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய நீர்ப்பாசன சம்பந்தமான திட்டங்களுக்கு வேண்டிய காரியங்களை நிர்ணயித்து அதை அனுப்பி அதை ஏற்றுக்கொண்டு என்ஜினீயர்கள் திட்டங்கள் தயாரித்துக் கொடுப்பதுதான் நல்ல முறையில் இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு அபிவிருத்தி கவுன்ஸிலில் நாம் தீர்மானித்து சிபார்சு செய்யக்கூடிய விஷயங்களை அனுப்பிய இரண்டல்லது மூன்று மாதத்திற்குள், அதாவது கமிட்டியில் அடுத்த கூட்டம் கூடுவதற்குள் சர்க்காரிடமிருந்து "உண்டு" அல்லது "இல்லை", இந்தத் தீர்மானத்தில் கண்டுள்ளது ஏற்றுக்கொள்ளப்பட்டது அல்லது ஏற்றுக்கொள்ளப்படவில்லை, இத் தீர்மானத்தில் உள்ளவைகளில் இன்னின்னதை செய்கிறோம், இன்னின்னது செய்ய சாத்தியப்படாது என்ற பதிலையாவது சர்க்கார் உடனடியாக தெரிவிக்க வேண்டியது அவசியம், அப்படித் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஏழு லட்சம் ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒவ்வொரு பிளாக் டெவலப்மெண்ட் கௌன்ஸிலும், இலாகா சப் கமிட்டியும் ஏற்படுத்துமாறு கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

*Sri R. SRINIVASA IYER : Mr. Deputy Speaker, Sir, having heard the Hon. the Leader of the House explain certain matters with reference to the provisions of the Bill, I do not think there is much room for discussion. But yet I would suggest that if only we had not followed the usual procedure that we were following, namely, developing the cities first and then going to the villages, we would have done better. For the past ten years we have been talking of improving the villages. But actually we are thinking of improving the cities first before going to the villages. Why I say this is, if the Panchayat Bill had been brought up before the House first and passed, many of the Members would have known the

8th September 1958] [Sri R. Srinivasa Iyer]

provisions of that Bill and the powers vested in the panchayats and the panchayat union councils. If at least the report and the connected papers (in 4 volumes) of the proceedings of the Legislature Committee or Local Administration which is sought to be distributed to us tomorrow had been distributed to us already, many of the Members who were not members of that Committee would have known what powers were to be vested with the panchayats and the panchayat union councils, and would have avoided criticising the Bill as they did and would also have avoided pressing the reference of the Bill to a Select Committee. The suggestion made in the High Court and other courts is that we are legislating too hastily. I, as a Member of the Assembly, desire to avoid such a remark being made against the Members. I am pained to say that all these Bills are circulated to us with very little time to study them. I desire in this connection to suggest to the Assembly as well as the Rules Committee that in future, if it is possible, at least Bills that do not go up before a Select Committee and which are not intended to go before a Select Committee are published and distributed to the Members of the Legislature at least two weeks before they are introduced and brought up for consideration. If a Bill is to go before a Select Committee, it is a different matter. The Select Committee certainly will go into the various provisions of the Bill and make necessary amendments. Even in such cases after the report of the Select Committee is published, two weeks time should be given to the Members to enable those members who were not members of the Select Committee to give their suggestions and amendments. Let me not be understood as talking outside the scope of the present Bill.

Reverting to the Bill under discussion, I wish to refer in this connection to the Panchayat Bill which is also there. In that Bill it is said that such and such powers are going to be vested in the panchayat and panchayat union councils. I find that that Bill contains more than a hundred pages with a large number of sections. That Bill had been distributed to us only a few days back. I dare say none of us had the time to go through those various provisions and find out what all powers had been conferred on the panchayat and panchayat union councils. Yet I would say that the present district boards are exercising certain powers over the panchayats. The Inspector of Local Boards is exercising certain powers over the district boards and panchayats. These district boards are proposed to be substituted by the panchayat union councils and the present Development Councils. But the Development Councils will be devoid of any powers of supervision, namely, cancelling the orders or the decisions of the panchayat councils. If the Development Council is not given powers of a supervisory nature over the panchayat councils, certainly, the Development Council will only be a mere advisory body taking the place of the Planning Boards which did no work. We only find hundreds of officers coming and crowding the meeting hall where the Planning Board meeting takes place and no decisions are taken at the meeting. As a Member appointed

[Sri R. Srinivasa Iyer] [8th September 1958

to these District Advisory Committee by the Government under the existing rules, I have given notice of several subjects to be discussed at the meeting of the District Advisory Committee They are not even included in the agenda. They are said to be under investigation. Investigation by whom? By the Chairman or by the department concerned? Similarly the members of the Development Council have no powers absolutely. As the Bill now stands, only the Chairman of the Council, namely, the District Collector has the power to convene a meeting of the Council. The Chairman if he likes can call for a meeting and the maximum interval fixed between two meetings is three months. It must be only one month. It should not be even two months as suggested by some hon. Members. Every month we must have a meeting of the Council. The Chairman must be constrained to call for a meeting of the Council if at least half a dozen non-official members require that a meeting of the Council should be called for to discuss an urgent subject. The proposed Development Council has no status and powers except that of an advisory association. 'Association' is the word used in the Statement of Objects and Reasons appended to the Bill. It may be that decentralization has been given effect to by giving larger powers to the panchayat councils and the panchayat union councils. Yet I am constrained to state that these Development Councils must also have some powers of a supervisory nature just as the Government or the Inspector of Local Boards and Municipal Councils are at present having, over the district boards and the panchayats. The Collector has supervisory powers over the panchayats. The Regional Deputy Inspectors of Local Boards and the Inspector of Local Boards have also supervisory powers. Over these, we have the Government with power to interfere with the orders and decisions of the panchayats and district boards.

1.10 p.m.

Let us take it that there is a fair or festival and a touring cinema is to be installed. Suppose licence is refused for it by the concerned authority. Who is the authority to consider or modify? The panchayat union may be the authority. But above the panchayat union, who is the authority? There is no authority. I am yet to see the Panchayats Bill coming before this House and being passed into law. We do not know the provisions of that Bill and how far the Bill is going to fructify. I dare say that though the point of order raised by Srimathi Anandanayaki may not be strictly a point of order, yet it is not proper that we should legislate on the District Development Council before we passed that Bill into an Act. It may be that the Hon. the Leader of the House is quite right in saying that it would not be a point of order because this Bill is going to come into operation only on a date to be fixed by the Government and that too not in the entire State but in parts of the State. As and when they like, this Bill would be operative throughout the State. Even though it may be that we pass that Bill in this session itself, it may be that it may not be assented to by the Governor or it may be returned by the Council. What is to happen to this Bill then? I respectfully submit that we are

8th September 1958] [Sri R. Srinivasa Iyer]

putting the cart before the horse. The Panchayats Bill should have come earlier. The Panchayats Bill should have been passed earlier before this Bill is introduced. We are now having District Advisory Councils and they are functioning in the place of the district boards. Why should we hurry up this legislation? I am not saying that it should go to a Select Committee. I am saying all this so that the Government, the sponsors of the Bill, may consider the repercussions in the minds of the hon. Members of this House if this Bill is passed before the other legislation which ought to precede it is passed. I do not want to say anything disparagingly about the Hon. Minister for Local Administration. I have heard the speech of the Hon. the Leader of the House and if all the explanation contained in it had been given to us earlier when the Bill was introduced, many of the criticisms and the consequent counter-criticisms—several hon. Members have criticized the Government in strong terms—and there has been resentruent on such criticisms might have been avoided. Let us forget all that has happened. I commend this Bill for the consideration of this House at once.

Sri J. MATHA GOWDER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஜில்லா ஆலோசனைக் குழு அமைப்பு மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஜில்லா நிர்வாகமானது சரியாக நடைபெறுவதற்காக அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். ஆனால் அதில் இருக்கக்கூடிய சில கஷ்டங்களையும் அங்கு சில தவிர்க்க முடியாத நிலையில் இருக்கக்கூடிய அதிசாரிகளுடைய அதிகாரத்தையும், பொதுமக்களின் பிரதிநிதிகளின் கையில் அந்த அதிகாரத்தை மாற்றுவதற்கு இடம் அளிக்காததைப்பற்றியும் இந்த சபையில் பல அங்கத்தினர்கள் பலவாறாகப் பேசியிருக்கிறார்கள். இதில் ஒன்று, ஆலோசனைக் குழு என்று சொல்லப்படுகிறது. அதாவது ஆலோசனைக் குழு ஒன்று நியமித்திருக்கிறோம், அந்த ஆலோசனைக் குழுவில் இருக்கக்கூடியவர்களுக்கு வோட்டு உரிமை இருக்கிறது. இந்த வோட்டு உரிமை எங்கேயிருந்து வந்தது என்று தெரியவில்லை. தேர்ந்தெடுக்கப்படாத ஆலோசனைக் குழுவுக்கு வோட்டு போட அதிகாரம் கிடையாது. அப்படியிருக்கும் போது இப்போது தரப்பட்டிருக்கிறது. செக்ஷன் 6 பிரிவு 3-ல் வோட்டு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு தீர்மானத்தை கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுமென்றால் ஆலோசனைக் குழுவின் மெம்பர்களின் மெஜாரிட்டி வோட்டுகளின் பேரில் நிறைவேற்றப்படும், அதோடு ஜில்லாக் கலெக்டருக்கு ஒரு காஸ்டிங் வோட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வோட்டுரிமை எவ்விதம், எந்த முறையில், கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று இப்போதுள்ள ஆலோசனைக் குழுக்களை எல்லாம் கலைத்துவிட்டோம் என்று தெரியவருகிறது. டிஸ்ட்ரிக்ட் அட்வைஸரி கமிட்டி, உணவு கமிட்டி, பிளானிங் கமிட்டி இவைகளை எல்லாம் கலைத்திருக்கும் போது மதுவிலக்கு கமிட்டி எங்கே போனது என்று தெரியவில்லை. அது தனியாக இயங்குமா இல்லையா என்பதைப் பற்றிச் சொல்லவில்லை. இதிலிருந்து அது தனியாக இயங்கும் என்று பொருள் கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறது.

அடுத்ததாக ஜில்லா நிர்வாகம், பஸ்போக்குவரத்து, மின்சாரம் இவை போன்ற விஷயங்களில் முக்கியமாக ஈடுபடவேண்டியிருக்கிறது. ஆனால் இந்த விஷயங்களில் இந்தக் குழுவினருக்கு ஆலோசனை சொல்லுவதற்கு இடமிருப்பதாகத் தெரியவில்லை. இதில் மின்சார இலாகாவையும் மின்சார அமைச்சரையும் தனியாக விட்டிருக்கிறார்கள்.

மற்ற இலாகாக்களுக்கெல்லாம், மற்ற அமைச்சர்களுக்கெல்லாம் ஆலோசனை சொல்லலாம் என்றிருக்கும்போது மின்சார இலாகாவுக்கும், மின்சார அமைச்சருக்கும் தனியாக சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. நாட்டில் இன்று விவசாயத்திற்கு முக்கியமாக பயன்பட்டு வருகின்ற மின்சாரம் சம்பந்தமான காரியங்களில் ஆலோசனை சொல்லுவதற்கு இடமில்லையென்றால் இந்த ஆலோசனைக் குழு இருந்தாலும் ஒரு பிரயோசனமும் இல்லை. இதைப் பற்றி எல்லா அங்கத்தினர்களும் கூறினார்கள். அந்த கருத்தோடு ஆமோதிக்கவேண்டியிருக்கிறது.

அடுத்ததாக கலெக்டர் அந்த குழுவில் இருக்கலாம்; ஆனால் அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் கூடுதலாக இருக்கின்றன. அவர் வேண்டுமானால் இந்தக் குழுவுக்கு காரியதரிசியாக இருக்கலாமே தவிர அவர் தலைவராக இருக்கவேண்டுமென்று அவசியமில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் தலைவராக இருக்கலாம். ஏதாவது டிபார்ட்மெண்ட் அதிகாரிகளை அழைத்து ஏதாவது கேட்கவேண்டும் என்றால் சேர்மன் உத்தரவின் பேரில் கலெக்டர் அந்த அதிகாரிகளை அழைத்து பதில் சொல்லுவதற்கு ஏற்பாடு செய்யலாம். இவ்விதம் காரியதரிசி என்ற முறையில் கலெக்டரை நியமிக்கலாம். அதல்லாமல் அவரையே சேர்மனாக நியமித்திருப்பதின் காரணம் என்னவென்று தெரியவில்லை. இதை எல்லா கட்சி மெம்பர்களும் ஆலோசித்து ஏகோபித்த முடிவின் பேரில் தான் கொண்டு வந்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறினாலும், இன்றைக்கு இந்த சட்டத்தை நாம் புதிதாகக் கொண்டு வந்திருக்கிறோம். வேறு மாகாணங்களில் இல்லாத ஒரு புது சட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம். ஜில்லா நிர்வாகம் சரியாக நடைபெறுவதற்காக இந்தச் சட்டத்தை கொண்டுவருவதென்று தீர்மானிக்கும்பொழுது மேலும் கலெக்டர் கையில் அதிகாரங்களைக் குவித்துக்கொண்டு இருப்பது நியாயமல்ல. ஜில்லா நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் இது "பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கா முடிந்த கதை" யாக இருக்கிறது. "நல்ல பிள்ளையார் பிடித்து தாருங்கள்" என்று கலெக்டர் கையில் கொடுத்தால், அவர் குரங்காகப் பிடித்து தரக் கூடிய நிலையில் இருக்கக் கூடாது என்றுதான் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போதுள்ள பிளானிங் கமிட்டி நடப்பதைப்பற்றி பலர் சொன்னார்கள். எங்கள் ஜில்லாவிலும் இதே மாதிரி தான் நடந்து கொண்டிருக்கிறது எங்கள் ஜில்லாவில் மாத்திரம் தான் இவ்விதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று எண்ணிக்கொண்டிருந்தேன். எல்லா இடங்களிலும் இதே மாதிரி தான் இருந்து கொண்டிருக்கிறது. அந்த கூட்டம் கலெக்டர் அவர்களுக்கு இஷ்டமான ஒரு நாளில் நடக்கும். அங்கு பேசுவதற்கு ஒன்றும் இருக்காது. கலெக்டர் வந்திருப்பார், மற்றவர்களும் வந்திருப்பார்கள். பாரஸ்ட் ஆபீஸர், மற்றுமுள்ள டிஸ்ட்ரிக்ட் ஆபீஸர்கள் பலர் வந்திருப்பார்கள். பாரஸ்ட் ஆபீஸரைப் பார்த்து என்ன செய்திருக்கிறீர்கள் என்று கலெக்டர் கேட்பார்; அவர் அவருடைய பதிலைச் சொல்வார். சில வேளை மெடிக்கல் ஆபீஸரைக் கேட்பார், அவர் "என் கையில் இப்போது ஸ்டேட்மெண்ட் ஒன்றுமில்லை, இன்னும் தயாராகவில்லை" என்று சொல்லுவார், அதற்கு உடனே கலெக்டர் "All right, next meeting" என்று சொல்லிவிடுவார். இவ்விதமாக கூட்டம் நடைபெறும். மேலும் இதில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் போர்ட் கூட்டமாவது மாதத்திற்கு ஒரு தடவை கூடிக்கொண்டிருந்தது. இப்போது அதுவுமல்லாமல் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை கூடவேண்டும் என்று சொல்வது நியாயமல்ல. அதோடு இதில் மெம்பர்களாக இருப்பதற்கு, பார்லிமெண்டு அங்கத்தினர்களையும், சட்டசபை அங்கத்தினர்களையும் நியமிக்கவேண்டும் என்று இருக்கிறது. அதோடு ஹரிஜன சமூகத்தினருக்கு இதில் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும். அதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியோ அல்லது வேறு ஒருவரோ ஹரிஜனங்களிலிருந்து இருக்கவேண்டும் என்பது என் அபிப்பிராயம். இதைப் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே இதை செலக்ட் கமிட்டிக்கு விடவில்லையாயினும் இதில்

8th September 1958] [Sri J. Matha Gowder]

சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் இந்த பிரச்னைகளை எல்லாம் பரிசீலனை செய்து பார்த்து அதற்குத் தகுந்த முடிவுகளைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : கனம் உதவி சபாநாயகர் அவர்களே . . . .

SRI D. S. AUTHIMOOLAM : On a point of order, Sir, மந்திரி சபைக்கு கூட்டுப் பொறுப்பு இருக்கிறது என்ற காரணத்தினால் எந்த மந்திரி வேண்டுமானாலும் ஒரு சட்டத்தை பிரேரேபித்துப் பேசலாம். அதனால் இந்த மசோதாவை, அதாவது டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் மசோதாவை கனம் ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்கள் பிரேரேபித்துப் பேசினார். ஆனால் இப்போது பதில் சொல்லும்போது ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்களே என்ன விஷயம். இது முதலமைச்சர் அவர்களுடைய போர்ட்போலியோவில் வரவில்லையா ? அப்படி அவருடைய போர்ட்போலியோவில் வந்தால் அவருக்கு லீடர் ஆப் தி ஹவுஸ் தானே பதில் சொல்லவேண்டும்? அவருக்கு பதில் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் பதில் சொல்லக் காரணம் என்ன ? 1-20 p.m.

DEPUTY SPEAKER : இந்த மசோதாவை லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் அமைச்சர் தான் பிரேரேபித்தார்கள். ஆகையால் அவர்கள் தான் பதில் சொல்லுவார். மேலும் இந்த மசோதாவைப் பிரசுரித்ததும் அவர்கள் தான் என்பது அந்த மசோதாவின் கீழ் அவர் பெயர் போட்டிருப்பதிலிருந்து தெரியும். மேலும் ஒரு மசோதாவை எந்த அமைச்சர் வேண்டுமானாலும் பிரேரேபிக்கலாம், முடிவில் பதில் சொல்லலாம். இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதுவும் தவிர ரூலிலே இதற்கு ப்ரொவைட் பண்ணியிருக்கிறது.

DEPUTY SPEAKER : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இன்று இந்த மாவட்ட வளர்ச்சித் திட்ட மசோதாவைக் கொண்டுவந்ததில் கனம் அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்துள்ளார்கள். இதிலே அநேகமாக ஒரே மாதிரியான சில கருத்துக்களை அங்கத்தினர்களில் சிலர் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மசோதாவில் கண்டுள்ள யோசனைகள் எல்லாம் இந்த சட்ட சபையில் சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் சமர்ப்பித்த வெள்ளை அறிக்கையில் கண்டுள்ளவைகள் தான். இந்த வெள்ளை அறிக்கையைப் பரிசீலனை செய்வதற்காக சட்டசபை ஒரு கூட்டுக் கமிட்டியை நியமித்து, நான் முன்பு குறிப்பிட்டபடியே அந்தக் கூட்டுக் கமிட்டி வெள்ளை அறிக்கையில் கண்ட யோசனைகளை ஆராய்ந்து, ஒரு சில மாறுதல்களுடன் அவைகளை ஒப்புக் கொண்டுள்ளது. இக் கூட்டுக் கமிட்டி இந்த சட்ட சபையின் அங்கத்தினர்களையும், மேல் சட்ட சபையின் அங்கத்தினர்களையும் கொண்டதாக இருப்பதால், இந்த மசோதாவை மீண்டும் ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புவதற்கு அவசியம் எதுவுமில்லை என்று நினைக்கிறேன்.

இந்தக் குழுவின் அங்கத்தினர்களுடைய பொறுப்பைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். உத்தியோகஸ்தர்களை மட்டும் கொண்டுள்ள குழுவை நியமித்தால் அது தவறாகக் கருதப்படும். உத்தியோகஸ்தர்களையும் இந்தக் குழுவில் சேர்த்து, தகுதி கொண்ட, பொறுப்பு வாய்ந்த மக்கள் பிரதிநிதிகளையும் கொண்ட, ஒரு கமிட்டியை ஏற்படுத்தினால் நல்ல முறையில் பரிசீலனை நடந்து நல்ல முறையில் சிபார்சுகளைச் செய்ய வாய்ப்பு இருக்கிறது. மக்கள் பிரதிநிதிகளுக்கும் அவர்கள் இடங்களில் என்னென்ன நன்மைகள் செய்ய வேண்டுமோ, அதற்குண்டான ஆலோசனைகளைக் கூற வாய்ப்பு இருக்கிறது என்ற கருத்துடனேயே இந்தக் குழு நியமிக்கப்படப்போகிறது.

அடுத்தபடியாக ஒவ்வொரு இடத்திலும் "டீசென்ட்ரலேஸேஷன் ஆப் பவர்ஸ்" இல்லை என்று சொல்லுகிறார்கள். இவ்விதமாக அரசாங்க உத்தியோகஸ்தர்களும், பொது மக்கள் பிரதிநிதிகளும் சேர்ந்து நடத்தினால் நல்ல பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

இந்த மாவட்ட வளர்ச்சிக் குழுவிற்கு கலெக்டரைத் தலைவராக வைப்பதில் தவறு இருப்பதாகத் தோன்றவில்லை. ஏனென்றால், அவர் மாவட்டத்திற்கே தலைவராக இருப்பதால், அந்த ஜில்லாவினுடைய நிர்வாகத்தை நடத்தும் பொறுப்பு உள்ள அவருக்கு ஆலோசனைகளைக் கொடுக்கும் வாய்ப்பு இருக்கிறது. இந்த வாய்ப்பை அங்கத்தினர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அதுவுமின்றி, இந்தக் கூட்டங்கள் சரிவர நடப்பதில்லை, ஏதோ அதிகமாகப் பேசத் தெரிந்தவர்கள் முன் வரிசையில் உட்கார்ந்து இரைந்து பேசுகிறார்கள் என்று சொல்வது வருந்தத் தக்கது. பொறுப்புடைய அங்கத்தினர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் பொறுப்பற்ற தன்மையில் நடப்பார்கள் என்று கருதுவது தவறு. எல்லோரும் தகுதி வாய்ந்தவர்கள்தான். இந்த சட்ட சபையில் உள்ள அங்கத்தினர்களும், மேல் சட்ட சபையில் உள்ள அங்கத்தினர்களும், மாவட்டத் தலைவர்களும் பொறுப்பற்ற தன்மையில் நடந்து கொள்வார்கள் என்று சொல்வது வருந்தத் தக்கது. பொறுப்புகளை உணர்ந்து நடந்தால் நிச்சயம் நாம் எதிர்பார்க்கும் நல்ல பலன்களை அடையலாம்.

அதிகாரங்களைக் கொடுக்கவில்லை என்று கூறினார்கள். ஆலோசனை கூறுவது என்று இருப்பதால் என்ன பலன் என்று சொன்னார்கள். இந்த மாதிரி அங்கத்தினர்கள் ஆலோசனை கூறினால் என்ன நன்மைகள் உண்டாகும் என்பதைப்பற்றி தலைவர் அவர்கள் வெகு அழகாக எடுத்துச் சொன்னார்கள். பொறுப்பையுடையவர்கள் நல்ல அரிய ஆலோசனைகளைக் கூற முன் வந்தால் அந்த ஆலோசனைகளை வைத்துக்கொண்டு அரசாங்கம் நல்ல முடிவுக்கு வரும். அது அரசாங்கத்திற்கு மிக்க உதவியாக இருக்கும், இந்த மாதிரி ஆலோசனைகள் கொடுக்க வேண்டியது அவர்கள் கடமை என்று நான் நினைக்கிறேன். அதுவுமல்லாமல் கூடுதலாக அதிகாரம் வேண்டும் என்று சொன்னார்கள். வேலைகளை நடத்துவதற்கு அரசாங்க அதிகாரிகள் இருக்கிறார்கள். மேற்பார்வையாக இருந்து ஆலோசனைகள் சொன்னால் அது சரிவர நடக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

இன்னும் கூட்டம் அடிக்கடி இருக்க வேண்டும், மூன்று மாதத்திற்கு ஒரு முறை என்று இருப்பது போதாது என்று அறிவித்தார்கள். ஒரு கூட்டத்தில் அந்த சமயத்திலுள்ள காரியங்களைப்பற்றி ஆலோசனை செய்து செய்த சிபாரிசுகளை சீக்கிரமாக அமுல் நடத்த முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. பொறுப்பான காரியங்களைப்பற்றி ஆலோசனை சொல்கிறார்கள். அவைகளை உடனே நிறைவேற்றுவது என்பது முடியாது. அதற்காகத்தான் மூன்று மாதங்கள் என்று வைத்திருக்கிறது. அந்த மூன்று மாதங்களில் சொல்லப்பட்ட ஆலோசனைகள் எவ்விதம் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதையெல்லாம் சரிவரப் பார்த்து மறு கூட்டத்தில் அதைப் பற்றி பேச ஒவ்வொருவருக்கும் தகுந்த வாய்ப்பு இருக்கின்றது. எவ்வாறு காரியங்கள் நடைபெறுகிறது, வேலைகள் சரிவர நடக்கிறதா என்பதை எல்லாம் நன்கு அறிந்து எடுத்துச் சொல்லலாம். ஆகவே எதையும் கவனித்து, தகுந்த முறையில் நடத்த ஆலோசனை சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

இன்னும் ஜில்லாக்களின் விஸ்தீரணம் அதிகமாக இருக்கிறது, ஆகவே அங்கத்தினர்கள் கூடுதலாக இருக்கிறார்கள், குறைவாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று சொன்னதை நான் ஆமோதிக்கிறேன். இப்போதும் அதற்காகவே பெரிய ஜில்லாக்களைப் பிரிக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது.

8th September 1958] [Srimathi Lourdhammal Simon]

அதிகாரங்கள் கூடுதலாக இருக்கவேண்டும், கேவலம் பஞ்சாயத்துக்களுக்கு உள்ள அதிகாரங்கள்கூட இல்லை என்று சொன்னார்கள். இதற்கு நான் மிகவும் வருந்துகிறேன். பஞ்சாயத்துக்களைப் பற்றிச் சொல்லும் போது ஒரு கேவலமான முறையில் பேசுவது சரியல்ல. நாட்டின் பொறுப்பை ஏற்று நடத்தும் ஸ்தாபனங்களில் பஞ்சாயத்தும் மிகவும் பொறுப்புள்ள, கௌரவமுள்ள ஒரு ஸ்தாபனமாகும். அதைப்பற்றி குறைவாகவும் 'கேவலம்' என்றும் பேசுவதை நான் முற்றிலும்ஆட்சேபிக்கிறேன். பஞ்சாயத்துக்களும் பொறுப்பு வாய்ந்தது என்பதை கனம் அங்கத்தினர்கள் மறந்துவிடக் கூடாது.

நல்லெண்ணத்தோடு இந்த மசோதா வந்ததென்றாலும், டிபார்ட்மெண்டுகளில் சிபாரிசுகள் தேங்கி விடக் கூடும் என்று கூறினார்கள். கவனிக்க வேண்டிய வேலைகள் அவ்வப்போது கவனிக்கப்பட்டு வருகின்றன இன்னும் ஜரூராக வேலைகளைச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகிறது. குறைகள் இருந்தால் அவற்றைச் சீர்படுத்த ஒவ்வொருவரும் முயற்சி செய்யவேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் தியாகராஜன் அவர்கள் இப்பொழுதாவது கற்பனை உலகத்திலிருந்து நடப்பு உலகத்திற்கு வந்ததற்கு சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். எப்போதும் கற்பனை உலகத்திலேயே இருந்து கொண்டு இங்கு என்ன நடக்கிறது என்று அறியக் கூடச் சந்தர்ப்பம் இல்லாமல் இருந்து இப்போது நடப்பு உலகத்திற்கு வந்த அவர் இனிமேலாவது என்னென்ன நடக்கவேண்டுமென்பதை ஆராய்வார் என்று நினைக்கிறேன். 1-30 p.m. ஆகவே, இந்த மசோதாவில் என்னென்ன நல்ல அம்சங்கள் இருக்கின்றனவோ அந்த சீரிய அம்சங்களை உணர்ந்து, எல்லா அங்கத்தினர்களும் ஆதரவு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த வெள்ளை அறிக்கையின் மீது நடந்த கமிட்டி கூட்டங்களில் கலந்து கொண்டு, பிரச்னைகளை நல்ல முறையில் ஆராய உதவி, அவருடைய கடமையை மேற்கொண்டுள்ளார்கள். அதன் பலனாக இந்த மசோதாவில் உள்ள நல்ல கருத்துக்களை தெளிவாகவும், விளக்கமாகவும், மற்றவர்களுக்குப் புரியும்படியாக அவர்கள் எடுத்துச் சொன்னதற்காக எனது மனமார்ந்த நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மசோதாவின் நல்ல நோக்கத்தையும், அதிலுள்ள நல்ல அம்சங்களையும் விரிவாகவும், தெளிவாகவும் நமது சபைத் தலைவர் கனம் ஸ்ரீ சுப்ரமணியம் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்பற்றி நான் மிகவும் சந்தோஷமடைகிறேன். பல அரிய விளக்கங்களை அங்கத்தினர்கள் உணரும்படிச் செய்தார்கள். சில கட்டங்களில் எளிதில் விளங்காத சில கருத்துக்கள் இருந்ததால், அவைகளுக்கு அவர் விளக்கம் கூறியதற்கு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மசோதாவை எல்லா அங்கத்தினர்களும் ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER: Is the hon. Member, Sri A. Govindasamy withdrawing his amendment?

SRI A. GOVINDASAMY: No, Sir.

DEPUTY SPEAKER: The question is—

"That the Bill be referred to a Select Committee with instructions to report on or before the 20th September 1958."

The amendment was put and lost.

[8th September 1958

DEPUTY SPEAKER : The question is—

" That the Madras District Development Councils Bill, 1958, be taken into consideration."

The motion was put and carried.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 9 a.m. tomorrow.

The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules, Orders and Notifications.

114. *Notification issued with G.O. Ms. No.* 2387, *Food and Agriculture, dated 9th July* 1958, *amending the Madras Commercial Crops Markets Rules*, 1948, *the Madras Commercial Crops Market Committees Provident Fund Rules and the Madras Commercial Crops Market Committees Financial Rules*, 1953, *framed under the Madras Commercial Crops Markets Act*, 1933. [*Laid on the table of the House under section* 18 (4) (*c*) *of the Madras Commercial Crops Markets Act*, 1933 (*Madras Act XX of* 1933.)]

115. *Notification issued with G.O. No.* 936, *Local Administration, dated* 11*th June* 1958, *appointing wholetime Executive Officer in the Kaniyur Panchayat in Coimbatore district under section* 28 (1) *of the Madras Village Panchayats Act*, 1950 (*Madras Act* X *of* 1950).

APPENDIX I.

[VIDE ANSWER TO STARRED QUESTION No. 100-BB ASKED BY SRI P. S. K. LAKSHMIPATHIRAJ (ON BEHALF OF SRI S. LAZAR) AT THE MEETING OF THE LEGISLATIVE ASSEMBLY HELD ON 8TH SEPTEMBER 1958, PAGE 316 SUPRA.]

The estimated demand and supply position of fertilisers in the State during 1958–59 is given in the following statement :—

Name of the fertiliser.	*Estimated demand for the year.*	*Total quantity likely to be available for distribution during the year including carry over stocks.*
(1)	(2)	(3)
	(ALL IN TONS)	
A. Nitrogenous Fertilisers—		
1 Ammonium Sulphate	150,000	95,960
2 Urea	9,000	22,030
3 Ammonium Sulphate Nitrate	22,000	23,070
4 Calcium Ammonium Nitrate	..	445
Total quantity of fertilisers in terms of Ammonium Sulphate.	198,850	175,964

NOTE.—Distribution of the nitrogenous fertilisers to the State Governments is made by the Government of India through the Central Fertiliser Pool.

B. Phosphatic Fertilisers—		
1 Superphosphate	46,000	52,000

NOTE.—Distribution is done by the private trade and the quantity of 52,000 tons will be supplied by the factories.

Owing to the tight foreign exchange position, the Government of India have not been able to arrange for the supply of the full requirements of fertilisers to the State during 1958–59. They have however, agreed to supply increased quantities of other fertilisers like Urea and Ammonium Sulphate Nitrate. While, therefore, there will be an appreciable shortage in the supply of Ammonium Sulphate during the year, it is expected that, on the whole, the supply of fertilisers in terms of nitrogen will not be very short of the demand during the manuring season. The Government have been keeping a close and constant watch over the stock and supply position in order to ensure that the available stocks are distributed to all parts of the State and that replenishment is arranged in centres where stocks run out. Further, to make good the shortfall in the supply of chemical fertilisers, the Government have taken steps to intensify the manufacture of compost in villages and panchayats. Already, the municipalities and major panchayats

[8th September 1958

in the State are engaged in the production of compost. Smaller panchayats have also been brought in under a new scheme. The target of production of compost during 1958–59 is 357,500 tons by the municipalities and major panchayats under the Urban Compost Scheme and 848,000 tons by the bigger panchayats and villages under the new scheme. The Government have allowed the sale of compost at Rs. 2 per ton where the cost of production exceeds that rate and they subsidize the difference. Besides, a drive for increased application of green manure has also been undertaken and a subsidy of 20 per cent is allowed in the sale of green manure seeds. During 1958–59, a target of 1,142 tons of green manure seeds for distribution has been fixed.

The Agriculture Department advises the ryots in regard to manuring of their crops and, in particular, carries on propaganda for the use of the new chemical fertilisers like Urea and Ammonium Sulphate Nitrate.

The Government have thus taken adequate steps to see that the ryots are able to get chemical fertilisers or compost for manuring their lands and they do not anticipate any great difficulty in meeting the ryots' needs during the current manuring season.

APPENDIX II.

[VIDE ANSWER TO STARRED QUESTION No. 100-EE ASKED BY SRI A. A. RASHEED AT THE MEETING OF THE LEGISLATIVE ASSEMBLY HELD ON 8TH SEPTEMBER 1958, PAGE 318 SUPRA.]

STATEMENT SHOWING THE ACTION TAKEN BY GOVERNMENT TO ENCOURAGE CATTLE AND SHEEP FARMING IN THE STATE.

The total Bovine population and sheep population in this State are 11·7 and 7·0 millions respectively. These are mostly nondescript ones and their capacity for production of milk, etc., is also low. It is therefore, imperative that these cattle and sheep should be bred with superior bulls of distinct breeds and rams to obtain better results. With this object in view, livestock farms are being maintained in this State for production and distribution of breeding bulls to grade up the local stock. As a matter of policy, Scindhi and Gir bulls and Murrah Buffalo bulls are being used to grade up the stock for better milk production and Kangayam, Umblachery and Hallikar bulls are used for increasing the working capacity of the animals. Similarly Nilgiri, Bikaner and Coimbatore variety of rams are used for more wool and Mandya, Ramnad and Mecheri or Mylambadi variety for more mutton.

There are four livestock farms at present at Hosur, Pudukottai, Orathanad and Pallathur but the last one is just at the initial stage. To produce suitable bulls in order to keep up the purity of the breeds,

8th September 1958]

Scindhi, Gir, Kangayam, Hallikar, Nmblachery and Murrah buffaloe breeds are maintained at the above farms. In addition to this distribution of bulls from Government Livestock Farms, there are other measures taken for improvement of livestock in this State as detailed below :—

With a view to encourage private individuals who maintain approved breeding bulls, a premium of Rs. 200 for breeding bulls and Rs. 220 for buffalo bulls is paid every year provided they maintain the bulls under certain conditions fixed by the department. There are about 869 such bulls in the Premium Scheme at present. Breeding bulls 164 in number suitable to localities are located in several of the Veterinary institutions in the State to cater to the needs of the local areas. Breeding bulls from Government Farms or purchased in the breeding tracts were also distributed free of cost to livestock owners who are interested in livestock improvement since 1941. The custodians will be vested with the ownership of the bull at the end of the third year provided the bull is maintained properly and it has performed not less than 180 services during that period of three years. Rams were also distributed under this scheme which was called the Male Stock Distribution Scheme. This scheme has since been discontinued from 1957–58 in view of the distribution of bulls under the supplementary extension centres, comparatively a new scheme recently introduced.

Similar to the Male Stock Distribution Scheme, there is another scheme in vogue called the District Board Contribution Scheme by which bulls will be purchased by the District Boards with financial assistance from Government and distributed to selected custodians in the districts. The ownership of the bulls will be vested with the custodians as in the case of Male Stock Distribution Scheme.

A few bulls are also maintained in the Agricultural Research Stations for breeding purposes. To accelerate livestock improvement in a quicker time and to utilise the available pedigree bulls to the best advantage, the technique of artificial insemination was introduced in this State as early as 1948 and there are at present 12 artificial insemination centres located in the urban areas in the State. Pedigreed bulls are maintained at these centres and the semen collected from them is used for impregnating the local cows. This technique is becoming popular and is gaining momentum. There are also about 13 artificial insemination centres located in the National Extension Service and Community Development areas in this State.

To effect livestock improvement in a compact area, the key village scheme formulated by the Government of India was introduced in this State during the year 1951–52. According to this scheme a compact area with a population of 5,000 cows and buffaloes of breedable age, is selected wherein all the scrub bulls are castrated and a key village artificial insemination centre is located and a few bulls are distributed so that the cows and buffaloes can be covered either by artificial insemination or natural services done by the

[8th September 1958

superior bulls. In addition to breeding, other aspects of livestock improvement such as fodder production, marketing, disease control, etc., are also attended to. On the whole there are 24 Key Village Blocks mostly situated in the breeding tract of Kangayam. A subsidy of Rs. 30 pre bull per month is also paid to the custodians to whom the bulls for natural service are distributed in the key village area. A subsidy of Rs. 10 per month per calf from the sixth month of its birth up to the age of 2½ years is also paid to calves born to bulls and through artificial insemination in the key village areas for encouraging rearing of suitable calves properly.

As this scheme has been in vogue since 1951–52 and as bulls produced under this scheme will be available in large numbers, supplementary extension centres have been established in the non-breeding tracts to utilise the bulls produced in these areas. Here also a compact area is selected for distribution of bulls and the scrub bulls are castrated by enforcement of Madras Livestock Improvement Act. A subsidy of Rs. 30 is being paid to the custodians as in the case of Key Village Scheme. There are about 643 bulls of different breeds under this scheme in the 13 supplementary extension centres established in this State.

With a view to improve the milk yield of the nondescript cattle found in the hilly and heavy rainfall areas, a scheme called Cross Breeding Scheme is being worked in the Nilgiri district with headquarters at Ootacamund. Jersey semen is obtained on three days in a week from the Southern Regional Central Artificial Insemination Centre, Bangalore, which is worked by the Government of India, by air up to Coimbatore and by road thereafter. This semen is used for insemination of the local cows. The calves born would be capable of producing more milk than their dam. The scheme is progressing well since its inception during 1955.

Sheep farming.—Sheep development work is being done mainly through the seven Sheep Demonstration Units at Coimbatore, Tiruchirappalli, Salem, Madurai, Virudhunagar, Cuddalore and Kancheepuram and through the sheep farms at Ootacamund and Chinnasalem. A new sheep farm has also been started recently in Kattupakkam in Chingleput district.

These units demonstrate the advantages of deworming and deticking of sheep and teach the professional shepherds in the State the improved methods of shearing, grading and sorting of wool and scientific methods of sheep management.

The Sheep Farm at Ootacamund has got only Nilgiri breed of sheep which bear the finest wool in the country. This farm is located in about 600 acres in the Wenlock Downs near Dunsandle. Selective breeding of Nilgiri is being done for production of improved rams. In view of the fineness of the wool of this breed, this station has been selected as one of the sub-centres for conducting cross-breeding experiments with foreign breed rams of Romney Marsh breed under the All-India Sheep and Wool Improvement Scheme.

8th September 1958]

The cross-breeding experiments are in progress. Rams from this farm have been distributed in the Nilgiri district and the adjoining district of Coimbatore for grading up the local types.

The sheep farm at Chinnasalem has just started stocking local woolly variety of sheep and a flock of Bikaner sheep is also to be put there shortly. Similarly the one sanctioned at the Kattupakkam area will have the object of improving mutton type of sheep.

A flock of Mandya sheep is maintained at Livestock Research Station, Hosur, for production of Mandya rams and there is another flock of Bikaner sheep also.

A scheme is working in Hosur taluk of Salem district by which Mandya rams produced at Livestock Research Station, Hosur, or purchased in the tract, are distributed in a compact area in exchange for local rams which will be sold in auction after castration. Fifty rams are purchased and distributed every alternate year. Intensive supervision of sheep flocks is being done by the staff and castration of scrub rams is being attended to besides deworming, deticking, etc.

Under the Second Five-Year Plan, a scheme for opening eight sheep and wool extension centres have been started during 1957–58 in Tiruchirappalli, Coimbatore, South Arcot and Salem districts. Two thousand and five hundred ewes of breedable age have been taken up in the above places and 50 Bikaner rams are proposed to be distributed on loan in each of the above centres to selected flock owners during the mating season.

Under the Second Five-Year Plan, one wool utilization centre is proposed to be established at Sulur in Coimbatore district for demonstration of making fabrics of the latest designs with wool with improved implements.

In order to improve the sheep in key village areas along with cattle improvement a scheme for sheep improvement in key village areas was introduced at Kangayam and Vellakoil. Mecheri rams will be distributed in each centre on exchange basis.

Cattle shows and sheep shows.—To make the rural public breed better type of cattle and to create a healthy competition among the livestock owners to rear cattle on scientific lines, cattle and sheep shows are held in different districts in important places. During the year 1957–58, six district cattle shows and 18 sheep shows in the districts and one State cattle show were held at Madras. The shows have inculcated enthusiasm among the livestock owners to a very great extent in the districts.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS